

பெருங்காப்பியம் பத்து

தொகுப்பு

எஸ்.பொ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2004-4-26
LIBRARY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்காப்பியம்
பத்து

UNIVERSITY OF PERADENIYA
2004-4-26
LIBRARY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PERUM KAPPIYAM PATHTHU

Compiled and Edited by

S. PONNUTURAI

அச்சு

Mithra Book Makers

LIBRARY

This Edition is for sale in India and Sri Lanka only

Published by
Dr. PON. ANURA

Mithra Publications

1/23 MUNRO STREET
EASTWOOD 2122
AUSTRALIA

375/8-10 ARCOT ROAD
CHENNAI 600 024
INDIA

39 VANNIAH STREET
BATTICALOA (EP)
SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்காப்பியம் பத்து

எஸ் பொ

இந்தப் பதிப்பு இந்தியா மற்றும் இலங்கையில்
மட்டுமே விற்பனைக்கு உரியது

அட்டை அமைப்பு
டிராஸ்கி மருது

558998

மித்ர வெளியீடு
சிட்னி - சென்னை - மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
558998

Mithra Books

Copyright © Mithra Publications 1997

All rights reserved

Apart from any fair dealing for the purpose of private study, research, criticism or review as permitted under the Copyright Act, no part may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form, or any means, electronic mechanical or photocopying, recording or otherwise without prior written permission from the author

National Library of Australia
Cataloguing in Publication data

ISBN 1 875 195 169

PERUM KAPPIYAM PATHTHU

A Collection of Speeches in Tamil

Original First Publised by
Arasu Publications, Colombo 1964
under the Auspicious of
The Eastern Book Trust
First Published in Mithra Books
5th January 1997

Cover design by M. TROTSKY MARUDU
Published by Dr. PON ANURA
Made in India by Mithra Book Makers

மித்ர வெளியீடு 17
முதலாவது பதிப்பே மித்ர நூலாக வெளிவருவது
5, ஜனவரி 1997

விலை : ரூ 55 **பக்கங்கள் : 184 + IV**

வடிவமைப்பு : இளம்பிறை ரஹ்மான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவுஸ்ரேலிய மண்ணிலே
ஈழத் தமிழர்தம்
தன்மான உணர்வுகள்
கலை-இலக்கியத் துறைகளிலே
புதிய படைப்புகள்
தோன்றச் செய்வதின் மூலம்
தக்க வைக்கப்படுதல்
வேண்டும் என்கிற தாகத்துடன்
விளம்பரம் நாடாப்
புரவலராய் வாழும்
என் இனிய நண்பன்

ஆ. தியாகேசன்

தமிழ் ஊழியத்தை
அங்கீகரித்து

இந்நூல்
சமர்ப்பணம்

UNIVERSITY OF PERADENIYA
2004-4-26
LIBRARY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரை

நமது பழந்தமிழ் இலக்கியங்கள், புதியன படைக்கும் எழுச்சிக்கும் தமிழுக்கும் வேராய் அமைந்துள்ளன. மரத்தின் வளத்துக்கும் வளர்ச்சிக்கும் வேர்கள் ஆதாரம். வேர்கள் ஆரோக்கியமாக இருந்தாற்றான் மரம் புதிது புதிதாய் வண்ண மலர்களைத் தரும். மலர்களின் வனப்பிலே மனதைப் பறிகொடுத்து, வேர்களைப் பற்றிய நினைவுகளைத் துறத்தல், மரத்தினைப் பட வைக்கும் செயலுக்குத் துணைபோதலாகும்.

புலம் பெயர்ந்த நாடுகளிலே வாழும் இலக்கிய ஆர்வலர்களுக்கு இலக்கியம் சம்பந்தமான படிப்புகளுக்கும் முயற்சிகளுக்கும் அதிக நேரத்தினை தேடி ஒதுக்குதல் பெரிய பாடு. வளர்ச்சி அடைந்த நாடுகளின் தொழிற் கலாசாரத்திற்கும், பொழுதுபோக்கும் நாகரிகத்திற்கும் ஈடு கொடுப்பதினால் இந்தப் பாடு! எனவே, நமது வேர்கள் பற்றிய பிரக்ஞை, ஆன்மீகம் சார்ந்த ஒன்றாக வளர்க்கப்படுதல் அவசியம்.

பழந்தமிழ் நூல்கள் பற்றிய அறிமுகங்கள், அவற்றின் தரமான சுருக்கங்கள், புலம் பெயர்ந்த நாடுகளிலே தமிழ்ச் சேவிப்பிலே வாழ்வோர்க்குத் தாராளமாகக் கிடைத்தல் வேண்டும். இத்துறையிலும் 'மித்ர வெளியீடு' தனது அக்கறையை காட்டியுள்ளது என்பதற்கு இந்நூல் சான்று.

ஐங்காப்பிய முறைமை வகுக்கப்பட்ட பின்னர் தமிழர் மத்தியிலே எழுந்த புதிய மதங்கள் சார்ந்து எழுந்த காப்பியங்களும் கணக்கில் எடுக்கப்பட்டுள்ளமை இதன் தனிச்சிறப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூலிலே இடம் பெற்றுள்ள சொற்பொழிவுகள் முப்பத்தி மூன்று ஆண்டுகளுக்கு முன்னர். வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்திலே எடுக்கப்பட்ட காப்பியப் பெருவிழாவின் போது நிகழ்த்தப்பட்டவை. மீன் பாடும் தேனாட்டில் மகத்தான கல்விச் சேவையாற்றும் இந்த மகா வித்தியாலயம் இந்த ஆண்டிலே பொன்விழா காண்கின்றது என் சொந்தக் கல்வித்தேட்டத்திலும் இந்த கல்வி நிறுவனத்தின் மூலம் பயன்பெற்றேன். இந்த பொன்விழாவின் நினைவாகவும் இதனை இந்த ஆண்டின் துவக்கத்தில் வெளியிடுவதில் களிபேருவகை அடைகிறோம். இரண்டு சங்கையான சங்கதிகளின் சங்கமமாக இந்நூல் வெளிவருவதினால் இந்த உவகை என்றோம்.

டாக்டர். பொன். அநுர

mithra publications

1/23, Munro Street
Eastwood 2122
AUSTRALIA
✆ (02) 868-2567

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை

தமிழில் உள்ள காப்பியங்களுள் பத்துப் பெருங்காப்பியங்களைப் பற்றி இப்படி ஒரு நூல் வெளிவந்திருப்பது தமிழுலகம் மிகுந்த மகிழ்ச்சியோடும் நன்றியோடும் வரவேற்கத் தகுந்தது. தமிழ் மரபின் பெருமையும் வலிமையும் பாதுகாக்கப்படுவது செய்யுள்களாலான நூல்களில்தான் என்றால் அது தவறாகாது. தமிழ்ப் பண்பாட்டையும் தமிழ்ச் சமுதாய வரலாற்றையும் தகுந்த முறையில் புரிந்துகொள்ள மிக நல்ல அளவிற்கு உதவுகிற கருவிகளில் காப்பியங்களுக்கு ஒரு சிறப்பிடம் உண்டு.

காப்பியப் பயிற்சி குறையக் குறையத் தமிழ் மரபிலிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய வலிமை கிடைக்காமற் போய்விடும். நாம் எளிதாகப் பெற்றுக் கொள்ள வேண்டிய பண்பாட்டு வலிமையைத் தேவையில்லாமல் இழந்தவர்களாக ஆகிவிடுவோம். அப்படி ஓர் அவல நிலை ஏற்படாதபடி நம்மைப் பாதுகாக்கும் முயற்சிகளில் இந்த நூல் வெளியீட்டுப் பணி குறிப்பிடத் தகுந்த ஒன்று. இந்த முயற்சியை மேற்கொண்டவர்களைத் தமிழுலகம் மிகுந்த நன்றி போற்றிப் பாராட்ட வேண்டும்.

தமிழ்க் காப்பியங்கள் என்ற தலைப்பில் அமைந்துள்ள முதல் கட்டுரையே பெரிதும் தகுதி வாய்ந்ததாகவும், ஆய்வுப் பாங்கு பெற்றதாகவும் விளங்குகிறது. அடுத்தடுத்து அமைந்துள்ள எல்லாக் கட்டுரைகளும் முதல் கட்டுரை உருவாக்கிய எதிர்பார்ப்பை நிறைவேற்றுவனவாகவும் போற்றத்தக்கனவாகவும் அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சிலப்பதிகாரம் 2. மணிமேகலை 3. குண்டல கேசி 4. வளையாபதி 5. சீவகசிந்தாமணி 6. கம்ப ராமாயணம் 7. பெரியபுராணம் 8. சீறாப்புராணம் 9. தேம்பாவணி 10. இரட்சணிய யாத்திரிகம் ஆகிய பத்துக் காப்பியங்களைப் பற்றியும் அறிமுக நோக்கிலும், ஆராய்ச்சி நோக்கிலும் தகுந்த அறிஞர் களைக் கொண்டு உருவாக்கப்பெற்ற கட்டுரைகளைத் தொகுத்து பதிப்பாசிரியர் நூல் வடிவில் வழங்கியுள் ளார் இந்தக் கட்டுரைகளை வழங்கிய அறிஞர் பெருமக்கள் ஒவ்வொருவரும் தகுதி வாய்ந்த புலமை யாளர்கள்.

ஒவ்வொரு கட்டுரைக்கும் தொடக்கத்திலேயே இரசிகமணி கனக செந்திநாதன் வழங்கியுள்ள அறி முகவுரை உடனே கட்டுரையைப் படித்து முடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை ஊட்டுவதாக அமைந் துள்ளது. நூலின் இறுதியில் ஆய்வுரையாளர்களைப் பற்றி வழங்கியிருக்கிற குறிப்பு பெரிதும் பயனுள்ள தாக அமைந்திருக்கிறது.

ஒவ்வொரு காப்பியத்தைப் பற்றியும் சாரமான செய்திகளும் ஆய்வுக்குரிய இன்றியமையாச் செய்தி களும் இந்த நூலில் இடம் பெற்றிருக்கின்றன என்பது இங்கே சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தது. இத்தகைய நூல்கள் இன்றைய சூழலில் வரவேற்கப்பட வேண் டும்—போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

பொற்கோ

டாக்டர் பொன். கோதண்டராமன்
துறைத் தலைவர்
தமிழிலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2004-4-26
LIBRARY.

ஆய்வுரை

'பெருங்காப்பியம் பத்து' எனும் இந்நூல், நல்ல நோக்கத்துடன், முப்பது ஆண்டுகட்குமுன், இலங்கை மட்டககளப்பில் நடந்த தொரு தமிழ் மாநாட்டில் படிக்கப்பட்ட பேருரை களின் தொகுப்பாகும். பத்துப் பாட்டு, பதிற்றுப் பத்து என்பனபோல, இந்நூலுள் இடம் பெறுவன பத்தும் பெருங்காப்பியங்கள் என்ற எண்ணத்திலேயே தொகுப்புப் பெற்றுள்ளன. நம் 'பழந்தமிழ் இலக்கி யங்கள் பற்றி அறிய வேண்டுமென்கிற அக்கறை மாணாக்கருலகில் அருகிவருகிறதென்ற' காரணத் தால், சிறந்ததொரு அறிமுக நூலாகப் படைக்க வேண்டுமென்றெழுந்த ஆர்வமும் முயற்சியும் புலனா கின்றன. 'குழலினிது யாழினிது என்ப யாழ்ப் பாணத்து இனிய தமிழ் நடையும், சொல்லாட்சியும் அறியாதார் என உணர்ந்து மகிழுமாறு, பத்துத் தமிழ்ப் பேரறிஞர்கள் பங்கேற்று, இவ்வாய்வுரை களை வழங்கியுள்ளனர். தமிழ்நலஞ்சான்ற அவர்தம் புலமை வீறு, பல்வேறிடங்களிற் படிந்துகிடந்து, மகிழ்ச்சி தருகின்றது.

'இரட்சணிய யாத்திரிகம்' தந்த எஸ்.ஏ. கிருஷ்ண பிள்ளை மறந்தும் புறந்தொழா வைணவராக இருந்து, கிறித்தவ மதத்திற்கு மாறிய சூழலும் அன்னாரது தமிழ்ப்புலமை ஆழமும் நன்கு விளக்கப் படுகின்றன. இரட்சணிய யாத்திரிகம் என்ற காப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்தின் பெயர்க் காரணம், தோற்றம், காப்பியப் பாங்கு ஆகியவற்றை பேராசிரியர் மதியாபரணம் திட்பநுட்பத்துடன் செறிவாக விளக்கியுள்ளார். 'தேம்பாவணி'யை அறிமுகம் செய்யப் புகுந்த மகா வித்துவான் நடராசா, வீரமாமுனிவரின் தமிழ்ப் புலமை, தமிழுக்குச் சேர்த்த புதிய பணிகள் ஆகிய வற்றை விவரித்து, அப் பெருந்தகைவாணர் இயற்றி யருளிய திருக்காவலூர்க் கலம்பகத்தின் இலக்கிய நயத்தில் திளைக்கின்றார். இக் காப்பியக் கதையை யும் இதன்கண் பொதிந்து கிடக்கும் சொன்னயம் பொருணயம் அணிநயம் முதலியவற்றையும் முறையே எடுத்தோதி, வீரமாமுனிவரை நாம் பத்திமை கொண்டு வணங்கச் செய்துவிடுகின்றார்.

பேராசிரியர் அப்துல் காதிரின் 'சீறாப் புராண' ஆய்வுரை, சிறந்ததொரு 'தெளிவுரை' என்றே கூற வேண்டும். 'சீறா' என்பது சரிதை எனப் பொருள் படும் எனக் கூறி, நபிகள் நாயகத்தின் வரலாற்றைக் காப்பியமாகப் படைக்கும் இப் பெருநூல், ஒரு 'பெருங்காப்பியமே' எனத் திறம்பட நிறுவுகின்றார். நபிகளார் கதீசாப் பிராட்டியை முதன்முதல் சந்திப்ப தைப் பாடவந்த உமறுப்புலவர், எங்ஙனம் தமிழ் மரபும் மார்க்க மரபும் வழுவாமல், இரண்டிற்கும் பொருந்த அம் முதற்காட்சியைப் படைத்துள்ளார் என விளக்குமிடம் சாலச் சிறப்புடையதாகும்.

''பிறன் மனை நயக்கும் பேதைமையைச் சாடு கின்றது இராமாயணம்; பொறுமையின் சிறப் பைப் போற்றுகின்றது பாரதம்; வாய்மையின் வெற்றியைப் பறை சாற்றுகின்றது அரிச்சந்திர புராணம்; பத்தியின் மேன்மையைப் பாராட்டு கின்றது பெரிய புராணம் என்றால், சீறாப் புராணம் தியாகத்தின் கீர்த்தியைத் திசையெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் முழக்குகின்றது எனக் கூறுவது மிகை யன்று,'' என்று அவர் கூறுவது, குறிப்பிடத்தக்க கருத்தாகும்.

திருமதி தங்கம்மா அவர்களின் 'பெரிய புராண'ப் பேருரை, சைவ உலகிடைத் திளைத்து மகிழும் பெண்மணி அவரென்பதை உறுதிப்படுத்துகிறது. பெரிய புராணம் சைவத் தமிழுலகின் வரலாறு, தமி ழின் இனிமையையும் சைவத்தின் பெருமையையும் எடுத்து விளக்குவது என்ற இவர்தம் கருத்துகள் போற்றுதற்குரியன. சேக்கிழார் பெருமாள் இயற்கைப் புனைவுகளைக்கூடச் 'சமய நோக்குப் புனைவுகளாகப்' படைத்துள்ளமையை இவர் நன்கு எடுத்துக்காட்டுகிறார். காப்பியத் தலைவர் சுந்தரரே எனவும் இஃதொரு நிறைவான பெருங்காப்பியமே எனவும் நிலைநாட்டுகின்றார். சேக்கிழார் வாக்கில் சித்தாந்தக் கருத்துகள் இழையூடு பாய்ந்து நிழ லாடிச் செல்வதை நன்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

பண்டித க. சச்சிதானந்தன் அவர்கள் கம்பன் காப்பியத்தில் மிகவும் ஈடுபட்டு எழுதியுள்ளார். இராமன் பாத்திரப் படைப்பை நன்கு விளக்குகின் றார். தாடகை வதத்தின்போது 'பெருந்தகை' என்றும், இராவண வதத்தின்போது 'வள்ளல்' என்றும் இராமன் சுட்டப்படுமிடங்களைச் சுட்டிக் காட்டி, ஒப்பாய்வு செய்திருப்பது, சுவையாக வுளது.

'சீவக சிந்தாமணி' தமிழ் இலக்கிய வளர்ச்சி வர லாற்றில் ஒரு திருப்புமுனை என்பதை, பேராசான் சு. வேலுப்பிள்ளையின் உரையாலறியலாம். அது மண நூல்போல் தோற்றினும் 'சமண' நூலேயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகியலில் மிகத் தோய்ந்துவிட்ட ஒருவன், எதிர் பாராது, இன்ப முதிர்ச்சியில் வெறுப்புத் தோன்றி, ஒரு சிறு நிகழ்வாலும் 'ஞானம்' பெறுவானென்பதை அப் பெருங்காப்பியம் சுட்டிக் காட்டுகிறது. இப் படைப்புக் கலைச் செல்வர், சீவகன் உண்மையிலேயே எட்டுப் பெண்களை மணந்தான் என்ற கதையை ஒப்பவில்லை. ''இதனினும் பார்க்கச் சீவகன் ஆண்களில் சிறப்புடையோனென்று போற்றுதற்குரிய நற் பண்புகள் பல கொண்டிருந்தான் என்பதைக் காட்டுவதற்காக, அக் குணங்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு மங்கையை மணந்த நிகழ்ச்சியின் மூலங் காட்டினார் என்று கொள்ளலே சாலச் சிறப்புடைத்து,'' எனக் கூறி, அதனை இவர் விளக்கும்முறை திட்ப நுட்பமுடையதாகும் சீவகசிந்தாமணியில் வரும் தொடர்களாலும் இலம்பங்களாலும் நாம் இதனை மேலும் நிறுவுதல் கூடும்.

பேராசிரியர் முனைவர் ச. தனஞ்சயராசசிங்கம் முழுமையாகக் கிடைக்கப் பெறாதனவாகிய பௌத்தக் காப்பியம் குண்டலகேசியையும் சமணக் காப்பியம் வளையாபதியையும் நடுநிலையுடன் ஆராய்ந்துள்ளார். மன்னர்களையே காப்பியத் தலைவர்களாகப் படைக்கும மரபு மாறி, மன்னர் பின்னோராகிய வணிகர்களைக் காப்பியத் தலைமை மாந்தர்களாகப் படைக்கும் மரபு இடைக் காலத்தே தோன்றியதை நன்கு விளக்குகின்றார். இதற்கான இங்கிலாந்துப் பின்னணியையும் இவர் ஒப்பிட்டுக் காட்டுகிறார். வணிகக் குழுக்கள் 'நகரம்' என அழைக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி, அவர்தம் பெருஞ்சிறப்புக்களே இவ்வாறு காப்பியத்தில் இடம் பெறக் காரணமாயின என விளக்குகிறார். 'குண்டலகேசி' என்பது தருக்க நூலைக் குறிக்கவந்தபெயரென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் விளக்குவது புதுமையானது. குண்டலகேசி— சுருண்ட கூந்தலையுடையவள் என்ற பொருள் பௌத்தத் துறவிக்குப் பொருந்தாது; பௌத்தத் துறவில் பெண்ணின் கேசம் களையப்படுமென இவர் விவாதிக்கின்றார். "கேசி என்ற வீற்றுடன் வாத நூல்கள் பலவுண்டு என்பதைக் 'குண்டல நீல பிங்கல அஞ்சன கால தரிசன தத்துவ கேசிகள்' என்னும் யாப்பருங்கல விருத்தியுரையினால் அறிகிறோம்" என்று இவர் கூறுவதும் 'குண்டலம்' என்ற பெயரடைக்குச் 'சுருண்டு சிக்கலான' வென்ற பொருளைக் கொள்ளுதலே பொருத்தமென விளக்குவதும் எண்ணிப் பார்க்கத் தக்க செய்திகளாகும்.

சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டையும் ஆராயப் புகுந்தவர்கள் கூறியுள்ள கருத்துக்கள் அவர் தம் புலமை நலத்திற்குப் பொருந்துவனவாய் இல்லை.

கானல்வரியில், முதலிற் பாடிய கோவலன்தான் உட்குறிப்பு வைத்துப் பாடிவிட்டான். காவிரிப் பெண், தன் கணவனாகிய சோழன் கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாளெனவும் அதுவே 'மங்கை மாதர் பெருங்கற்பு' எனத் தான் அறிந்ததாகவும் பாடினான். இதுவா கானல் வரி? தன் புறத்தொழுக்கத்தைத் தடுக்காமல், கண்ணகிபோல், பொறுமை கொண்டு, தான் மேன்மேலும் வேறு இடங்களுக்குச் சென்றாலும் 'நீ பொறுமையாய்க் கற்புடன் இரு' என்று போதிப்பது போலவும் பொறுக்காவிட்டால் கற்பற்றவளாவாய் எனப் பழிப்பதுபோலவும் பாடற் போக்கு அமையவில்லையா?

இதைக் கேட்ட மாதவி என்ன 'பதில்' தந்தாள் இதற்கு என்பதை, அவளின் கானல்வரிப் பாடற் கருத்துக்களை வைத்தல்லவா முடிவு செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்? எப்பொழுதும் குற்றவாளிகள் தம் குற்றத்தைப் பிறர் மீதே சுமத்த முனைவர். ''கானல்வரி யான்பாடத் தான் ஒன்றின்மேல் மனம் வைத்து, மாயப்பொய் பலகூட்டும் மாயத்தாள்'' என அவன் கூறுவது, அவனுடைய நெஞ்ச வெளிப்பாடு. கோவலன், 'மலயமாருதம்போல்' கண்டபடி அலைவதை முன்னரே இளங்கோவடிகள் சுட்டிக் கூறியுள்ளார்.

'பூமலி கானத்துப் புதுமணம் புக்குப்
புகையும் சாந்தும் புலராது சிறந்து
நகையாடு ஆயத்து நன்மொழி திளைத்துக்
குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு
திரிதரு மரபிற் கோவலன்போல
இளிவாய் வண்டினொடு இன்னிள வேனிலொடு
மலய மாருதம் திரிதரு மறுகில்'

(இந்திரவிழவூரெடுத்த
காதை : 196—203)

'உவமை உயர்ந்ததன் மேற்று' என்பர். கோவலன் தெருத் தெருவாய், பாணரோடும் பரத்தரோடும் வேளைக்கு ஒருத்தியை இழுத்துக்கொண்டு அலைவது போல, மலயத் தென்றல் மறுகில் பூக்கள்தோறும் படிந்து திரிந்தது என உவமை கூறுமளவு, அவனது கூடாவொழுக்கம் இருந்துளது. அவன் இப்போது 'மங்கை மாதர் பெருங்கற்புப்' பற்றிப் பாடுகிறான்.

இதைக் கேட்ட மாதவி மனம் வருந்தினாள். 'இவன் ஆற்றுவரி, கானல்வரி எதுவும் பாடவில்லை; இவனது பாடலில் மன்னும் ஓர்குறிப்பு உளது; இவன் தன்னிலை மயங்கினான்' என எண்ணினாள். எனவே, கண்ணகிபோல், மௌனம் சாதிக்க நினைக்காமல், விடை கூற முனைந்தாள். அஃதொன்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் செய்தது. அது குற்றமன்று. இந்த இடத்தில் தான் அவள் பெண்ணுரிமையை நிலைநாட்டினாள். தானும் வெறுமனே கானல்வரி பாடாமல், அதில் 'குறிப்பு' வைத்துப் பாடினாள். என்ன 'குறிப்பு' அது?

பெண் என்ன செய்தாள்? காவிரி சீராக ஓடிச் செழிப்பை வளர்ப்பதன் காரணம், தன் கணவனாகிய சோழனின் 'செங்கோல்' - நேர்மை - நியாயம் வளையக் கூடாது என்பதற்கேயாம். தன் கணவனின் வீரத்தைக் கண்டு மகிழ்ந்தே, காவிரிப் பெண் தன்னடை நடக்கின்றாள் சோழனாகிய கணவனின் அருளால், காவிரிப் பெண் தாயாக மாறிச் சோழ நாட்டை ஊழிதோறூழி வாழப் பாலூட்டி வளர்க்கும் உதவியை என்றும் கைவிடாமற் செய்கின்றாள்!''

முதலில் பாடிய இவற்றிலுள்ள குறிப்பு, "நீ நேர்மையுடன் அறமும் மறமும் திறம்பாது இருக்க வேண்டுமென்றே, நாங்கள் துணையாக இருக்கிறோம்." என்று மாதவி சொல்லாமற் சொல்வதாகும். அது மட்டுமா? "உனக்குக் குழந்தை பெற்றுத் தாயாகி, ஊழியளவும் காக்கும் உற்ற துணையாக இருக்கும் எம்மிடம் நீ, அச் சோழன்போல, அருள் காட்ட வேண்டாமா?" என்ற கேள்வியையும் எத்துணை நாகரிகமாக மாதவி எழுப்புகிறாள்!

"வாழி அவன்தன் வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி
ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாய் வாழி காவேரி!"

என்று, தன்னைக் காவிரியாகக் கொண்டு, அவள் உட்குறிப்புடன் பாடுவதைப் பொருளுணர்ந்து படிப் பார்க்கு, நெஞ்சம் நெக்குருகுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மட்டுமன்று. அவள் தொடர்ந்து,

''அம்மென் இணர அரும்புகாள்! அன்னங்காள்!
நம்மை மறந்தாரை நாம்மறக்க மாட்டேமால்!''

என்று புலம்புவன உங்கள் 'நற்செவியில் கேட்க லையோ?' மாதவியின் புலம்பலை மாற்றியுணர் வதும், அவள்மேற் பழிபோடுவதும் கோவலன் செய லாகலாம். குற்றவாளியே சாட்சியாக முடியாது. மாதவி பாடியவை தெளிவாக உள்ளன. அவற்றைப் பிறழவுணர்ந்தது, ஏற்கெனவே 'குற்றம் செய்த மன முடைய கோவலனுக்கு'த் தீவினையாய் ஆனது. 'தான் ஒன்றின்மேல் மனம் வைத்து' மாதவி பாடி னாள் எனக் கோவலன் கூறுவதுகூட, கட்டுரை யாளர் கூறியிருப்பதுபோல, 'தானும் வேறோர் ஆட வன்மேல் காதல் கொண்டு பாடியதாகக்' கருதியன்று. ''நான் கானல்வரிதான் பாடினேன். இவளோ என் நேர்மையை, ஒழுக்கத்தை, தந்தையாய் நடக்க வேண் டிய தகைமையை எனக்கு நினைப்பூட்டி பாடுவதா?'' என்ற ஆத்திரத்தையே, கோவலன் 'தான் ஒன்றில் மனம்வைத்து' என்றுகூறுகிறான். அது. 'ஒருவன்மீது' அன்று. அவன் 'மாயத்தாள், சலதி, ஆடன்மகள்', என்று ஏதேதோ வசை பாடுகின்றான் கடைசியாய்த் 'தன்தீது இலள்; என்தீது' என்றும் வாக்குமூலம் கொடுப்பான்!

மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார், சிலம்பு, மேகலையில் இடம்பெறும் ஒரே மாதிரியான தொடர் களைக் காட்டி, இவை 'இரட்டைக் காப்பியங்களே' என்றார். இங்கு அதே தொடர்கள் காட்டப்பட்டு, ஒருவரைப் பின்பற்றி ஒருவர் எழுதியவை எனவும் இவை இருவேறு காலத்தன எனவும் கூறப்படுகிறது. இது மேலும் ஆராய்ச்சிக்குரியதென்றே கருதுகின் றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிலப்பதிகாரமும் மணிமேகலையும் பெருங்காப்பியங்கள் அல்ல' என்ற கருத்தும் வாதமும், ஆராய்ச்சியும் சிந்தனையும் மிகமுன்னேறிய இன்றையச் சூழ்நிலையில் நகையாடத் தக்கனவாயுள்ளன.

பொதுவாக இந்நூலில், தண்டியலங்காரத்தில் வரும் 'பெருங்காப்பிய இலக்கணமே' அடிப்படை அளவுகோலாய் வைத்துப் பேசப்படுகிறது.

'Epic' எனப்படும் காப்பிய இலக்கணம், மேனாட்டர் பார்வையில் வேறுபடும். 'தமிழ்க் காப்பிய வளர்ச்சி' என்பது, பரிணாமம் கூர்தலற முறையில் இங்கேயே உருவாவது.

'தண்டி' என்பவர் காஞ்சிபுரத்தில் இருந்து, தமது 'காவியா தர்சத்தை' எழுதினார் என்பது வரலாறு. வடமொழித் தண்டி எத்தனை பேருக்குத் தெரியும்? முன்னதாகப் பாமகர் எழுதிய காவியா அலங்காரம், வடமொழியில் தண்டி எழுதிய காவியா தர்சம், தமிழிலுள்ள தண்டியலங்காரம் மூன்றையும் ஒப்பிட்டுப் படிக்க வேண்டும்

'தமிழ்த் தண்டியில், சில தமிழ் மரபுகளும் கலந்துள' எனச் சிலர் கூறுவதன் வன்மை மென்மைகளை ஆராய வேண்டும்

இரண்டாவதாக, 'அறம் பொருள் இன்பம் வீடு' என்ற நான்கும் வேண்டுமெனப் பிதற்றுவது பொருந்துமா?

'வீடு' என்பது என்ன? யார் 'வீடு' பற்றி எழுதியுள்ளார்கள்? திருவள்ளுவரின் 'வீடு' பற்றிய கருத்து யாது? இந்த நூலிலேயே, சிறாப்புராண ஆய்வாளர் கூறுவனவற்றைச் சற்று உற்று நோக்கலாமே?

'கண்ணகி' தன்னிகரில்லாத் தலைவி இல்லையா? உங்களுக்குத் 'தலைவன்' தான் வேண்டுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரம் தமிழ்வழி வந்த காப்பியமல்லவா? தொல்காப்பியம், நமது வாய்மொழி மரபு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவற்றையும் சங்க இலக்கிய அடிப்படைகளையும் வைத்து, நாம் நமக்குரிய 'காப்பியக் கொள்கையை' வகுக்காமல், வகுக்கத் திறனில்லாமல், யாரோ - எதற்கோ - எங்கோ சொல்லி வைத்ததை வைத்து அளந்து, மனத் தளர்ச்சி அடைவது தகுமா?

வரலாற்று அடுக்குகளில் மேலே உள்ளதுதான் தெரியும். கீழே உள்ளவை, அகழ்ந்தறியப்பட வேண்டும். தில்லிக்கு இன்று சென்றால், எல்லாம் மொகலாயர் தம் நினைவுச் சின்னங்களாகவே காணப்படும். முன்பிருந்த இந்துப் பேரரசுகளே இல்லை என முடிவு கட்டலாமா?

வடமொழியால் ஏற்பட்ட விளைவுகள் பல. பல ஊர்கள், தெய்வப் பெயர்கள் வடமொழி மயமாக்கப் பட்டன. பல தமிழ் நூல்களுக்கு வடமொழி மூலம் கற்பிக்கப்பட்டன. மதுரையில் நடந்ததாக வழங்கிய புராணக் கதைகள் 'ஆலாஸ்சிய மகாத்மியம்' என்ற வட நூலிலிருந்து பெறப்பட்டதாகக் கூறுவது எவ்வளவு பேதைமை?

வடமொழிப் பெயர்ப்படுத்துதல், வடமொழி மூலப்படுத்துதல், வடமொழி வண்ணப்படுத்துதல் எனச் சொல்லில், பெயரில், நூல்களில், கலைகளில், பண்பாட்டில் எல்லாம் 'வடமொழி மயமாக்கும்' ஒரு முயற்சி, இடைக்காலத்தே சில நூற்றாண்டுகளாக நடந்துள்ளன. இதற்கான, நூற்றுக்கணக்கான சான்றாதாரங்கள் உள. இதைவிடுத்து, சிறிது வடமொழி கற்றதற்காக, நம் தமிழ்ப் பேரறிஞர்கள், 'தமிழில் என்ன இருக்கிறது?' என்பது போன்ற பாவனை தொனிக்க எழுதுவன இனியேனும் தவிர்க்

கப்பட வேண்டும். இவர்தம் நுண்மாண் நுழைபுலத்தால், தமிழின் சீர்மைகள் மீட்டுருவாக்கம் செய்யப்பட, அனைவரும் பாடுபட வேண்டும். இவை வடமொழி வெறுப்பைக் காட்டுவனவாகக் கோடலும் தவறே. வடமொழி மிக ஓங்கிய தனிச் சீர்மையுடையது. அது தமிழை, தமிழ் இலக்கியத்தைப் பாதித்தது என்று கூறுவதன்மூலம் அதற்கு மேன்மை தேட வேண்டுமென்ற அவசியமும் இல்லை.

சமச்சீர்மை காணல், உண்மையறிதல், நேர்கொண்ட பார்வையுடன் ஆராய்தல், நடுவுநிலைமை பேணுதல் முதலியன நிலைக்க வேண்டுமேல், காழ்ப்பும்—வெறுப்புமின்றி நம் ஆய்வுகள் தேர்ந்த தமிழ்ப்புலமையுடன் செயற்பட வேண்டும்.

இந்நூல் இளைஞர்கட்கு, நம் தமிழ்ப் பெருங் காப்பியங்களை அறிமுகம் செய்து, மேன்மேலும் அவற்றைக் கற்கத் தூண்டும்; தூண்டவேண்டுமென விழைகின்றேன்.

—*தமிழண்ணல்*

டாக்டர் இராம. பெரியகருப்பன்
முன்னாள் தலைவர்
தமிழியல் துறை
இந்திய மொழிப்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி

வித்துவான் க. வேந்தனார், கலாநிதி க. செ. நடராஜா, கலாநிதி தனஞ்சய ராசசிங்கம், சு.வே., பண்டிதர் க. சச்சிதானந்தன், ஜனாப் ஜே.எம்.எம். அப்துல்காதிர், மகாவித்துவான் F. X. C. நடராசா, திரு. கே. ஈ. மதியாபரணம், பண்டிதர் தங்கம்மா அப்பாக்குட்டி ஆகிய அனைவரும் என் இலக்கிய இனியர்.

கோப்புரை நிகழ்ந்த காப்பியப் பெருவிழாவைச் சிறப்பாக நடத்த ஊக்குவித்தவர், வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்துக்குப் புகழ் தேடித் தந்த அதிபர் இராஜதுரை.

தொகுப்புப் பணிகளிலும், அறிஞர்களை அறிமுகப்படுத்துவதிலும் எனக்கு மகா ஒத்தாசைகள் செய்தவர் இரசிகமணி கனக செந்திநாதன்.

இந்த புதியப் பதிப்பினைச் சிறப்புடன் வெளியிட வேண்டுமென்று வற்புறுத்திச் சகல உதவிகளும் செய்தவர், இடக்கை அறியாத கமுக்கத்துடன் அவுஸ்ரேலிய மண்ணிலே தமிழ் தழைக்க உதவும் புரவலராக வாழும் இனிய நண்பன் தியாகேசன் அவர்கள்.

மித்ர வெளியீடுகளின் ஆஸ்தான ஓவியர் போன்று எப்பொழுதும் நம்முடன் வாழும் ஓவியர் டிராஸ்கி மருது இதன் அட்டையையும், முகப்புச் சித்திரங்களையும் அமைத்து உதவியுள்ளார்.

பேராசிரியர் பொற்கோ அணிந்துரையும், பேராசிரியர் தமிழண்ணல் ஆய்வுரையும் வழங்கி இத் தொகுதியைச் சிறப்பித்துள்ளார்கள். முப்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நிலவிய இலங்கைப் பல்கலைக்கழக எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதாகவே பெருங் காப்பியம் பற்றிய கருத்துவம் இங்கு ஆளப்பட்டுள்ளது. இன்றைய ஆய்வு வெளிச்சங்களைச் சுட்டிக்காட்டி, இத் தொகுதியை தமிழண்ணல் up-date செய்துள்ளார்.

அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி.

எஸ்.பொ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2004-4-26
LIBRARY.

தமிழ்க் காப்பியங்கள்



எஸ். பொன்னுத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியதிற்கு அப்பாலான துறைகளிலும் எஸ் பொ அவர்கள் அக்கறைகள் பதித்துள்ளார். தலைமைத் தமிழ் ஆசானாகவும், தலைமை வரலாற்று ஆசானாகவும், கல்லூரி அதிபராகவும், சேவைக் கால ஆசிரியர் பயிற்சி ஆலோசகராகவும், சரித்திரப் பாடநூற் குழு முதல் தமிழ உறுப்பினராகவும், மேனிலைப் பாடசாலைகளில் தமிழ் கற்றலுக்கான பாடநூற் குழு உபதலைவராகவும், பாட விதானக் குழு உறுப்பினராகவும் கல்விப் பணியாற்றியுள்ளார். கல்விப் பொது தரதாரப் பத்திரப் பரீட்சைகளில் சரித்திரம், சமூகவியல் ஆகிய பாடங்களிலே பிரதான பரீட்சகராகவும் கடமையாற்றியுள்ளார். இலங்கைக் கலைக் கழக நாடகக் குழுச் செயலாளராகவும், அரச திரைப் படக் கூட்டுத்தாபனத்தின் பிரதி மதிப் பீட்டுக் குழுத் தலைவராகவும், சேவை செய்து இளைப்பாறி, நைஜீரியாவுக்கு ஆங்கில ஆசானாய் சென்றார். அங்கு எட்டாண்டு சேவைக் காலத்தில், ஆறு ஆண்டுகள் ஆசியர் பயிற்சிக் கலாசாலையின் ஆங்கிலத் துறைத் தலைவராகப் பணியாற்றினார்.

பழந்தமிழ் இலக்கியத்தில் அவருக்கு உள்ள ஆழ்ந்த ஈடுபாட்டினை இத் தொகுப்புப் பணி நிறுவும்.

- இளம்பிறை எம்.ஏ. ரஹ்மான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் இயற்றப்படுதலும், பயிலப்படுதலும் பயன் குறித்தாம். 'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே' என இப்பயனை விளக்கினர் 'அகத்திணைக்கண் இன்பமும், புறத் திணைக்கண் ஒழிந்த மூன்று பொருளும் உணர்த்துப' ரென்பர். நால்வகைப் பயனையுந் துய்க்க, ஒருசேரத் திரட்டித் தருவது காப்பியமாகும். அத்தகைய காப் பியங்களைப் பற்றி, அவற்றின் சிறப்பியல்புகளைப் பற்றிப் பேச அறிஞர்கள் பலர் இங்கு குழுமியிருக் கிறார்கள். ஐம்பெருங் காப்பியங்களுடன், பின்னர் தென்புலம் புகுந்த மதங்களின் சார்பாக எழுந்த புதிய காப்பியங்கள் சிலவற்றைப் பற்றியும் அறிஞர்கள் பேசவிருக்கிறார்கள். 'ஐம்பெருங் காப்பியங்களிலே சேர்க்கப்பட்டிருக்கும் காப்பியங்களுள், ஒன்று தவிர்ந்த ஏனையன பெருங் காப்பியத்தின இலக் கணத்தின்பாற் படாதனவாயிருக்கும் பொழுது, சமயங்கள் சார்ந்து எழுந்த புதிய காப்பியங்களையும் பெருங் காப்பிய வரிசையிற் சேர்க்கலாமா' எனச் சிலர் கடாவுதல் சாலும். நன்னூலுக்கு மயிலைநாதர் இயற்றிய உரையிலேதான் முதன்முதலாக 'ஐம் பெருங் காப்பியம்' என்ற சொற்றொடர் காணப்படு கின்றது. 'பஞ்ச காப்பியம்' என்னும் சொற்றொடர் 'தமிழ்த் தூது' என்ற பிரபந்தத்திற் காணப்படு கின்றது. இத்தொகுப்பு நடைபெற்ற பின்னர் தோன்றிய காப்பியங்கள் பெருங்காப்பிய வரிசையிற் சேரமாட்டாவா? பெருங்காப்பிய வரிசையில் எண் ணப்படத்தக்க காப்பியங்களை இயற்றவல்ல புலவர் பெருமக்கள் பிற்காலத்திலே தோன்றவில்லையா?

558998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்குப் பதில் அளிக்கும் முகமாக, தாம் எடுத்துக்கொண்ட காப்பியம் எத்தகைய சிறப்புகளுடையதாகத் திகழ்கின்றது; அச்சிறப்புகள் எவ்வாறு அக்காப்பியத்திற்குப் பெருங்காப்பிய வரிசையில் தக்கதோர் இடந்தேடிக் கொடுத்துள்ளன என்பனவற்றை நிறுவுதல் இங்கு குழுமியுள்ள அறிஞர்களுடைய கடமையாகும். அவர்களுடைய சொற்பொழிவுகளுக்கு முன்னுரையாக, தமிழ்க் காப்பியத்திற்கான இயல்புகள் குறித்துச் சிலவற்றைச் சொல்லவே ஈண்டு விழைந்தோம்.

'காப்பியம்' என்னுஞ் சொல்லை, காப்பு - இயம் எனப் பிரித்து அதற்குத் தமிழ் அர்த்தம் ஏற்றுவோரும் நம் மத்தியில் உளர். தமிழுக்கு ஏற்றங் கொடுக்கவல்ல எத்தனையோ பெருமைகள் இருக்கத் தக்கனவாக, இத்தகைய போலியான சொல்லாராய்ச்சியில் ஈடுபடுதல் தகாது என்பது காலஞ்சென்ற தமிழப் பேராசிரியர் ஒருவரின் கருத்தாகும். 'கவி - கவிதல் (பல பொருளும் ஒரு வழி) திரண்டிருத்தல் எனத் தொழிற் பெயராய், அது பின் தொழிலாகு பெயராய் எல்லாப் பொருளுந் தன்னிடத்தே திரண்டிருக்கப்பெற்ற புலவனைக் குறித்தது; அது செய்யப்படு பொருளுணர்த்தும் 'அம்' விகுதி பெற்றுக் கவியாற் செய்யப்பட்டது என்னும் பொருளுடைய 'காவியம்' என்றாயிற்று என இலக்கணங் கூறித் தமிழ்ப் பெயராகவே காவியம் என்பதைக் கொள்ளுதல் சாலுமா? கவியாற் செய்யப்பட்ட எல்லாம் காவியமாகுமெனப் பரந்த அளவிற் பொருள் கொள்ளுவோமாயின், காப்பியத்திற்கான இலக்கணத்தைக் குறிப்பாகச் சொல்லுதல் இயலாததாகி விடும். 'ஏன் இயலாது? தொல்காப்பியத்தில் காப்பிய இலக்கணம் சொல்லப் படவில்லையா?' என மறுத்துரைக்கும் கட்சியுமுண்டு. அவர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியா னடிநிமிர்ந் தொழுகினுந்
தோலென மொழிவர் தொன்மொழிப் புலவர்

எனத் தொல்காப்பியச் செய்யுள் இயலில் இடம் பெறும் நூற்பாவை ஆதாரமாகக் கொள்ளுவார்கள். இதின் கண்ணுள்ள 'இழுமென் மொழியான் விழுமியது நுவலல்' என்ற தொடரில், மெல் என்ற சொல்லான் அறம் பொருள் இன்பம் வீடென்னும் விழுப்பொருள் பயப்பச் செய்வன, எனப்பேராசிரியர் உரை கூறியுள்ளார். எனவே, புலவனுக்கு அதிக கட்டுப்பாடுகள் விதிக்காது, காப்பியம் யாத்துத் தருவதற்கு இவ்வாறு ஆற்றுப்படுத்தியமை திருப்தியான இலக்கணமாகுமென்பது அவர்களுடைய கருத்தாகும். 'காப்பிய வாசனை கலந்தவை சொல்லி' என்று பெருங்கதையிலும், 'கருவ தங்கொன் றுண்டோ காப்பியக கவிகள் காம' எனச் சீவக சிந்தாமணியிலும், 'நாடகக் காப்பிய நன்னூல் நுனிப்போர்' என மணிமேகலையிலும் 'காப்பியம்' என்னும் சொல் பயிலப்பட்டமையைச் சுட்டிக்காட்டி, 'முந்து நூல்களில்... சொற்றொடர் நிலை, பொருட்டொடர் நிலை யென்னும் தொடர் நிலைச் செய்யுட்கும் காப்பியமென்று பெயர் கூறுதலும் ஆசிரியர் கருத்தெனவுணர்க' என அடியார்க்கு நல்லார் உரைப்பாயிரப் பகுதியிற் குறித்துள்ளமை இககட்சியை வலுப்படுத்துகின்றது.

கவியாற் செய்யப்பட்டன எல்லாம் காப்பியங்களாகிவிடமாட்டா என்கிற உண்மையை, 'கவியாற் பாடப்பட்டனவெல்லாம் காப்பியமன்றோ? பொருட்டொடர் நிலையைக் காவியமென்ற தென்னை எனின், சேற்றுள் தோன்றுவதெல்லாம் பங்கயமென்ற பெயரைப் பெறுமெனினும் அப்பெயர் தாமரை

யொன்றற்கே யுரியதாம்' எனத் தண்டியலங்கார உரையாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார்.

தண்டியலங்காரத்திலேதான் பெருங் காப்பியத் திற்கான இலக்கணங் கூறப்பட்டுள்ளது. தண்டியலங் காரம் வடமொழி இலக்கண நூலை முதனூலாகக் கொண்டு இயற்றப்பட்டது. எனவே, வடமொழி இலக்கிய - இலக்கணக் கருத்துகள் அதன்கண் விரவி யிருத்தல் இயல்பானதாகும்.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத்
துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி
இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா
ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே

என நாம் தமிழின் தொன்மை குறித்தும், அமரத் துவங் குறித்தும் களிப்பெய்தும் அதே வேளையில், வட மொழியிலுள்ள அலங்கார சாத்திரத்தின் வசப் பட்ட தமிழ், அதற்கிசைவான புதிய நெறிகளையும் இணைத்துக் கொண்டது என்னும் வரலாற்று உண் மையை மறத்தலாகாது. புராணம், காவியம் ஆகிய கருத்துகள் வடபுலத்திலிருந்துதான் தமிழகம் புகுந்தன. அக்கருத்துகளுடன் வந்த 'காவ்ய' என்ற வடசொல், இன்று தமிழிற் காப்பியமாகப் பயிலப்படு கின்றது. 'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ, எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே' என்ற தொல்காப்பியச் சூத்திரத்திற்கு இசைவாக, 'காப் பியம்' என்னும் வடமொழிப் பெயர் நிலவலாயிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அடியார்க்கு நல்லாரும் ஒப்புக் கொள்ளுகின்றார்.

காப்பியத்தைக் கவி இயற்றுகிறான். 'தான் எடுத்துக் கொண்ட பொருளைச் சாதுர்யத்தால் வருணித்துக் கூறவல்லவன்' எனக் கவிக்குப் பொருள் கொள்ளலாம். இந்தச் சாதுர்யம் நால்வகை வன்மையுடன் அமையும். இந்நால்வகை வன்மைகளைப பெற்ற கவிகளின் இயல்புகளை யாப்பருங்கல விருத்தியுரைகாரர் விளக்கிப் போந்துள்ளார்.

"எடுத்த பொருளும், அடுத்த சொல்லும், தொகுத்த தொடையும் வழுவாமல் விரைந்து பாட வல்லவன் ஆசுகவியாவன். சொல்வளமும், பொருட் பெருமையுமுடையதாகவும்; தொடையும் தொடை விகற்பமும் நெருங்கியதாகவும், உருவகம் முதலிய அலங்காரங்களைத் தன்னகத்தே கொண்டு ஓசை நயமுடைய ஒலி கடல் அமுதப் பாக்களைப் பாடவல்லன் மதுரகவியாவன். மாலை, மாற்று முதலான அருங் கவிகளைப் பாடுந் திறனுடையவன் சித்திர கவியாவன். அவனை அருங்கவி என்றும் அழைப்பர். மும்மணிக் கோவையும், பன்மணி மாலையும், கலி வெண்பாவும், மடலூர்ச்சி முதலாகிய செய்யுளும், இயல்-இசை-நாடகங்களோடும் பொருந்தப் பாடும் பெருங்கவிஞனே வித்தாரக் கவிஞனாவன். இந்நால் வகை வன்மையும் ஒருசேர அமையப் பெற்ற கவியே காவியஞ் சமைக்கும் பெற்றியனாவன்.

காவியச் செய்யுள்கள் முத்தகம், குளகம், தொகை நிலை, தொடர் நிலை என நால்வகைப் படும். தனியே நின்று ஒரு பொருள் பயந்து முற்றுப் பெறுதல் முத்தகமாகும். ஒரு வினையை உள்ளடக்கி, பல பாட்டாய் முடிதல் குளகமாகும். கதைத் தொடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்றிக் கருதிய பொருள்பற்றி ஒருவனால் இயற்றப் பெற்றுப் பல பாடல்களால் வருவனவும்; பொருளா லும், இடத்தாலும், காலத்தாலும், தொழிலாலும், பாட்டாலும் தொகுத்து வருவனவும் தொகைநிலைச் செய்யுள் வகைத்து. தொடர்நிலைச் செய்யுள் சொற் றொடர் நிலை, பொருட்டொடர் நிலை என இரு வகைத்து இவற்றுள் பொருட்டொடர் நிலைச் செய் யுளே காப்பியஞ் சார்ந்தது.

தமிழ் இலக்கிய வரலாற்றை வைத்துப் பார்க்கும் பொழுது, 'காப்பியம்' என்ற சொல், பிற்காலத்தில், வடமொழிச் செல்வாக்கினாலே தமிழிற் புகுந்தது என்று கொள்ளுதலே பொருந்தும். அதற்கு முன்னர் தொல்காப்பியர் காலத்தில், 'தொடர்நிலைச் செய்யுள்' என்னுந் தொடர் பயிலப்பட்டு வந்தது. 'பொருட்டொடர்நிலைச் செய்யுள்' என்பது நீண்ட சொற்றொடராக அமைந்தமையினாலும், உறுதி யற்றுப் பொதுவாகப் பொருள் குறித்தமையினா லும், இது வழக்கிலிருந்து வீழ, காப்பியம் என்னுஞ் சொல் வழக்கில் நிலைபெறுவதாயிற்று.

தொடர்நிலைச் செய்யுள் மூன்று வகைத்து. அவை, பொருள் மட்டுந் தொடர்ந்து, கதை தழு வாது வருந் தொடர்நிலைச் செய்யுள்; பொருள் தொடர்ந்து, கதை தழுவி வருவனவற்றுள், அறம் - பொருள் - இன்பம் - வீடு என்னும் நான்கிற் சில வற்றையே பயனாக உடைய தொடர்நிலைச் செய் யுள்; பொருளுந் தொடர்ந்து, கதையுந் தழுவி, அறம்- பொருள் - இன்பம் - வீடு என நாற்பொருளும் பயனாக உடைய தொடர்நிலைச் செய்யுளென வகுக்கப் பெறும். முதல்வகையிற் பத்துப்பாட்டும், பொருள் தொடர்புடைய பிரபந்தங்களும் அடங்கும். இரண்டாம் வகையில், சிறு காப்பியங்களும், புரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணங்களும் அடங்கும். பெருங்காப்பியங்கள் மூன்றாந் திறத்தைச் சார்ந்தனவாம். பெருங்காப்பியத்தை முடி பொருட்டொடர் நிலைச் செய்யுளெனச் சிறப்பாக அழைக்கலாம். வடமொழியில் அது மகா காவியம் என வழங்கும்.

பெருங் காப்பியத்திற்கான தெளிவான இலக்கணம் தண்டியலங்காரத்தின் கண் மட்டுமே காணப்படு கின்றது. இது வடமொழி நூலொன்றை முதன் நூலாகக் கொண்டு எழுந்தது என்பதை ஏலவே குறித்தோம். அவ் விலக்கணம் வருமாறு அமை கின்றது:

பெருங்காப்பிய நிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றி னொன்று
ஏற்புடைத் தாகி முன்வர இயன்று
நாற்பொருள் பயக்கும் நடைநெறித்தாகி
மலைகடல் நாடு வளநகர் பருவம்
இரு சுடர்த் தோற்ற மென்று இனையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல் புனல்விளையாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் களித்த லென்று
இன்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரந் தூது செலவிகல் வென்றி
சக்தியிற் றொடர்ந்து சருக்கம் இலம்பகம்
பரிச்சேதம் என்னும் பான்மையில் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப.

பெருங்காப்பியத்தின் நூன் முகத்தில் வாழ்த்து, வணக்கம், வருபொருளுரைத்தல் என்னும் மூவகை மங்கலத்துள் ஒன்று ஏற்புடைத்தாகி வரப்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினை யும் பயக்கும் ஒழுகலாறுடையதாய் நூற்பயன் அமை யும். மலை வருணனை, கடல் வருணனை, நாட்டு வருணனை, நகர் வருணனை, பருவ வருணனை, சூரியோதய வருணனை, சந்திரோதய வருணனை, என இன்னோரன்ன வருணனைகள் நூலிற் காணப் படும் வருணனைகளாக அமையப் பெறும். நூலின் பொருளாக, தன்னோடு ஒப்பாரும் மிக்காரும் இல்லா தானைத் தலைவனாகக் கொண்டு, அவனுடைய திருமணம், அவன் மகளிரொடு பூஞ்சோலையில் இன் புறுதல், அவரோடு புனல் விளையாடுதல், உண்டாடு தல், களியாடுதல், ஊடலின் முதிர்ச்சியிற் கூடி முயங் கப் பெறுதல், கூடற் கலவியல் இன்பம் பெறுதல், புத்திரப்பேறு அடைதல் முதலில் இன்னோரன்ன கருமச் சிறப்புக்கள் புகழ்ந்து தொடுக்கப்பட்ட நல் லொழுக்கமுடையதாகவும்; அவன் முடிபுனைந்து ஓச்சுதல், மந்திராலோசனை புரிதல், தூது விடுதல், படையெடுத்துச் செல்லுதல், சமர் செய்தல், வெற்றி பெறுதல் ஆகியனவுடையதாகவும் அமையும். எனவே, நூலின் பொருளாக ஒப்பற்ற தலைவனுடைய அக வாழ்க்கையும், புற வாழ்க்கையும் அடங்குகின்றன. இவை நாடகவுறுப்பாகிய சந்திபோலத் தொடர்பு பட்டு, சருக்கம் - இலம்பகம் - பரிச்சேத மென்ற பாகு பாட்டால் விளக்கமுடையதாகவும், சுவைகளையும் மெய்ப்பாட்டுக் குறிப்பையும் கொண்டதாகவும், எல் லோரும் விரும்பும் வண்ணம் கற்று வல்ல புலவரால் இயற்றப்பட்டதாகவும் நூலின் அமைப்புப் பொலிவு பெறும்.

இவ்விலக்கணத்திலுள்ள உள்ளுறுப்புக்கள் சில வற்றை மேலும் விளக்குதல் பொருத்தமுடையதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூன்முகத்தில் இடம்பெறும் வணக்கம், வழிபடு கடவுள் வணக்கம், ஏற்புடை கடவுள் வணக்கம் என இருவகைப்படும். நூலிலமைய வேண்டிய வருணனைகளுள் இடம்பெறும் பருவம் பெரும் பொழுதுகளையுஞ் சிறுபொழுதுகளையுங் குறிக்கும். பெரும் பொழுதுகளாவன: சித்திரைத் திங்கள் முதலாக இரண்டிரண்டு மாதங்களைக்கொண்டு பூர்த்தியாகும் இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என்பனவாம். சிறுபொழுதுகள் மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல் என ஐந்தென்பர். எற்பாடு என்பதையுஞ் சேர்த்து ஆறு சிறு பொழுதுகளாக பதினெட்டு வகை வருணனைகளுக்குக் கணக்குக் காட்டுவோரும் உளர். 'இனயன' எனத் தொகுக்காமல் விடப்பட்டவற்றில் ஆற்று வருணனை, தீர்த்த வருணனை, சூரியன் சாய்தல், சந்திரன் சாய்தல் ஆகிய வருணனைகள் அடங்கும். நூலின் அமைப்பாகச் சொல்லப்பட்ட சந்தியாவது, நாடகவுறுப்பாகிய கதை அமைப்பைக் குறிக்கும். முகப், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் எனக கதை அமைப்பு ஐந்து வகைப்படும். உழவினாற் சமைக்கப்பட்ட பூழியுள் இட்ட வித்து பருவஞ் செய்து முளைத்ததற்கு ஒப்பானது முகம். அவ்வாறு முளைத்தல் முதலாய் இலைதோன்றி நாற்றாய் முடிவது போல்வது பிரதிமுகம். அந்நாற்று முதலாய்க் கருவிருந்து பெருகித் தன்னுள் பொதிந்து கருப்ப முற்றி நிற்பது போல்வது கருப்பம். கருப்ப முதலாய் விரிந்து கதிர் திரண்டிட்டுக் காய்தாழ்ந்து முறறி விளைந்து முடிவது போல்வது விளைவு. விளைந்த பொருளை அறுத்துக் கடாவிட்டுத் தூற்றிப் பொலி செய்வது உண்டு மகிழ்வது போல்வது துய்த்தல். சுவை என்னும் பகுதியில் எட்டுச் சுவைகள் இடம் பெறும். உவகை, பெருமிதம், அழுகை, வியப்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகை, அச்சம், இளிவரல், வெகுளி என்பனவே அவ்வெட்டுச் சுவைகளாம். வடமொழியில் வழங்கப்பெறும் நவரசத்திலுள்ள 'சாந்தி ரச'த்தை 'சம நிலை'ச் சுவையெனக்கொண்டு ஒன்பான் சுவையென உரைப்பாருமுளர். சமநிலை புறத்தார்க்குப் புலனாவதன் றாதலின் அதனை விலக்கிக் கூறுதல் பொருந்தும். பாவம் மெய்ப்பாடுகளின் வெளிப்பாட்டைக் குறிக்கும். உவகை முதலான சுவையுணர்வு பிறக்கும் பொழுது உடலிலே தோன்றும் மயிர்சிலிர்த்தல், வியர்த்தல், கண்ணீர் துளிர்த்தல், அசைவின்றி நிற்றல், நடுங்குதல், நிறம் வேறுபடுதல, குரல் மாறுபாடுதல் முதலியன மெய்ப்பாடுகளின் வெளிப்பாடுகளாம்.

காப்பியங்களுக்கு சொற்பொருள் தொகுதி உடலாகவும் தொனிப்பொருள் உயிராகவும், அணிகள் அலங்காரமாகவும் அமையும்.

காப்பியத்தின் உடலாய் அமையும் சொற்களை, செஞ்சொல், இலக்கணைச் சொல், தாற்பரியச் சொல் என மூன்று வகைப்படுத்தலாம். வட நூலார் இவற்றை முறையே வாசகம், லக்ஷகம், வியஞ்சகம் எனக் கூறுவர். இச்சொல் இப்பொருள் உணர்த்துக என்னும் குறிப்புடையதாக உலக வழக்கிலும், நிகண்டு முதலிய நூல்களிலும் வழங்குஞ் சொல்லே செஞ்சொல்லாகும். செம்பொருளுக்குப் பொருத்தமில்லாத விடத்து, அப்பொருளின் தொடர்புடைய பிறிதொரு பொருளை உணர்த்துஞ் சொல் இலக்கணைச் சொல்லாகும். உபசார வழக்காக வருவனவும், ஆகுபெயர்களும் இவ்விலக்கணைச் சொற்களில் அடங்கும். செம்பொருளுக்குப் பொருத்தமுள்ள இடத்தும், புலவன் தான் கருதிய பிறிதொரு பொருளை உணர்த்த, தாற்பரியச் சொற்களைக் கையாளுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொனிப்பொருளே காப்பியத்திற்கு உயிராக அமைந்தது. 'நனைய காஞ்சிச் சினைய சிறுமீன் யாணரூரன்' என்பதைத் தொனிப்பொருட் சிறப்பிற்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். காஞ்சியாகிய பூவும், சிறுமீனாகிய புலாலும் ஒக்கவிளையும் ஊரன் என்பது செம்மொழிப் பொருளாகும். 'பொது மகளிரைப்போல குலமகளிரையும் கொண்டொழுகுவான்' என்பது கவி கருதிய தொனிப் பொருளாகும். இச் சிறப்பான தொனிப்பொருள் சங்க காலந்தொட்டுத் தமிழிற் பயிலப்பட்டு வருகின்றது. இவை, அகப் பாட்டில் இறைச்சிப் பொருள் பற்றியும், பக்திப் பாடல்களில் உள்ளுறைப் பொருள் பற்றியும் மேலுங் கவி கருதிய வேறு பல உள்ளுறைப் பொருள் பற்றியும், தொனிப்பொருள் வருவனவாம். செம்பொருளிற் சிறந்த தொனிப்பொருளை யுடையதே மேலான காப்பியமாகும். ஏனையன நடுத்தரம், கீழ்த்தரம் என்ற பகுப்புகளுக்குள் அடங்குவன.

அலங்காரமாக அமையும் அணி, சொல்லணி பொருளணி என இருவகைத்து. அவற்றுட் பொருளணி காப்பியத்தின் அலங்காரத்திற்கு வேண்டற்படுவதாகும். பொருளணி உவமையணி முதல் ஏதுவணியீறுதியாக நூற்றுக்கு மதிகமென்பர். தொல்காப்பியம் உவமையணி ஒன்றினையே கூறியது. பேராசிரியர் எடுத்துக்காட்டும் ஓர் இலக்கணச் சூத்திரத்தில் தன்மை, உவமை, உருவகம், தீவகம், பின்வருநிலை, முன்னவிலக்கு, வேற்றுப்பொருள்வைப்பு, வேற்றுமை ஆகிய எட்டு அணிகள் சொல்லப்பட்டன. முன்னர் சிலவாகச் சொல்லப்பட்ட அணிகள், பின்னர் தொகையிற் பெருகின. இதற்குக் காரணமென்னவெனில், இலக்கியத்தின் அழகுகளைத் தனித்தனி எடுத்து ஆராய்ந்த இலக்கணகாரர் இவற்றைப் பெருக்கிக் கொண்டே வந்தனர் என்க. பெருங்காப்

பியத்திற்கு இலக்கணம் வகுத்துள்ள தண்டியலங்கா ரத்தில் முப்பத்தைந்து வகை அணிகள் கூறப்பட்டுள் ளன.

காப்பியங்களின் இயல்புகளை இதுவரையிற் பார்த்தோம். 'காப்பியங்கள்' என்றதும் பெருங்காப் பியங்கள் ஐந்தின் நினைவே முதலில் ஏற்படுதல் மிக இயல்பானதாகும். ஐம்பெருங் காப்பியங்களைக் குறித்தும் இங்கு அறிஞர்கள் சொற்பெருக்காற்றுவார் கள். பிறிதொரு காரணம் பற்றி, ஐம்பெருங்காப்பி யங்களைப் பற்றி இங்கு ஒரு குறிப்புச் சொல்ல வேண் டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

தமிழுக்குத் தனியே செம்மைசால் ஓர் இலக்கிய மரபு இருந்தபோதிலும், பிற்காலத்தில், வடநூல் மர பைப் பின்பற்றி யாப்பும், அணியிலக்கணமும் அமைக்கப்பட்டன. வடமொழியில் 'பஞ்ச காவிய'த் தொகுதி ஒன்று உண்டு. நைடதம், கிராதார் சுனீயம், ரகுவம்சம், குமாரசம்பவம், சிசுபாலவதம் ஆகிய நூல்கள் இத்தொகுப்பில் அடங்கும். இவ்வழக்காற் றைப் பின்பற்றியே, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவகசிந்தாமணி ஆகிய வற்றை ஐம்பெருங் காப்பியங்கள் என அழைக்கலா யினர். தண்டியலங்காரத்தின் பெருங்காப்பிய இலக் கணத்திற்கு இசைவாக இக்காப்பியங்கள் அமைந்துள் ளனவா என்று விசாரணை செய்தல் சுவையான ஆராய்ச்சியாகும். சிலப்பதிகாரம் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும் பரக்கக் கூறினும், வீட் டுப் பயன் விடுபட்டதால் அது பெருங்காப்பியமாக மாட்டாதெனக் கூறுவர். பௌத்தமதப் பிரசாரத்தை நோக்காகக் கொண்ட மணிமேகலை அறமும் இன்ப மும் மட்டுமே சொல்லிப் போந்ததால் அது பெருங் காப்பியமாகாதெனவுங் கூறுவர். குண்டலகேசி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளையாபதி ஆகிய காப்பியங்கள் முழுமையாக நமக்குக் கிடைக்கவில்லை. குண்டலகேசியை யாப் பருங்கல விருத்தி யுரையாசிரியர் தருக்க நூல்களுள் ஒன்றாகக் கணித்தனர். வாத நூலைத் தனியாகச் சொல்வதிலும் பார்க்க, கதைத் தொடர்ச்சியுடன் அமைத்தல் படிப்போர்க்குச் சுவையூட்டவல்லதாக அமையலாம் என்ற எண்ணத்தில் எழுந்த குண்டல கேசி பெருங்காப்பியமாகாது என்றுங் கூறுவர். இது காரணம் பற்றியே வளையாபதியும் பெருங்காப்பிய மாக மாட்டாது. சமணத்தின் சிலம்பும், பௌத்தத் தின் மேகலையும் நின்று நிலவுகின்றன. ஆனால், சமய விவாதங்களையே அடி நாதமாகக் கொண் டெழுந்த பௌத்தத்தின் குண்டலகேசியும், சமணத் தின் வளையாபதியும் அழிந்தொழிந்தன. பெருங் காப்பிய வரிசையிற் சொல்லப்பட்ட சீவகசிந்தாமணி மட்டுமே தலைமைக் காப்பியமாகத் திகழ்கின்றது. விருத்த யாப்பில் முதலாக இயற்றப்பட்ட காப்பிய மாக அமைந்து, வேறு காப்பியங்கள் அதனைப் பின் பற்றித் தோன்றுவதற்கு அஃது ஒரு வழிகாட்டியாக வும் அமைந்தது. அத்துடன் பெருங்காப்பிய இயல்பு கள் பொருந்தியும் பொலிவுறுகின்றது. ஐம்பெருங் காப்பியங்களுள் மணிமேகலையையும் வளையாபதி யையும் நீக்கிப்பெருங்கதையையும், சூளாமணியையும் ஐம்பெருங் காப்பிய வரிசையிற் சேர்த்திருக்கலா மென்று அபிப்பிராயப்படுபவர்களும் நம் மத்தியில் உளர்.

ஐம்பெருங்காப்பிய வழக்கை மனதில் வைத்துக் கொண்டு, 'ஐஞ்சிறு காப்பியங்கள்' என்ற சொற் றொடரையுஞ் சமைத்திருக்கிறார்கள். உதயண குமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி ஆகிய ஐந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐஞ்சிறு காப்பியத் தொகுப்பில் அடங்குமென்பர். உதயண குமார காவியம் பற்றி வீடூர் அப்பாசாமி, 'இது காப்பிய இலக்கணங்களை உடையதன்று' என்றும், 'இந்நூலில் இலக்கண வழுக்கள் உள்ளன; சந்த நயமும் பொருட் பொலிவும் இல்லை' என்றும் அபிப்பிராயப்படுகின்றார். நாககுமார காவியம், யசோதர காவியம் என்பனவும் அவ்வாறே குறைபாடுடையனவாக விளங்குகின்றன நீலகேசி வெறும் விவாத நூலாகும். பெருங்காப்பிய வரிசையிற் சீவகசிந்தாமணி மட்டுமே பெருங்காப்பியமாகத் தேறியது போலவே, சூளாமணி ஒன்றுதான் சிறு காப்பிய வரிசையிற் காப்பியமாகத் தேறுகின்றது.

இங்கு நடைபெறும் காப்பியப் பெருவிழாவில், பெருங்காப்பிய வரிசையில் இடம்பெறும் அத்தனை காப்பியங்களைப் பற்றியும், அவற்றின் சிறப்பியல்புகள் குறித்தும் பேசுவார்கள். ஆனால், இவற்றுடன் ஐம்பெருங் காப்பிய வரிசையிற் சேர்க்கப்படாத ஏனைய காப்பியங்கள் சிலவற்றையுஞ் சேர்த்துள்ளோம். காப்பியங்களென்றால் அவை சமணத்தையோ பௌத்தத்தையோ சார்ந்தனவாகத்தான் இருத்தல் வேண்டுமா?

பாவின் சுவைக்கடல் உண்டெழுந்து-கம்பன்
பாரிற் பொழிந்த தீம்பாற் கடலை
நாவின் இனிக்கப் பருகுவமே-நூலின்
நன்னயம் முற்றுந் தெளிகுவமே

எனப் போற்றப்படும் கம்பராமாயணம், கம்பர் வைணவ சமயத்தவர் என்ற காரணத்தினாற் காப்பிய வரிசையிற் சேராதா? பெரிய புராணம் சைவத் தமிழ் மணத்தைப் பிழிந்து தருவதினால் காப்பிய வரிசையிற சேராதா? தமிழ் மரபு வழுவாது, நபிபெரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானாரின் திரு அவதாரத்தைக் கூறுஞ் சீறாப்புரா ணம் காப்பிய வரிசையிற் சேராதா? தமிழுக்கு எண்ணிறைந்த தொண்டுகளாற்றிய வீரமாமுனிவர் கத்தோலிக்கர் என்ற காரணத்தினால் தேம்பாவணி காப்பிய வரிசையிற் சேராதா? இவை கேள்விகள். இவை காப்பிய வரிசையிற் சேரத்தக்கனவே என்று நிறுவுவதற்கு அவ்வக் காப்பியங்களில் திளைத்தின் புற்ற அறிஞர் பெருமக்கள் இங்கு கூடியிருக்கிறார் கள். மதத்தால் வேறுபட்ட செந்நாப் புலவர்களால் இயற்றப்பட்டாலும், அவை தமிழ்க் காப்பியச் சோலைக்கு வனப்பும் மணமும் ஊட்டின என்பதை அவர்கள் சுவைபடச் சொல்வார்கள்.

இக்காப்பியப் பெருவிழாவின் நோக்கம் காப்பி யங்களைப் பற்றிய இரசனையையும், அறிவையும் பரப்புவதாகும். ஈழத்தில் சிறுகதை, நாவல், நாடகம் ஆகிய துறைகளிலே வளர்ச்சி பெற்று வரும் எழுத்தா ளர்கள் பழைய பண்டிதர்களையும், பழம் நூல்களை யும் ஒரு வகை வெறுப்புடன் நோக்குகிறார்கள். பழைய நூல்களைக் கற்றவர்களைப் 'பத்தாம்பசலி கள்' என்று எள்ளி நகையாடுபவர்களும் இருக்கிறார் கள். செந்தமிழ்ப் பனுவல்களிலேயுள்ள பழந்தமிழ் இலக்கியங்களைப் பற்றி அறிய வேண்டுமென்கிற அக்கறையும் மாணாக்கருலகில் அருகி வருகின்றது. இத்தகைய அவல நிலையில் ஒரு திருப்புமுனை காண இப்பெருவிழா உதவுமென நம்புகின்றோம்.

சிலப்பதிகாரம் முதல், இரட்சணிய யாத்திரிகம் ஈறாகவுள்ள காப்பியங்களைப் பார்த்தால், காப்பிய அமைப்பில் காலத்திற்குக் காலம் மாறுதல் ஏற்பட்டு வந்துள்ளமையை நாம் அவதானிக்கலாம். இந்த மாற்றங்கள் 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்பதற்கிசைவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ந்து வந்துள்ளது. இருப்பினும், தமிழின் அடிப்படையான சில மரபு நிலைகள் மாறுவது கிடையாது. மாறாத மரபு நிலை என்ற பழைமையிற் காலூன்றி, புதியதொரு உத்வேகத்துடன் வருங்காலத்தை நோக்க இச்சொற்பொழிவுகள் உதவுமென நம்புகின்றோம்.

ஐம்பெருங் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள் என்ற வரிசைகளை விடுத்து, இருபதாம் நூற்றாண்டிற்குப் பொருத்தமான பெருங் காப்பியங்கள் பத்து என்னும் புதியதொரு வரிசையை இவ்விழா அறிமுகப் படுத்தி வைக்கின்றது. இவ்வரிசை நிலவுவதாக. சீரிளமை குன்றாத் தமிழ் வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரம்

க. வேந்தனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழிலேயுள்ள காவியங்களைச் சுருக்கமாக அறிமுகஞ் செய்யும் இந்த நூலுக்கு, 'பொன் பூச்சொரிந்து, பொலிந்த செழுந்தாதிறைத்து, வாயிலிடைக் கொன்றை' மரமாக, வேந்தனாரது சிலப்பதிகாரச் சொற்பொழிவு மிளிருகின்றது. சங்க நூல்கள் வகுத்துக் கொண்ட முதல், கரு, உரி என்பவற்றை விளக்கிவிட்டு, தண்டியாசிரியர் கூறிய பெருங்காப்பிய இலக்கணத்துக் கமைய ஆக்கப்பட்ட காப்பியங்கள் எவ்வகையில் ஒத்திருக்கின்றன என்றுங் கூறி, சிலப்பதிகார காப்பியத்தின் சிறந்த அமைப்பையும் விளக்கியுள்ளார். சிலப்பதிகாரத்தில் வரும் கண்ணகி, மாதவி ஆகிய இரு பாத்திரங்களை மாத்திரம் தொட்டுக் காட்டியுள்ளார். இந்தப் பாத்திர அறிமுகமே இளங்கோவடிகளுடைய கற்பனைத் திறனுக்கும், பண்பிற்கும் எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளது. கோவலன் பாடிய பாட்டைக் கேட்ட மாதவி, தானும் வேறோர் ஆடவன் மேற் காதல்கொண்டாள் போலப் பாடினாள் என்ற இடத்தை ஆசிரியர் தொட்டுக் காட்டி ஆராய்ந்தமை மிக நன்று.

- இரசிகமணி கனக செந்தில்நாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமருவிய காலத்திலே

தமிழ்கூறு நல்லுலகத்தில் தமிழ் மரபைத் தழுவி எழுந்த தனிப்பெருங் காப்பியம் சிலப்பதிகாரமே யாகும். இன்று ஐம்பெருங் காப்பியங்கள் என்று தமிழ் இலக்கிய வரலாற்றில் போற்றப்படும் நூல் களிலே தொன்மையும் புதுத்தன்மையும் கொண்ட தாய்ச் சிலப்பதிகாரம் விளங்குகின்றது. சிலப்பதி காரத்தின் விளைபுலம் வண்புகழ் மூவர் தண்புகழ் வரைப்பு எனத் தொல்காப்பியனரால் சிறந்தெடுத்துச சொல்லப்பட்ட தமிழகமே என்று எண்ணும்பொழுது எமதுள்ளம் தழைக்கின்றது. "தனிப்பாட்டுக்களைக் கொண்ட எட்டுத் தொகையும், நெடும் பாட்டுக் களைக் கொண்ட பத்துப்பாட்டும் சங்ககால மக்கள் வாழ்வைக் காட்டுகின்றன. பத்துப்பாட்டில் வரும் ஆற்றுப்படைகளில், தொடர்நிலைச் செய்யுள் என் னும் பெருங்காப்பியந் தோன்றுவதற்கேற்ற அமைப்பு கள் பொருந்திக் கிடக்கின்றன பெரும்பாணாற்றுப் படை முதலியவற்றில் மன்னனின் கொடைச்சிறப்பு, வீரம், செங்கோலாட்சி, அவன்கீழ் வாழுங் குடிமக்க ளின் வாழ்க்கை நெறி, கலையுணர்ச்சி, பண்பாடு, அவர்கள் ஆற்றும் தொழில்கள் என்பனவும், நால் வகை நிலங்களின தன்மையும், அந்நிலங்களில் உண் டாகும் பயிர்வகைகள், வாழும் விலங்கினங்கள் என் பனவும், தொடர்பாக இலக்கியச் சுவையுடன் கூறப் பட்டுள்ளன. சங்க நூல்கள், முதல் - கரு - உரி என வகுத்துக்கொண்ட மரபு, மக்கள் வாழ்வும் அவர்கள் வசதியும் சூழ்நிலையுந்தான் இலக்கியம் தோன்றும் நிலைக்களங்கள் என்பதை நிலைநாட்டி விட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் என்பது நிலமும் பொழுதும் என்றும், கருவென்பது அந்நிலத்தில் தோன்றிவாழும் மா, மரம், பறவை என்பனவும் அங்கு வதியும் மக்களின் தொழில் அவர்கள் அடிக்கும் பறை, யாழ் முதலிய இசைக்கருவிகள் என்றும், உரியென்பது மக்களின் ஒழுக்கங்களாகிய கூடல், பிரிதல், ஊடல், இருத்தல், இரங்கல் என்பன என்றும் தொல்காப்பியர் கூறுகின்றார்.

இங்ஙனம் மக்கள் வாழ்வே இலக்கியத்தின் உரிப்பொருள் என வரைவு செய்து, "முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே நுவலுங் காலை முறை சிறந்தனவே பாடலுட் பயின்றவை நாடுங்காலை" எனவும், "மக்கள் நுதலிய அகன் ஐந்திணை" எனவும் தொல்காப்பிய நூற்பாக்கள் வழிவழியாக தமிழ்கூறு நல்லுலகத்தில் நிலவி வந்த இலக்கிய மரபை எடுத்துக் காட்டுகின்றன. இந்த இலக்கிய மரபு, எட்டுத்தொகை என்னும் சங்க நூலில் தனித் தனிப் பாட்டுக்களில் அமைந்தும், பத்துப் பாட்டென்னும் சங்க நூலில் நெடும்பாட்டுக்களில் தொடர்ச்சியாக அமைந்தும் விளங்கித் தமிழ் இலக்கியத்தின் மரபுநிலை திரியாத வளர்ச்சியை உணர்த்துகின்றன.

இவ்வகை எட்டுத்தொகையிலும் பத்துப்பாட்டிலும் படிப்படியாக வளர்த்துவந்த தமிழ் இலக்கிய மரபை நிலைக்களனாகக் கொண்டே, இளங்கோவடிகள் முத்தமிழ்ப் பெருங்காப்பியமாகிய சிலப்பதிகாரத்தைப் படைத்துள்ளார். முதற்பொருளில் அடங்கும் நாடு - நகரங்களின் சிறப்பும், கருப்பொருளில் அடங்கும் மரம், விலங்கு, பறவை முதலியவற்றின் வாழ்வும், இவை யாவற்றினும் உயர்ந்த மக்களின் தொழில் கலையுணர்ச்சிஎன்பனவும், உரிப் பொருளில் அடங்கும் மக்களின் ஒழுக்க நெறிகளும், மன்னனின் செங்கோலாட்சியில் தங்கியுள்ளன என்பதைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சியாக நிகழும் மக்கள் வாழ்வில் வைத்துணர்த்த வேண்டுமென, இளங்கோவடிகள் உள்ளத்தில் எழுந்த ஆர்வமே சிலப்பதிகாரத்தை எமக்குத் தந்தது.

வடமொழியில் தண்டியாசிரியர் கூறிய பெருங் காப்பிய இலக்கணத்தைப் படித்துச் சிலப்பதிகாரம் படைக்கப்படவில்லை. அளவெடுத்துச் சட்டை தைப்பதுபோல ஆரோ ஒருவர் கூறிய இலக்கணங்கள் யாவும் அமையவேண்டுமென எண்ணிப் படைக்கப் பட்ட செயற்கைக் காப்பிய வரிசையில், சிலப்பதிகாரம் சேராது. வையத்தில் வாழ்வாங்கு வாழும் மக்களையே, இலக்கிய மாந்தராகக்கொண்டு இலக்கியங்களைப் படைப்பதே தொல்காப்பியர் காலத்துக்கும் முற்பட்டுத் தோன்றி நிலவுந் தமிழ் மரபாகும். தெய்வங்களை இலக்கிய மாந்தராக (பாத்திரங்களாக)க் கொண்டு, காலங் கடந்த கற்பனை நிகழ்ச்சிகளைக் காப்பியக் கருவாக வைத்துப் படைக்கப்படும் செயற்கை இலக்கியங்களுக்கு இலக்கணங்கூறும் மரபு, தொல்காப்பியத்தில் இல்லை. வடமொழியில் தண்டியாசிரியர் வகுத்த பெருங்காப்பிய இலக்கணத்தைத் தழுவித் தமிழிலே எழுந்த சீவகசிந்தாமணியிலும் ஏழு நூற்றாண்டுகளுக்கு முன்பே, நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல்சான்ற புலநெறி வழக்கைத் தழுவிய தமிழ்ப் பெருங்காப்பியமாகிய சிலப்பதிகாரம் தோன்றிவிட்டது. சீவகசிந்தாமணியின் அமைப்பிலும் சிறந்த அமைப்பும், தூய்மையும், தமிழ் மரபும் கொண்டதாய்ச் சிலப்பதிகாரம் திகழகின்றது. சிந்தாமணி ஆசிரியர் காட்டிய நெறியைத் தழுவிப் பிற்காலத்தில் எழுந்த கந்தபுராணம், கம்பராமாயணம் முதலியபெருங்காப்பியங்கள், நாட்டுப்படலம்-நகரப்படலம் எனத் தொடங்கிச் செயற்கைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பு மிக்கனவாய்க் காட்சியளிக்கின்றன. சிந்தாமணி தன்னிகரில்லாத் தலைவனாக மக்களுள் ஒருவனாகிய சீவகனையே கூறுகின்றது. கந்தபுராணம், கம்பராமாயணம் என்பன முறையே முருகன், திருமால் என்னும் தெய்வங்களையே தலைவர்களாக வைத்துப் பாராட்டுகின்றன. தெய்வங்களைக் காப்பியத் தலைவர்களாக வைத்துப் படைக்கப்படும் காப்பியங்கள், மக்கள் வாழ்வைவிட்டு அப்பாலுக்கப்பாலாய் விலகி விடுகின்றன. மக்கள் வையத்து வாழ்ந்து, நுகர்ந்து வளப்படுத்துகின்ற உயர் நோக்கங்களைத் தெய்வங்கள் தம் நினைவினால் ஆற்றுகின்றன. மக்களின் இன்ப துன்பச் சுவடுகள் பதியாத அற்புதம் நிறைந்த கற்பனை வாழ்வைத் தெய்வங்கள் நிகழ்த்தி வருகின்றன. இதனால், மக்களின் அருஞ்செயல்களும், அறிவாற்றல்களும் மறைக்கப்பட, அவர்களும் இலக்கியத்தில் நின்று விலக்கப்படுகின்றார்கள். மக்களிலும் ஆற்றல் வாய்ந்த தெய்வங்களின் செயல்கள் மக்களின் உள்ளத்தைத் தூண்டிப் புது நம்பிக்கையைக் கொடுக்கமாட்டா. உயர்ந்த நோக்கங்களுக்காகத் தமது இன்ப நுகர்ச்சிகளையுந் துறந்து, துன்பப்பட்டு உலகை வாழ்வித்துத் தாமும் வாழ்ந்த மக்களின் செயல்களைத்தான் மக்கள் பின்பற்றி வாழ ஊக்கங் கொள்வார்கள். இவ்வுண்மையை உணர்ந்தே தொல்காப்பியனார் "மக்கள் நுதலிய அகன் ஐந்திணை" எனக் கூறினார். "உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்" என வரும் வள்ளுவர் மொழியும் மக்களின் உயர்ந்த வாழ்வுப் பண்ணையில் நின்று தோன்றி வளர்வதுவே இலக்கியம் என்னுங் கொள்கையை நிலைநாட்டுகின்றது. தெய்வங்களை இலக்கிய மாந்தராகக் கொண்ட காப்பியங்களில், உயர்ந்த நோக்கங்கள் இருக்கலாம். அந் நோக்கங்களுக்கும் மக்கள் வாழ்வுக்கும் தொடர்பில்லாத நிலையும் அங்கேயே கருக்கொண்டுவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, வடமொழி மரபைத் தழுவித் தமிழில் எழுந்த அப்பெருங் காப்பியங்களின் அமைப்பும் ஒரே அச்சில் இட்டுச் செய்த பலநிறக் கலங்களைப் போலக் காணப்படுகின்றது. கச்சியப்பருக்கொரு அசமுகி, கம்பருக்கொரு சூர்ப்பனகை, கச்சியப்பருக்கொரு பானுகோபன், கம்பருக்கொரு இந்திரசித்தன், கச்சியப்பருக்குத் தேவர் சிறை, கம்பருக்குச் சீதை சிறை என ஒரு காப்பியத்தின் இலக்கிய மாந்தருடன் ஒரு காப்பியத்தின் இலக்கிய மாந்தர்கள் கட்டித் தழுவுகின்றார்கள்; முட்டி மோதுகின்றார்கள். சிலப்பதிகாரத்தில் இத்தகைய செயற்கைக் காவிய அமைப்பு ஒன்றுங் கிடையாது. தமிழ்கூறு நல்லுலகத்தின் மண்ணும், நீரும், காற்றும், மரமும், மாவும், மலரும், இசையும், யாழும், முழவும் தமிழ் மக்களின் வாழ்வுடன் கலந்து சிறந்து பிறந்த உயர் நோக்கங்கள் யாவும், சிலப்பதிகாரத்தில் நின்று நிழலாடுகின்றன. புகாரும், மதுரையும், வஞ்சியும் வாழையடி வாழையாக வாழ்ந்து வாழ்ந்து சென்ற, உயர் மக்களின் அடிச்சுவடுகளை நினைவூட்டுகின்றன. கானல்வரியில் காதலையும், வேட்டுவவரியில் வீரத்தையும், ஆய்ச்சியர்குரவையில் அவலத்தையும், குன்றக்குரவையில் வியப்பையும், வரிப்பாட்டுகளில் மகிழ்வையும் மக்கள் வாழ்வுடன் இணைத்து வாழ்விக்கின்றார். இயலும், இசையும், நாடகமும், அன்பும் அருளும், அறமும் போல நானில மக்கள் வாழ்விலும் கலந்து இயல்பாகவே நிலவுகின்றன என்பதைச் சிலப்பதிகாரம் தெளிவுபடுத்துகின்றது. இச்சிறப்பு நோக்கியே சிலப்பதிகாரத்தை, ''இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுள்'' எனச் சான்றோர் போற்றினர். சிந்தாமணியென்னும் செயற்கைப் பெருங்காப்பியத்தைத் தழுவிப் பிற்காலத்தில் பல செயற்கைப் பெருங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பியங்கள் தோன்றியதுபோல், சிலப்பதிகாரத்தைத் தழுவி ஒரு காப்பியமும் தோன்றவில்லை. இஃது ஒன்றே சிலப்பதிகாரம் தனக்கெனவே இயல்பாக அமைந்த தனிச் சிறப்புடைய தமிழ்ப் பெருங்காப்பியம் என்பதைப் புலப்படுத்தப் போதிய சான்றாகும். இளங்கோவடிகளின் உள்ளத்தில் உருவாகிய அமைப்பே, சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றது. பிறர் அமைத்த ஒழுங்கைத் தழுவி இளங்கோவடிகளும் சிலப்பதிகாரத்தைச் செயற்கையாகப் படைத்திருப்பாரானால், சிலப்பதிகாரத்தைப் போன்ற வேறு பல காப்பியங்களும் தமிழில் தோன்றி நிலவ முடியும். இளங்கோவடிகளின் காப்பிய அமைப்பு, அவருள்ளத்திலேயே ஆண்டுபலவாகக் கருக்கொண்டு பிறந்தது. தான் கருக்கொண்டு ஈன்றெடுக்காத ஒரு குழந்தையின் நிழற்படத்தைப் பார்த்து, அதுபோலப் பல படங்களை எடுத்து, அவற்றைத் தான் ஈன்ற குழந்தையின் படங்களெனக் கூறுகின்ற மலடியின் செயலைப் போன்றதே, இன்னொருவர் கூறிய இலக்கணத்துக்கு, வேறொருவர் காப்பியம் படைப்பதாகும் என்பதை நாம் உணரல் வேண்டும்.

தண்டியாசிரியர் வடமொழியில் பெருங்காப்பிய இலக்கணம் கூறியிருப்பதால், பெருங்காப்பியம் என்னும் இலக்கியப் படைப்பைப் பற்றிய எண்ணம் தமிழர் உள்ளத்தில் தோன்றவில்லை என நாம் எண்ணிவிடக் கூடாது. ஆசிரியர் தொல்காப்பியனார் செய்யுள் இயலில்,

இழுமென் மொழியான்
விழுமியது நுவலினும்
பரந்த மொழியான்
அடிநிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிவர்
தொன்மொழிப் புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என ஒரு நூற்பா யாத்துள்ளார். இதன்கண் வரும் இழுமென் மொழியான் விழுமியது நுவலல் என்னுந் தொடருக்குப் பேராசிரியர், "மெல் என்ற சொல் லான் அறம் பொருள் இன்பம் வீடென்னும் விழுப் பொருள் பயப்பச் செய்வன" எனப் பொருள் கூறி யுள்ளார். மெல் என்ற இனிய மொழிகளால் மக்கள் வாழ்ந்து, நுகர்ந்து அடையவேண்டிய உயர்ந்த பேறு களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் அடையக்கூடிய உயர்ந்த இலக்கியத் தைப் படைக்கவேண்டும் என்பதே தொல்காப்பியரின் ஆணை. விழுமிய என்னுஞ் சொல் சிறந்த அறத்தை யும் பொருளையும் இன்பத்தையும் வீட்டையும் உணர்த்தி நிற்கின்றது. உயர்ந்த பேறுகளை அடை யும் வாழ்க்கை நெறிகளைக் கூறுகின்ற மொழியும் இனியதாய்த் தூயதாய் மென்மை வாய்ந்ததாய் இருக்க வேண்டுமெனவும் தொல்காப்பியர் கூறுகின் றார். எனவே, இனிய தூயமொழிகளால், உயர்ந்த நோக்கங்களை நிலைக்களனாகக் கொண்டு, படைக் கப்படுவதே பெருங்காப்பியமாகும் என்பது தொல் காப்பியர் ஆணை என்பதைத் தெளிந்தோம். இங் ஙனம் இழுமென் மொழியான் விழுமியது நுவலல், பெருங்காப்பியப் படைப்பாகும் எனக் கூறிய தொல் காப்பியர், அக்காப்பியத்தை படைக்கும் உரிமையை யும் காப்பிய அமைப்பு முறையையும் புலவனிடத்தில் ஒப்படைத்து விட்டார். கட்டுரை எழுத உதவிக் குறிப்புக் கொடுப்பதுபோலக் காப்பியப் படைப்பாள னுக்கும் தலையங்கங்கள் கொடுத்து, இவைகள் எல் லாம் வரத்தக்கதாக நீ காப்பியத்தைப் படைக்க வேண்டுமென ஆணையிட்டு எல்லைப்படுத்துதல், புலமை மரபாகாது என்று தொல்காப்பியர் எண் ணினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளங்கோவடிகள் இழுமென் மொழியான் விழுமிய நுவலல் என்ற உயர்நோக்கத்தைத் தழுவி ஒரு காப்பியத்தைப் படைத்தார். அக்காப்பியத்தின் அமைப்பு நெறியும், பொருள் மரபும், மொழி ஆக்கமும் பிறவும் இளங்கோவடிகளின் உள்ளத்தில் நின்று சுரந்த எண்ணத்தின் வண்ணங்களேயாம். சிலப்பதிகாரம் தண்டியாசிரியரின் இலக்கணத்துக் கமையாத படியால் பெருங்காப்பியமாகாது என ஆராய்ச்சி செய்து கூறுவாரும் உளர். அவர்கள் தொல்காப்பிய நெறியின்படி இழுமென் மொழியான் விழுமியவற்றை நுவல்வன எல்லாம் பெருங்காப்பியமென்று தெளிய வேண்டும். பெருங்காப்பியம் என்னுந் தொடர் தண்டியாசிரியர் இலக்கணங்களுக்கமைந்த சிறு காப்பியமாகாது. இயல்-இசை-நாடகம் என்னும் தமிழ் இயல்பு மூன்றும் அமைந்து நிலவும் காவியமாதலால் இயல் இசை நாடகம் பொருட்டொடர் நிலைச் செய்யுள் என்றும், நாடக உறுப்புக்கள் பல சிறப்பாக அமைந்துள்ள காப்பியமாதலால் நாடகக் காப்பியம் என்றும், உரையும் பாட்டும் கலந்து வருங் காரணத்தால் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்றும் கூறப்படும் சிலப்பதிகாரத்தின் சிறப்புப் பெயர்கள் அதன் தனித் தன்மையை நிறுவுகின்றன. முடிமன்னர் குலத்தோன்றலாகிய இளங்கோவடிகள் குடிமக்கள் வாழ்க்கைக்குக் காப்பியம் படைத்த சிறப்பு தமிழ் இலக்கியத்தின் உயர்ந்த நோக்கத்தைப் புலனாக்குகின்றது. தெய்வங்களுக்கும் மன்னர்களுக்குமே பெருங்காப்பியம் படைக்க வேண்டுமென்ற எண்ணத்தை இளங்கோவடிகள் மாற்றி அமைத்து விட்டார். தாம் படைத்த காப்பியத்தின் பெயரை கண்ணகியின் பெயராலோ கோவலனின் பெயராலோ கூறாமல், கண்ணகியின் காலிலே அணியப் பட்ட சிலம்பின் பெயரால், கூறியுள்ளார். காப்பியப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்புக்குக் காலில் அணிந்த சிலம்பிலே இருந்து தெறித்த பரலைக் கருவாகக் கொண்டுள்ள இளங் கோவடிகளின் புலமைத் திறத்தை, நாம் நாளும் பொழுதும் நயந்து நயந்து போற்றவேண்டும்.

இளங்கோவடிகளின் தூயபுலமை உள்ளத்தில் அன்பும் அருளும் கலந்த அறத்தின் சாயல் அலையெறிகின்றது. அவர் தாம் எடுத்துக்கொண்ட இலக்கிய மாந்தர் என்னும் பாத்திரங்கள் ஒவ்வொருவரையும் மிக மதிப்புடனும் ஆர்வத்துடனும் எமக்கு அறிமுகஞ் செய்கின்றார். அவ்வாறு இளங்கோவடிகள் தமது காப்பியத்திற் படைத்துள்ள கண்ணகி, மாதவி என்ற இரு பாத்திரங்களின் இயல்புகளை மட்டும் இங்கு பார்ப்போம்.

கண்ணகியின் தூயவாழ்வை மிக மிக நுட்பமாகவும் நாகரிகமாகவும் தாம் கூறியது போலவே படிக்கின்றவர்களும் கண்டு மதிக்க வேண்டும் என்ற ஆர்வத்தினால் அடிகள் அள்ளுப்பட்டுள்ளார். கண்ணகி, தன்னை விட்டுப் பிரிந்து மாதவியிடம் சென்று வாழ்ந்த கோவலனையாதல், தன் கணவனை ஆடல் பாடல் அழகு என்பவற்றால் கவர்ந்து ஆட்படுத்திய மாதவியையாதல், ஓரிடத்தும் வெறுத்துரையாத மேன்மை வாய்ந்தவள். விலைமகளிடஞ் சென்று அவளையே புகலாகக் கொண்டு பல ஆண்டுகள் தன்னை மறந்து வாழ்ந்த கோவலனைக் கண்ட கண்ணகி, ஊடல்கொண்டு வெறுக்காமலும், வாடிக் கண்ணீர் வடியும் முகத்தைக் காட்டி வருந்தாமலும், நலங்கேழ் முறுவல் நகைமுகங் காட்டிச் சிலம்புள கொண்மெனச் சொல்லுகின்றாள். துறவுள்ளம் கொண்ட இளங்கோவடிகளால் கோவலனை நோக்கிக் கண்ணகி காட்டிய நலங்கேழ் முறுவல் நகை முகத்தை, மறக்கவே முடியவில்லை. நகைமுகங்

காட்டி என்று மட்டும் கூறினால், முகத்தின் இனிய நகை அகத்தின்னா வஞ்சம் உண்டு எனவுங் கொள்ளலாம் என்பதை எண்ணி, அகத்தில் நின்று சுரக்கும் அன்பினால், முகத்தினும் ஒளிதோன்றிய தென்பதை உணர்த்த நலங்கேழ், இளமுறுவல் என்றார். இங்ஙனம் பல்லாண்டு விலைமகளுடன் வாழ்ந்து மீண்டு வந்த தலைவனைக் கண்டவுடன், வெறுப்பின்றி நகைமுகங்காட்டி வரவேற்ற செயல் கண்ணகியின் சிறந்த கற்பைக் காட்டுகின்றது. அன்பின் ஐந்திணை என்னும் ஒழுக்கங்களில் இருத்தலும் இரங்கலுமே கண்ணகிக்குரியனவாயின என்பதை உணரும்பொழுது எமதுள்ளமும் கோவலனை வெறுக்கின்றது. ஆனால், கண்ணகியின் உள்ளமோ "கண்டார் இகழ்வனவே காதலன் தான் செய்திடினும் கொண்டானையல்லால் அறியாக் குலமகள் போல்" என்ற இலக்கியத்திற்கோர் இலக்கணமாக விளங்குகின்றது.

இனி, மாதவியின் தூயகாதல் நெறிப்பட்ட கற்பு வாழ்வையும் இளங்கோவடிகள் மதித்து வரவேற்கின்றார். மாதவி தன் காதலனின் மனைவியாகிய கண்ணகியை, மிக மேலாக மதிக்கின்றாள். இங்ஙனம் மாதவி கண்ணகியை வெறுத்துரைக்காமல் போற்றி மதிக்குஞ் செயல், அவளின் அடக்கத்தையும் கற்பையும் காட்டுகின்றது. குரவர்பணி அன்றியும் குலப்பிறப்பாட்டியோடு இரவிடைக் கழிதற்கு என் பிழைப்பறியாது என ஏங்குகின்றாள். கண்ணகியைக் குலப்பிறப்பாட்டி எனக் கூறி உள்ளம் தழைக்கும் மாதவி, குலமகளிரின் கற்பொழுக்கத்தைத் தலைமிசைக்கொண்டு போற்றுகின்றாள் என்பதை உணர்கிறோம். இங்ஙனமெல்லாம் சிறந்த இயல்புகள் பொருந்திய மாதவி, கானல்வரியில் சிறிது தவறி விட்டாள். கோவலன் வேறொரு மங்கைமேல் தான் காதல்கொண்டு வருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதாகக் கற்பனை செய்து, கானல்வரி பாடினான். தன் காதலனாகிய கோவலன் வேறொரு மங்கையின் மேல் தான் காதல்கொண்டதாகப் பாடிய பாடலைக் கேட்ட மாதவி ஊடல் கொண்டாள். கோவலன் கையில் இருந்த யாழை வாங்கித் தானும் வேறோர் ஆடவன்மேல் காதல்கொண்டு வாடுவதாகக் கற்பனை செய்து, கானல்வரி பாடினாள். மாதவியின் காதற் பாட்டைக் கேட்ட கோவலனின் உள்ளங் கொதித்தது. உடனே அவன்,

கானல்வரி யான்பாடத்
தானொன்றில் மனம்வைத்து
மாயப்பொய் பலகூட்டு
மாயத்தாள் பாடினாள்

எனத் தன் மனத்தில் நினைத்துக்கொண்டு வெறுப்புடன் எழுந்து சென்றான். மாதவி வேறோர் ஆடவன் மேல் தான் காதல் கொண்டு வருந்துவது போல் பாடிய செயல் குலமகளாகிய கண்ணகியுடன் சிறிது கால மாதல் பழகிய கோவலன் உள்ளத்தில் சினத்தை எழுப்பி விட்டது. தன் கணவனை வேறொரு மங்கை மேல் காதல்கொள்வதை அவனின் தலைவி அறிந்தால் ஊடல் கொண்டு தன் கணவனைத் திருத்த முயல்வாள்; அல்லது இறந்து படுவாளேயன்றித் தானும் வேறோர் ஆடவனின் மேற் காதல் கொண்டதாகத் தன் கணவனுக்குக் காட்டவேண்டுமென்று கனவிலும் நினைக்க மாட்டாள். இங்ஙனம் குலப்பெண் ஒருத்தி நினைத்தாளென்று கூறும் தமிழ் இலக்கியம் ஒன்றுமேயில்லை. மாதவி மாசுமறுவில்லாத கற்புடையவளாய்க் கோவலனையே தன் அன்புக் கணவனாகக் கொண்டு குலமகள் போல வாழ்ந்தாள். என்றாலும், அவளின் குலப்பழக்கம் முற்றும் நீங்கவில்லை. வாய் காவாமல் ஊடல் மிகுதியால் தானும் வேறோர் ஆட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்மேற் காதல் கொண்டு வருந்துவதாகப் பாடிக் கோவலனால் வெறுக்கப் பட்டாள். 'கானல்வரி யான் பாடத் தான்ஒன்றில் மனம் வைத்து' எனக் கோவலன் கூறும் மொழிகளில் யான் கூறிய கருத்துப் பொதிந் துள்ளது மாதவி தன்னைவிட்டு வேறொருவனைக் காதலிக்கின்றாள் என்று கூற நா எழாமையால், 'தான் ஒன்றில் மனம் வைத்து' எனக் கூறினான். 'மாயப்பொய் பல கூட்டு மாயத்தாள்' என்பதால், மாதவி பல ஆண்டுகளாகத் தன்மேல்கொண்ட காதல் வாழ்வு முழுப் பொய் வாழ்வு என்றே கோவலன் எண்ணி விட்டான் என்பதை உணரலாம். இதனை,

சலம்புணர் கொள்கைச்
சலதியோ டாடிக்
குலம்தரு வான்பொருட்
குன்றம் தொலைந்த
இலம்படு நாணுத்தரும்

எனக் கோவலன் கண்ணகியிடம் கூறுகின்ற மொழி களும் உறுதிப்படுத்துகின்றன. பரம்பரையாக வரும் தீய பழக்கம் எத்துணைப் பண்புகள் சான்றவரிடத் தும் நீங்காது நின்று தீமை புரியும் என்பதை மாதவி யின் கானல்வரிப் பாட்டால் அவளுக்கு நேர்ந்த இன் னல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

"... ... ... நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென் றோர்—மணி
யாரம் படைத்த தமிழ்நாடு"

எனப் பாரதியார் சிலப்பதிகாரத்தை விதந்தேத்துதல் முற்றிலும் பொருத்த முடையதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2004-4-26
LIBRARY.

மணிமேகலை



க. செ. நடராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. செ. நடராசா அவர்கள் மணிமேகலை என்ற தமது சொற்பொழிவிற் கதை முழுவதையுஞ் சுருக்கமாகக் கூறியுள்ளமை படிப்போருக்கு வழிகாட்டுவதாயுள்ளது. பின்னர், இந்நூலை இயற்றியுள்ள கூலவாணிகன் சாத்தனாரைப் பற்றியும், சிலப்பதிகாரத்துக்கும் மணிமேகலைக்கும் உள்ள தொடர்பைப் பற்றியும் கூறுகின்றார். பதிகங்களைக் கொண்டு சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஒரே காலத்தெழுந்த நூல்கள் என்பதாகப் பலர் கூறினாலும், பதிகங்கள் பிற்காலத்தில் யாராலோ எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்றும், சிலப்பதிகார நடைக்கும், மணிமேகலை நடைக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறதென்றும் விளக்குகிறார். சிலப்பதிகாரம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலும், மணிமேகலை கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிலும் இயற்றப்பட்டிருக்கலாம் என முடிவு செய்துள்ளார். கூலவாணிகன் சாத்தனார் சம்பந்தமான ஆராய்ச்சிக்கும் அவர் பேச்சு வித்திட்டுளளது. பெருங்காப்பியங்கள் ஐந்து என மயிலைநாதரே முதன்முதலிற் குறிப்பிட்டுள்ளார். அவர் காலம் பதினான்காம் நூற்றாண்டு. ஆனால், அவர் அப்படிக் குறிப்பிடும் பெருங்காப்பியங்களாகிய சிலப்பதிகாரமும், மணிமேகலையும் சில அம்சங்களில் குறைவுபடுகின்றன எனக் கூறும் ஆசிரியரது வாதம், சிலப்பதிகாரச் சொற்பொழிவால் ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டிருப்பதை வாசிப்போர் உணர்வர்.

- இரசிகமணி கனக செந்தில்நாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவலன் கண்ணகியைக் கைவிட்டு, மாதவியுடன் சில காலம் வாழ்ந்து வந்தான். அப்பொழுது, கோவலனுக்கும் மாதவிக்கும் மகளாகப் பிறந்தாள் மணிமேகலை.

கோவலன் கொலையுண்டிறந்த துயரம் பொறுக்க மாட்டாத மாதவி துறவறம் பூண்டாள். தன் மகளாய மணிமேகலையையும் நல்வழிப்படுத்தக் கருதி, துறவற நெறியிலே சேர்த்தாள்.

அவ்வாண்டு காவிரிப்பூம் பட்டணத்திலே நடைபெற்ற இந்திர விழாவிலே மாதவியும் மணிமேகலையும் ஆடல் விருந்தளிக்கச் செல்லாதிருந்தமை, எல்லோருக்கும் பெருவியப்பை ஏற்படுத்திற்று.

ஒருநாள் மணிமேகலையும் அவள் தோழி சுதமதியும் மலர் கொய்ய உவவனஞ் சென்றபோது, மணிமேகலைமீது காதல் கொண்டிருந்த உதயகுமாரன் என்ற இளவரசன் அவளை நாடி அங்கு சென்றான். அதையறிந்த மணிமேகலை அங்குள்ள பளிங்கறையிலே புகுந்து தப்பிக் கொண்டாள். அவ்விடத்தை விட்டு வெளியேற அஞ்சி நின்ற மணிமேகலை முன் மணிமேகலா தெய்வந் தோன்றி, அவளை மணிபல்லவத்துக்கு எடுத்துச் சென்றது. அங்கே புத்த பீடிகையினைத் தரிசித்துத் தன் பழம் பிறப்புணர்ந்தாள். மணிமேகலா தெய்வம் அங்கு தோன்றிப் பறந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் மந்திரத்தையும், வேண்டியபோது வேற்று உருக் கொள்ளும் வன்மையையும், பசிப்பிணியால் வாடாத சக்தியையும் அவளுக்களித்தது. மணிபல்லவத்துள்ள குளத்திலிருந்து அமுத சுரபியென்ற பாத்திரம் அவள் கைக்கு வந்தது. மணிமேகலை அங்கிருந்து ஆகாயத்தின் வழியே காவிரிப்பூம் பட்டினமடைந்து, அங்கு ஆனைத் தீயால் வருந்திய காயசண்டிகைக்கும் பிறர்க்கும் அன்னம் வழங்கி, சிறைச்சாலையையும் அறச்சாலையாக்கினாள்.

மாதவியின் தாயாகிய சித்திராபதி, மணிமேகலையின் தவக் கோலங் கண்டு பொருளாய் அவளை மீண்டுங் குலத் தொழிலில் ஈடுபடுத்த எண்ணி, அரச குமாரனையண்டி மணிமேகலையை அவன் அடைய வேண்டுமென்று ஆசைகாட்டினாள். அவனும் அதற்குத் தயாராகி அன்னதானஞ் செய்துகொண்டிருந்த மணிமேகலையிடஞ் சென்றான். அவள் காயசண்டிகை உருவிலே கரந்து நின்று தப்பினாள்.

ஆனைத்தீ நோய் மாறிய காயசண்டிகை மணிமேகலையிடம் விடைபெற்றுத் தன்னூர் சென்றாள். அதையறியாத அவள் கணவன் காஞ்சனன் தன் மனைவியைத் தேடி வேறு வழியாகக் காவிரிப்பூம் பட்டினம் வந்து காயசண்டிகை உருவிலிருந்த மணிமேகலையைக் கண்டு, தன் மனையாளென்று களித்தான். மணிமேகலையே காயசண்டிகையாக உருமாறி நிற்கிறாளென்பதை அப்பொழுது தெரிந்துகொண்ட உதயகுமாரன் அவளை அண்டிக் கதைத்தான். அதைக் கண்ட காஞ்சனன் அவன்மீது சந்தேகங் கொண்டான். அன்றிரவு மீண்டும் உதயகுமாரன் அங்கு வந்தபோது அவன் சந்தேகந் தீர்ந்து உண்மையில் அவன் தன் மனைவியைக் காதலிக்கிறானென்

றெண்ணி வாளால் உதயகுமாரனை வெட்டி வீழ்த்தி விட்டு காயசண்டிகை உருவிலிருந்த மணிமேகலையைத் தன் மனைவியென்றே நிச்சயித்து அவளைக் கூட்டிச் செல்ல முயன்றான். அப்பொழுது அங்கு இருந்த ஒரு தெய்வம் அவள் அவன் மனைவியல்லள் என்ற உண்மையைப் புலப்படுத்திற்று. இச்சம்பவத்தைக் கண்டு கதறிய மணிமேகலையை கந்திற்பாவை என்ற தெய்வம் தேற்றி உதயகுமாரனின் முற்பிறப் பின் வினையால் அது நிகழ்ந்ததென்று ஆறுதல் கூறிற்று.

மணிமேகலையிருந்த அம்பலத்து வாழந்த முனிவர்கள் அரசகுமாரன் இறந்த செய்தியை அரசனுக்கு அறிவித்தனர். அரசகுமாரனின் தீச்செயல் கேட்டு இரங்கிய அரசன், அதற்குக் காரணமாயிருந்த மணிமேகலையை சிறையிலிட்டான். அவள்மீது வெறுப்புற்ற இராசமாதேவி, மணிமேகலைக்குப் பலவித இன்னல்களைப் புரிந்து வந்தாள். மணிமேகலையை ஒழிக்கத் தான் செய்த சூழ்ச்சிகள் ஒன்றும் பலிக்காததை அறிந்த இராசமாதேவி அஞ்சி, மணிமேகலையிடம் மன்னிப்பு வேண்டினாள். மேலும் அங்கிருக்க விரும்பாத மணிமேகலை ஆகாய வழியே சென்று நாகபுரம் என்னும் நாட்டை அடைந்து, அங்குள்ள அரசனுக்கு மணிபல்லவத்துள்ள புத்த பீடிகையின் சிறப்பைக் கூறி அவனை அங்கு சென்று அதை வணங்கச் செய்தாள். மணிமேகலையும் அங்கு சென்று வணங்கிவிட்டு, வஞ்சி மாநகரம் சென்று, பத்தினிக் கடவுளை வணங்கிவிட்டு, பலதிறப்பட்ட சமயவாதிகளின் மதக் கொள்கைகளைக் கேட்டுத் தெளிந்து, காஞ்சிநகரம் சென்றாள். அங்கு அறவண அடிகளுஞ் சென்று, அவள் மதப் பக்குவத்தை அறிந்து, பௌத்த தருமத்தை உபதேசித்தார். மணிமேகலை அவ்வழியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று, தவம் செய்து பேரின்பமெய்தினாள் என்பது கதை.

மணிமேகலை என்ற நூலை இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப மதுரைக் கூல வாணிகன் சாத்தன் மணிமேகலை துறவு என்ற பெயரால் முப்பது கதைகளாகச் செய்துள்ளான்.

இவர் பெயர் சீத்தலைச் சாத்தனார் என்றும் வழங்கும். சீத்தலை என்பது அவர் பிறந்து வளர்ந்த ஊரின் பெயர் என்பர் சிலர். மற்றுஞ் சிலர், பிறர் பிழையாகப் பாடல் செய்தால் அதைக் கேட்டுச் சகிக்க முடியாது, எழுத்தாணியாலே தன் தலையிற் குற்றிக் கொள்வாரென்றும், அதனால் அவர் தலையிலிருந்து எப்பொழுதுமே சீழ் வடிந்து கொண்டிருக்குமென்று கூறி, அக்காரணத்தினாற்றான் அவருக்குச் சீத்தலைச் சாத்தனார் எனப் பெயராயிற்று என்பர். 'வள்ளுவன் முப்பாலாற்றலைக் குத்துத் தீர்வு சாத்தற்கு' என்ற மருத்துவன் தாமோதரனார் திருவள்ளுவ மாலைப் பாடலை அதற்குச் சான்று காட்டுவர்.

ஒருமுறை இந்தச் சாத்தனார் சேர நாட்டுக்குச் சென்றிருந்தபோது ஒரு சம்பவம் நிகழ்ந்தது. மலை வளங் காணச்சென்ற சேர மன்னனை அண்டி, அம் மலை நாட்டு மக்கள், அங்கு நடைபெற்ற ஓர் அற்புதத்தைச் சொன்னார்கள். மங்கையொருத்தி முலையிழந்தாளாய்த் தேவருடன் வானுலகஞ் செல்லக் கண்டோம் என்றனர். அஃது என்ன அற்புதமாயிருக்கிறதே என்று வியந்தபோது, இந்தச் சாத்தனார் 'யானறிவன் அதுபட்டது' என்று கண்ணகியின் கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைக் கூறினான். அதைக்கேட்ட இளங்கோ அதனைச் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் நூலாக்கினான். அதனைக் கேட்டு முதலில் அங்கீகரித்தவர் மதுரைக் கூல வாணிகன் சாத்தன் என்பர்.

கண்ணகி கதையை நூலாக்கச் சீத்தலைச் சாத்தனார் முதலில் எண்ணியிருந்தார் என்றும், அக்கதையைச் சொல்லக்கேட்ட இளங்கோ அடிகள்,

அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டு மென்தூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரணமாக
சிலப் பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்'

என்று கூறி, மங்கல வாழ்த்துப் பாட ஆரம்பித்து விட்டமையால், அதனை விடுத்து மாதவி மகளாய மணிமேகலை கதையைச் சாத்தனார் பாடினாரென்றுஞ் சிலர் கூறுவர்.

சிலப்பதிகாரப் பதிகத்தில்,

'இவ்வா றைந்தும்
உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்
உரைசால் அடிகள் அருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. மணிமேகலைப் பதிகத்தில்,

'இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ட
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவண் தமிழ்த்திறம் மணிமேகலைதுறவு
ஆறைம் பாட்டினுள் அறியவைத் தனனென்.'

என்று கூறப்பட்டிருக்கிறது. இவற்றிலிருந்து இளங்கோ அடிகளும் மதுரைக் கூலவாணிகன் சாத்தனும் ஒரே காலத்தவர் என்று தெரிகிறதென்பர் சிலர்.

கண்ணகிக்குக் கடவுள் மங்கலஞ் செய்தபொழுது, கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் சேரர் தலைநகர்க்குச் சென்றிருந்தானெனச் சிலப்பதிகாரம் கூறும். இந்தக் கயவாகு என்பான் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்தவனென மகா வம்சம் முதலிய இலங்கைச் சரித்திர நூல்கள் காட்டும். ஆதலால், இளங்கோ அடிகள் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டெனவும், சிலப்பதிகார மெழுந்த காலமும் அதுவே யெனவுங் கொள்ளலாம்.

பதிகத்தைக் கொண்டு காலக் கணக்குப் பார்ப் போர் மணிமேகலை ஆசிரியரும் அதே காலத்தவர் தான் என்று முடிவு செய்வர். ஆனால், மணிமேகலை என்ற நூல் செய்யப்பட்டிருக்கும் யாப்பு முறையும், சிலப்பதிகார அடிகளும் திருக்குறள் அடிகளும் மணிமேகலையில் அப்படியே எடுத்தாளப்பட்டிருக் கும் முறையும், சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஒரே காலத்தில் எழுந்திருக்க முடியாவென்பதை வலி யுறுத்துகின்றன. ஆனால், அவ்விரு நூற் பதிகங்களும் அவ்விதம் கூறுகின்றனவேயென்றால், அப்பதிகங்கள் பிற்காலத்திற் பிறரால் எழுதப்பட்டனவாதல் கூடும். தம் பாயிரத்தில் 'உரைசால் அடிகள் அருள' என்று தன்னைச் சிறப்பித்து இளங்கோவும், 'வளங்கெழுகூல வாணிகன் சாத்தன்' என்று தன்னைப் புகழ்ந்து சாத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாரும் கூறியிருக்க மாட்டார். எனவே, அப்பதிகங்கள் பிறர் செய்தனவேயாம். மணிமேகலையிற் காணப்படும் ஆசிரியப் பாவின் அமைப்பு, இரண்டாம் நூற்றாண்டுச் செய்யுள் அமைப்புக்குப் பெரிதும் வேறுபட்டதாய் இருக்கிறது. ஆசிரியப்பா முழு வளர்ச்சிபெற்ற காலத்திலோ, அதற்குப் பின்னோ தான் மணிமேகலை செய்யப்பட்டிருத்தல் வேண்டும். சிலப்பதிகாரக் காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் ஆசிரியப்பா இருந்த நிலைக்கும், ஐந்தாம் நூற்றாண்டளவில் ஆசிரியப்பா இருந்த நிலைக்கும் அதிக வித்தியாசமுண்டு. மணிமேகலையில் உள்ள ஆசிரியப்பா, 5ஆம் நூற்றாண்டிற்கோ அதற்குப் பிற்பட்ட காலத்துக்கோ உரிய நடை உடையதாகவே காணப்படுகிறது.

அன்றியும், சிலப்பதிகாரத்தில் வரும் சில அடிகள் அப்படியே மணிமேகலையிலும் எடுத்தாளப்பட்டிருக்கின்றன. எடுத்துக் காட்டாக,

(அ) சிலப்பதிகாரத்திலே, இந்திரவிழாவூர் எடுத்த காதையில்,

> "வச்சிரக் கோட்டத்து மனங்கெழு முரசம்
> கச்சை யானைப் பிடர்த்தலை ஏற்றி" என வருகிறது.

அதே அடிகள் மணிமேகலையிலே விழாவறை காதையில் அப்படியே வருகின்றன.

(ஆ) "பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி" என்ற அடிகள் சிலப்பதிகாரத்து இந்திரவிழாவூர் எடுத்த காதையில் வருகின்றன. அதே அடிகள் மணிமேகலையில் விழாவறை காதையிலே அப்படியே வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) "அரும்பெறல் மாமணி யோங்குதிரைப்
பெருங் கடல் வீழ்த்தோர் போன்று"

என்பது சிலப்பதிகாரத்தில் வரந்தரு காதையில் வரும் அடிகள். அவற்றை மணிமேகலையில் ஊரலருரைத்த காதையிலும் காணலாம்.

(ஈ) "தாரன் மாலையன் தமனியப் பூணினன்
பாரோர் காணாப் பறர்தொழு படிமையன்"

சிலப்பதிகாரத்திலே அடைக்கலக் காதையிற் காணப் படும் இவ்வடிகள் மணிமேகலையிலே மலர்வனம் பூக்க காதையிற் காணப்படுகின்றன.

(உ) "பன்மலர் அடுக்கிய நன்மலர் பந்தர்
இலவந் திகையின் எயிற்புறம் போகி"

சிலப்பதிகார நாடுகாண் காதையிலும், மணிமேகலை மலர்வனம் புக்க காதையிலும் காணப்படும் அடிகள் இவை.

(ஊ) "தோரண நிலைஇய தோமறுபசும் பொற்
பூரண கும்பத்துப் பொலிந்த பாலிகை
பாவை விளக்குப் பசும் பொற்படாகை"

என்று சிலப்பதிகாரத்திலும்,

"தோரண வீதியும் தோமறு கோட்டியும்
பூரண கும்பமும் பொலம்பாலிகைளும்
பாவை விளக்கும்" என்று மணிமேகலையிலும்
வருகின்றன.

மேலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(எ) "வந்தேனெஞ்சின் மணிமேகலையான்"
"ஐம்பெருங் முழுவும் என்பேராயமும்"
"நுதல் விழிநாட்டத் திறையோன்"

என்பன போன்ற தனி அடிகள் அவ்விரு நூல்களிலும் ஆங்காங்கு செறிந்து கிடக்கின்றன.

இவற்றிலிருந்து, மணிமேகலை சிலப்பதிகாரத்துக்குப் பிற்பட்ட நூலே என்பது தெரிகிறது. சிலப்பதிகாரத்தை நன்கு பயின்ற ஒருவரே மணிமேகலையை எழுதியிருத்தல் வேண்டும்.

சிலப்பதிகாரத்திற் கூறப்படும் மதுரைக் கூலவாணிகன் சாத்தன் சிலப்பதிகாரப் பதிகத்தின்படி, சைவனாதல் வேண்டும். அப்பதிகத்திலே அச்சாத்தன் கூறியனவாகச் சொல்லப்பட்ட வார்த்தைகள் இவை:

"அதிராச் சிறப்பின் மதுரை மூதூர்க்
கொன்றையஞ் சடைமுடி மன்றப் பொதியில்
வெள்ளியம்பலத்து நள்ளிருட் கிடந்தேன்."

அச்சாத்தனார் சைவரல்லரேல், சிவபெருமான் உறையும் வெள்ளியம்பலத்தே நள்ளிருட் கிடக்க அவருக்கென்ன வேலை? ஆகவே, சிலப்பதிகாரத்தே கூறப்பட்ட மதுரைக் கூல வாணிகன் சாத்தன் சைவனேயாம். ஆனால், மணிமேகலை எழுதிய கூலவாணிகன் சாத்தன் பௌத்த மதக் கொள்கையை விட ஏனைய சமயாசாரங்களையெல்லாம் மணிமேகலையிலே இகழ்ந்துள்ளான். யாகத்தையும், வேதியர் சமயாசாரத்தையுங்கூடப் பழித்துள்ளான். பௌத்த மதத்தையே பெரிதும் பாராட்டிச் சீராட்டியுள்ளான். எனவே, மணிமேகலை எழுதிய சாத்தனார் சைவனாயிருந்திருக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், சிலப்பதிகாரத்தைக் கேட்டு அங்கீகரித்த சாத்தன், அதிலே கூறப்படுஞ் சமண சமயச் சிறப்புகளையும் அங்கீகரித்தவனாவன். ஆனால், மணிமேகலை எழுதிய சாத்தனார் சமண சமயத்தையே அதிகமாகத் தாக்கியிருக்கிறார். எனவே, அவ்விருவரும் ஒருவராதல் எவ்வாறு கூடும்? இக்காரணங்களைக் கொண்டு பார்த்தால், மணிமேகலை நான்காம் ஐந்தாம் நூற்றாண்டளவிலே சிலப்பதிகாரத்திற் கூறப்பட்ட கூலவாணிகன் சாத்தனாராலன்றிப் பிறிதொரு சாத்தனாரால் எழுதப்பட்டிருத்தல் வேண்டுமென்பது தெளிவாகிறது. ஒருவன் சைவன்; மற்றவன் சைவத்துக்கும், சமணத்துக்கும் எதிரானவன்; பௌத்த சார்புள்ளவன்.

இனி, மணிமேகலைக்குக் காப்பிய விழாவெடுக்கும் இந்நாள், அது பெருங் காப்பியமான தெவ்வாறென்பதையும் சற்று ஆராய்வோம். சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐந்து நூல்களையும் ஐம்பெருங் காப்பியங்கள் என்று பற்பல அறிஞர்கள் பேசுவர். முதலிலே இவற்றை ஐம்பெருங் காப்பியங்கள் என்று பேசியவர் நன்னூலுக்குரை செய்த மயிலைநாதர் ஆவர். மயிலைநாதர் 14ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்தவர். எனவே, ஐம்பெருங் காப்பியம் என்ற பிரயோகம் பதினான்காம் நூற்றாண்டுக்குப் பின்னரே வழங்கியிருக்கிறது. அதற்குமுன் அவ்விலக்கியங்களைத் தொகுத்து ஐம்பெருங காப்பியங்கள் என்றுரைத்தாரில்லை. மயிலைநாதர் காலத்தின் பின், பலரும் அவ்வைந்து நூல்களையும் தொகுதியாகக் குறிப்பிடுமிடத்து, ஐம்பெருங் காப்பியங்களென்றே சொல்லி வந்தனர். ஆனால், அவற்றை நன்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ந்து பார்த்தால், அதற்கு மாறுபாடான சில உண்மைகளைக் காணலாம் காப்பியம் என்பது தமிழ் மொழிக்குரிய நூல் வகையைச் சேர்ந்ததொன்றன்று. காப்பியமென்ற பதமே 'காவ்ய' என்ற வட மொழிப் பதத்தின் திரிபாகும். வட மொழியிலேயே முதலில் காவியங்கள் எழுந்தன. சங்க கால நூல்கள் எதுவும்—அதாவது பத்துப் பாட்டு, எட்டுத் தொகையாயன—காவியங்களா யமையாததற்குரிய காரணம், அம்முறை தமிழில் இருக்கவில்லையென்பதுவே.

பெருங் காப்பிய மென்றால் எப்படியிருக்க வேண்டுமென்பதற்கு ஒரு விதி இருக்கிறது. அதனைத் தண்டியலங்கார ஆசிரியர், 'பெருங்காப்பிய நிலை பேசுங்காலை' எனத்தொடங்கி, 'கற்றோர் புனையும் பெற்றியதென்ப' ஈறாகப் பெருங் காப்பியத்திற்கான இலக்கணத்தை மிக நேர்த்தியாகச் சொல்லிவிட்டார். 'அறம் - பொருள் - இன்பம் - வீடு ஆகிய நாற்பொருளையும் உள்ளடக்கித் தன்னிகரில்லாத் தலைவனை உடைத்ததாகப் பெருங் காப்பியம் மிளிர்தல் வேண்டும். இரட்டைக் காப்பியங்கள் என்றழைக்கப்படும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தண்டியலங்காரர் கற்பிக்கும் இலக்கணங்களுக்கு பொருந்துவனவாக அமைந்துள்ளனவா?

சிலப்பதிகாரம், இவ்விலக்கணத்தின்படி சில வகையிற் குறைவுடையதாகிறது. தன்னிகரில்லாத் தலைவனாகக் கோவலன் விளங்கினானா...? நாற்பொருள் பயக்கும் நடை நெறித்தாயது சிலப்பதிகாரமெனின், காப்பியத் தலைவன் அறம் பொருள் இன்பமாகிய புருடார்த்தங்களை அனுபவித்து வீடு பேறு அடைந்தானா...? பொன்முடி கவித்தானா? இவற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லெல்லாம் குறைவுபடும் நூல் எவ்வாறு பெருங் காப்பியமாகலாம்...?

மணிமேகலையோ வெனின் அறத்தையும் வீட்டையுமே கூறிநிற்கும். பொருளும் இன்பமும் ஆங்கு கூறப்படவில்லை. தன்னிகரில்லாத் தலைவனாங்கில்லை. இன்னும் பெருங்காப்பிய இலக்கணத்திற் பல அதிற் குறைவுபட்டிருக்கின்றன. அதனால், அது பெருங்காப்பியமெனப் பேசப்படும் தகுதியற்றதென்றே சொல்ல வேண்டும். வளையாபதியும் குண்டலகேசியும் பூரண நூல்களாகக் கிடைத்தில. சீவக சிந்தாமணியொன்றே பெருங்காப்பிய இலக்கணமமைந்த நூலாகும்.

○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டலகேசி
வளையாபதி



ச. தனஞ்சயராசசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங் காப்பியங்களிலே மறைந்து போன குண்டலகேசி, வளையாபதி என்ற இரண்டு நூல்களையும் பற்றித் தனஞ்சய ராச சிங்கம் ஆற்றியுள்ள சொற்பொழிவு இந் நூல்களுக்கு ஓர் ஏற்றத்தையே கொடுத்துள்ளது. சோழர் காலத்து அரசியல், வணிகம், சமயம் ஆகிய மூன்றின் நிலை பற்றிய சிறிய ஆராய்ச்சி இக்காவியங்களுக்குப் பின்னணியாக அமைந்துள்ளது. அதேபோல எலிசபேத் மகாராணி காலத்து இங்கிலாந்தின் கலைவளத்தையும் அவர் தொட்டுக்காட்டிவிட்டு, வைசிய குலமக்களை வைத்து இலக்கியம் செய்ததைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். மறைந்து போன குண்டலகேசியின் கதையை நீலகேசியுரை, தேரிகாதை என்பவற்றின் உதவியுடன் ஆசிரியர் சுருக்கமாகச் சொல்லியுள்ளார். குண்டலகேசி என்ற பெயரைப் பற்றிய பல முடிபுகளை ஆசிரியர் மறுத்துரைக்கும் இடம் வலுவுள்ளதாக இருக்கின்றது. அடுத்து, 'பெருங்காப்பியமென்றால் என்ன?' என்பதற்குத் தண்டியாசிரியர் கூறிய சூத்திரத்தையும் விளக்கத்தையும் ஆசிரியர் எழுதியுள்ளார். குண்டலகேசிக்குப் போட்டியாக எழுந்த வளையாபதிக் கதையையும் ஆசிரியர் விவரிக்கிறார். இக்கதை, 'உண்மையான வளையாபதிக் கதைதானோ' என ஆசிரியர் எழுப்பும் ஐயம் வாசிப்போருக்கும் எழுதல் நியாயமே. குண்டலகேசிக்கும், வளையாபதிக்கும் ஒவ்வொன்றாக இரு பாடல்களை ஆசிரியர் அறிமுகஞ் செய்துள்ளார். இறுதியில் குண்டலகேசியும் வளையாபதியும் மறந்தமைக்கு உரிய காரணங்களை ஆசிரியர் எழுதியுள்ளமை நன்றாக உள்ளது.

- இரசிகமணி கனக செந்தில்நாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டலகேசியும் வளையாபதியும

வட நாட்டினின்றும் தமிழ்நாட்டிற்கு வந்த சமயங்களான பௌத்தம் சமணம் பற்றியனவாயும வைசிய குலத்தலைவியரைப் பற்றியனவாயும் விளங்குகின்றன. ஐம்பெருங்காப்பிய வரிசையிற் கணிக்கப்படும் இவ்விரு நூல்களும் எழுந்த சூழலையறிவதற்குச் சோழர் காலத்து அரசியல், வணிகம், சமயம் ஆகிய மூன்றின் நிலைபற்றிய செய்திகள் துணைசெய்கின்றன.

தமிழநாடு இராசராசன், இராசேந்திரன் முதலிய சோழப் பேரரசர் ஆட்சியிற் பகை, பிணி போன்ற துன்பங்களின்றிச் செல்வச் செழிப்புடன் செழித்தது. இலக்கதீவு, முரட்டெழில் ஈழம், கடாரம் முதலிய பிறநாடுகளுஞ் சோழப் பெருமன்னரின் ஆட்சிக்குட்பட்டன. சோழ நாட்டிற் பல்கலைகளும் வளர்வதற்குரிய சூழல் ஏற்பட்டது நடனம், இசை, சிற்பம, ஓவியம் போன்ற நுண்கலைகளில் மன்னரும் மக்களும் ஈடுபட்டனர். இவ்விரு திறத்தாருஞ் சமயத்தைப் புறக்கணிக்கவில்லை. அவர்கள் அதனையும் வாழ்வின் இன்றியமையாத கூறெனக் கருதினர். இக்காலத்து மக்கள் மன்னனைக் கடவுளென மதித்தனர். மன்னன் கோயில்களுக்கு அளித்த பொருட்கள் "தேவராசா" (கடவுள் மன்னன்) என வழங்கப்பட்டன. நாம் இவ்வழக்கில் மன்னன் கடவுள் அம்சம் பெற்ற தன்மையைக் காண்கிறோம். சங்ககாலத் தொகை நூல்களில் மன்னர் கவிதைக்குப் பொருளாகும் மரபு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகிறது. பிற்காலத்தில் அம்மரபு செவ்வனே வளர்த்துவரப்பட்டது. களவழி நாற்பது, நந்திக் கலம்பகம், முத்தொள்ளாயிரம், ஆசிரியப் பாவில் உதயணன் கதையைச் சித்திரிக்கும் பெருங் கதை முதலியன இதற்குச் சான்றாவன. சோழர் காலத்தில் முதலில் எழுந்த பெருங்காப்பியமாகிய சீவகசிந்தா மணியும் சீவகனென்னும் மன்னனைப் பற்றியது. திருத்தக்க தேவரோ வவர்க்குப் பின்வாழ்ந்த சோழர் காலப் புலவரோ தாம் வாழ்ந்த சூழ்நிலையையும் சோழப் பேரரசின் மாட்சிமிக்க ஆட்சியினையும் விடுத்து இலக்கியம் இயற்ற முடியவில்லை. அவர்கள் சோழமன்னரின் சிறப்பியல்புகளை வாய்ப்பு வாய்த்த பொழுதெல்லாம் தாம் படைத்த விலக்கியப் பாத்தி ரங்களில் ஏற்றிக் கூறினார்கள். திருத்தக்கதேவர் சிந்தாமணியின் ஏமாங்கதநாட்டு வருணனையைச் சோழநாட்டின் செழிப்பினை அடிப்படையாகக் கொண்டுதான் பாடினார். கம்பன் ''காவிரி நாடன்ன கழனிநாடு'' எனப் பாடினான். சேக்கிழார் சுந்தர ரின் ஊரையுந் நாட்டையுஞ் சிறப்பித்துப் பாடாது சோழநாட்டையே விரித்துப் பாடினார். திண்ணனா ரின் தந்தையாகிய நாகனின் ஆட்சிச் சிறப்பினைப் படிக்கும்பொழுதும் சோழரின் குடிநலம் ஓம்பியா ளுஞ் சிறப்புத்தான் எம் நினைவிற்கு வருகிறது. அரச விசுவாசம், நாட்டுப்பற்று முதலிய நல்லியல்புகள் பேரிலக்கியப் புலவராகிய திருத்தக்கதேவர், கம்பன் முதலானோரிடம் மட்டுமன்றிச் சிற்றிலக்கியப் புலவ ராகிய சயங்கொண்டான், ஒட்டக்கூத்தர் முதலா னோரிடமுங் குடிகொண்டன. சயங்கொண்டான் கலிங்கத்துப் பரணியில் விசயதரன் புகழை யெடுத் துரைத்தான். ஒட்டக்கூத்தர் குலோத்துங்கன்மீது ஒரு பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தத்தை யியற்றினார். இவர் தக்கயாகப்பரணியில் இரண்டாம் இராசராசனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுவமையாலும் பிறவற்றாலும் பாராட்டினார். மூவருலாவில் விக்கிரமசோழன், இரண்டாம் குலோத் துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகியோர் சிறப் பிக்கப்படுகின்றனர். நன்றியுணர்ச்சி கொண்ட சோழப்புலவர் மன்னருடன் தம்மையாதரித்த வள்ளல் களையும் புகழ்ந்தார்கள். கம்பன் சடை யப்ப வள்ள லையும், புகழேந்தி சந்திரன்சுவர்க்கியையும் ஏற்றிப் பாடியதை நோககுக. இக்காலத்தில் எழுந்த நாடகங் களும் மன்னர் புகழைப் பாடினவென்பதை "இராச ராசேசுவர நாடகம்" முதலியவற்றினால் அறி கிறோம்.

இத்தகைய விலக்கியச் சூழலிலே குண்டலகேசியும் வளையாபதியும் சோழ மன்னரைப் பாத்திரமாகக் கொள்ளாமலும் அவர் குலப்பெருமையையும் பிறவற் றையும் விளக்குவதை விடுத்ததும் வைசிய குலத்தவர் களுக்கு முதன்மை கொடுத்ததும் பலர்க்கு வியப்பு அளிக்கக்கூடும். இளங்கோவடிகள் மன்னர்க்கு அடுத்த நிலையில் வாழ்ந்த பெருங்குடி வணிகரைக் கவிதைக் குப் பொருளாக வமைக்கவில்லையா? அவர் வகுத்த வழியிற் குண்டலகேசி, வளையாபதியாசிரியர் சென் றனர். சோழர் காலத்து வணிகர் சிலப்பதிகாரஞ் சித்திரிக்குங் காவிரிப்பூம்பட்டினம், மதுரை முதலிய விடங்களில் வாழ்ந்த வணிகரைவிடப் பன்மடங்கு செல்வாக்குடன் வாழ்ந்தார்கள். இவ்வுண்மையினைப் பேராசிரியர் நீலகண்டசாத்திரி 'சோழர்' என்னும் வரலாற்று நூலில் வணிகம் பற்றி யெழுதியவற்றி னால் அறிகிறோம். அவர் கருத்தின்படி சோழர் காலத்தில் வணிகர் வணிகத்தின் பொருட்டுக் கழகங் களை யமைத்தனர். இதற்கு 'நானா தேச திசையா யிரத்து ஐந்நூற்றவர்' என வழங்கிய வணிகர் கழகம்

லூர் எடுத்துக்காட்டு. இது போன்ற சழகங்கள் ஐரோப்பியர் சில நூற்றாண்டுகளுக்குப்பின் கிழக்கு நாடுகளிற்றம் செல்வாக்கினை நிலைநாட்டுவதற்கு அமைத்த 'கிழக்கிந்திய வணிக கழகம்' (East India Company) போன்றவற்றை யொத்தன. சுமத்திரா போன்ற வெளிநாடுகளுடனும் நானா தேச திசையாயிரத்து ஐந்நூற்றுவர் வணிகம் நடாத்தினரென அந் நாட்டுக் கல்வெட்டொன்றனால் அறிகிறோம். இக் கழகத்தினர் அரசியற் கட்டுப்பாடு எதுவுமின்றிப் பல நாடுகளுக்குச சென்று வணிகத்தினாற் பெரும் பொருளினை யீட்டினர். அவர்கள் சென்ற விடமெல்லாந் தம் செல்வாக்கினுக்கேற்ற சீருஞ் சிறப்புடனும் வரவேற்கப்பட்டனர். தாய்நாட்டில் மத்திய அரசாங்கமும் அதன் கிளைகளும் அவர்களுக்குத் தகுந்த மதிப்பை யளித்தன. அவர்கள் தம் பண்டங்களைப் பண்டசாலைகளிலும் அவற்றினின்றும் எடுத்துச் செல்லும்பொழுதும் பாதுகாப்பதற்கெனப் படைவீரரையமைத்தனர். தாம்வாழும் இடங்களின் பொது நலனைக் கருதி யுழைத்தனர். உள்நாட்டு அரசியலிலும் பங்கு கொண்டனர். காஞ்சீபுரம், மாமல்லபுரம் முதலிய விடங்களிற் சிறு வணிக கழகங்கள் 'நகரம்' என வழங்கின. இவ்வாறு சோழ வணிகரின் சிறப்பிருந்தமையாற் குண்டலகேசி, வளையாபதியாசிரியர் பெருங்குடி வணிகன் பெருமடமகளை யிலக்கியப் பாத்திரமாகக் கொண்டனர். இவர்கள் மன்னரும் மக்களும் மதித்த வைசிய குலத்தவரைத் தம் இலக்கியங்களின் சிறப்புப் பாத்திரங்களாகக் கொணடதில் வியப்பதற்கு யாதுள்ளது? இங்கிலாந்து பதினாறாம் நூற்றாண்டில் எலிசபெத்து (Elizabeth) மகாராணியின் ஆட்சியில் ஒரு வல்லரசாகத் திகழ்ந்தது. அவரின் ஆட்சிக்கு முன்னரே செயலிலே துணிவுடைய வசுகொட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமா (Vasgodagama) முதலிய கடற்படைவீரர் கிழக்கு நாடுகளிற்குச் செல்லும் வழிகளைக் கண்டு பிடித்துத் தாய்நாட்டின் புகழை நிலைநாட்டினர். பிரான்சிசு திரேக்கு (Francis Drake) முதலிய கடற் படைவீரர் பிறநாட்டுக் கப்பல்களை வழிமறித்து அவற்றைக் கொள்ளையடித்துப் பெருஞ் செல்வத் தைத் திரட்டினர். பிறநாடுகள் இங்கிலாந்து வல்லர சாக வளர்வதைக் கண்ணுற்றுப் பொறாமை கொண் டன. எலிசபெத்து மகாராணி நாடகம் போன்ற கலைநிகழ்ச்சிகளை யாதரித்தார். இச்சூழலிலே சேக்சு பியர் (Shakespeare) போன்றோர் மன்னர் பற்றிய நாடகக் காப்பியங்களையே யியற்றினார்கள். எனி னும், இலியரெனும் மன்னன் (King Lear) இயூலியசு சீசர் (Julius Ceasar) இறிச்சாட்டு (Richard III) கென்றி (Henry V) மக்குபெத்து (Macbeth) போன்ற மன்னர் பற்றிய விலக்கியங்களைப் படைத்த சேக்சுபி யர் அவர் காலத்திற் செல்வாக்குப் பெற்றிருந்த வைசிய குலத்தவரையும் பாடாது விடவில்லை. வைசிய குலத்தவர் பெருஞ் சிறப்புடன் வாழ்ந் தமையாலன்றோ அவர் வெனிசு வணிகன் (Merchant of Venice) ஒதெல்லோ (Othello) வாகிய வணிகர் பற்றிய நாடகங்களை யெழுதி னார். இவற்றினாற் பெறும் உண்மை சிறப்புடன் வாழும் மன்னரும், மக்களும் புலவனின் உணர்ச் சிக்கும் அனுபவத்திற்கும் விருந்து அளிப்பதால் உயர்ந் தனவும் உயிர்த்துடிப்பு வாய்ந்தனவுமான விலக்கியங் கள் எழுகின்றனவென்பதாகும்.

நாம் சோழர் காலச் சமயநிலையினை நோக்கின் அக்காலத்திற் சமண சமயம் பௌத்தத்தை விடச் சிறப்புப்பெற்றதெனச் 'சோழர்' என்னும் வரலாற்று நூல் வாயிலாக வறியலாம். இராசராசனின் அக்கை யாகிய குந்தவையார் இராசராசபுரத்திலுந் திருமள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடியிலுஞ் சமணப்பள்ளிகளைக் கட்டுவித்து அவற்றின் பரிபாலனத்திற்குப் பொருட்கொடையுஞ் செய்தார். இராசராசன் தென்னார்க்காட்டுத் திருநறுங்கொண்டையென்ற விடத்திலுள்ள பெரிய பள்ளியில் இரு விளக்குகள் நாடோறும் ஏற்றிவருமாறு நிலக்கொடை செய்தான். சமணப்பள்ளியைக் கொண்டவிடம் 'பள்ளிச்சந்தம்' எனவழங்கியது சோழர்காலத்திற் பள்ளிச்சந்தங்களுக்கு வரி விதிக்கப்படவில்லை. சீற்றாமூர், செங்கல்பட்டு, திருப்பாண்மலை, விளாப்பாக்கம் முதலியவிடங்களில் சமணப் பள்ளிகள் சோழமன்னர் ஆதரவுடன் சமயப் பணிபுரிந்தன. கி. பி. 885ம் ஆண்டளவில் பெரிய சமணப் பள்ளியொன்றில் வாழ்ந்த பெண்துறவிக்கும் அவளின் ஐந்நூறு மாணவர்களுக்குமிடையே வேதோ கலகம் விளைந்ததெனக் கூறப்படுவதிலிருந்து இக்காலத்துச் சமணரின் தொகையினையுஞ் செல்வாக்கினையும் நாம் ஓரளவு கணிக்கலாம். இச்சூழலிற்றான் சிந்தாமணி, வளையாபதி போன்ற சமண இலக்கியங்கள் எழுந்தன.

இராசராசன் போன்ற பரந்த நோக்கங்கொண்ட சோழ மன்னர் பௌத்த சமயத்தையும் ஆதரித்தனர். தஞ்சைப் பெருவுடையார் கோவிலிற் பௌத்த சமயக் கோட்பாடுகளை விளக்கும் உருவங்களும் ஓவியங்களும் இடம் பெற்றன. முதலாங் குலோத்துங்கன் நாகப்பட்டினத்திலுள்ள பௌத்த விகாரைக்கு உதவியளித்தான். நாகபட்டினம், திருமூலவாசம் முதலியன பௌத்த சமயத்தவர் பெருந்தொகையில் வாழும் இடங்களாகக் காட்சியளித்தன. இச்சூழலிற் குண்டலகேசி யெழுந்தது.

இன்று குண்டலகேசி வளையாபதியாகிய நூல்கள் முழுவடிவிலில்லை. குண்டலகேசிச் செய்யுட்களிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில புறத்திரட்டிலும் நீலகேசியுரையிலும் வீரசோழிய வுரையிலும் உள்ளன. யாப்பருங்கலவிருத்தியுரை யாசிரியரும் வீரசோழியவுரையாசிரியரும் குண்டல கேசியின் பாச்சிறப்பினைக் குறிப்பிட்டனர். குண்டல கேசிக் கதையின் சுருக்கம் நீலகேசியுரையிற் கூறப்பட் டுள்ளது. இவ்வரலாறு பௌத்த தேரிகாதையிலும் உண்டு. இவற்றிற் காணப்படும் குண்டலகேசியின் வரலாறு வருமாறு: பத்திரையென்ற பெண் ஒருநாள் காளன் என்ற கட்டழகனைக் காவலாளர் கொண்டு செல்வதைக் கண்டாள். அக்கட்டழகனுக்கு அவன் நிகழ்த்திய பல களவுகள் கண்டுபிடிக்கப்பட்டதால், மன்னனாற் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டதை யறிந்தாள். அவளின் றந்தை யவள் அவன்மேற் கொண்ட காதலையறிந்து மன்னன் விதித்த தண் டனையினின்று அவனை விடுவித்து மகளுக்கு மணஞ் செய்வித்து வைத்தான். ஒரு நாள் குண்டலகேசி யூட லின்பொழுது காளனின் பழைய களவுநிலையைச் சுட் டிக் காட்டினாள். காளன், அவள் அவ்வாறு சுட்டிக் காட்டியதைப் பொறுக்காது அவளைக் கொல்லும் நினைவுடன் ஒரு மலையுச்சிக்குக் கூட்டிச் சென்றான். அங்கு சென்றவுடன் தன் எண்ணத்தையவளுக்கு வெளிப்படுத்தினான். அவளோ தற்கொல்லியை முற் கொல்ல வேண்டுமென்பதை யறிந்தவளாதலாற்றான் இறப்பதற்குமுன் கணவனிடம் அவனை வணங்கி வலம்வர விடுமாறு வேண்டினாள். காளனும் அதற்கு இசையவே யவள் வலம் வருவதுபோற் காளன் பின் புறஞ் சென்று அவனைக் கீழே தள்ளிக் கொன்றாள். இதற்குப்பின் அவள் பௌத்த துறவுபூண்டு பிற சமய வாதிகளுடன் வாதித்து அவர்களை வென்றாள். ஈற் றில் முத்தியடைந்தனள். தேரிகாதை இவள் முதலில் சமணத்தைச் சார்ந்து பின் அதனைவிட்டுப் பௌத் தத்தைச் சார்ந்தாள் என்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டலகேசியென்ற பெயரே ஆய்விற்குரியது. இப்பெயர் சுருண்ட மயிரைக் கொண்ட பெண் ஒருத்தியைக் குறிக்கும் என்பர். 'கேச' என்ற வட மொழிப் பெயர் இகரவீற்றுப் பெற்றுக் 'கேசி' (கேசம் அல்லது மயிரையுடையவள்) என வழக்குப் பெற்றதென்று நாம்கொள்ள முடியாது. ஏனெனில், 'கேசி' என்ற வீற்றுடன் வாத நூலகள் பலவுண்டு என்பதைக் ''குண்டல நீல பிங்கல அஞ்சன கால தரிசன தத்துவ கேசிகள்'' என்னும் யாப்பருங்கல விருத்தியுரையினால் அறிகிறோம். 'கேசி' என்பது வாத நூலைக் குறிக்குஞ் சொல்லெனத் துணிவோமாயின் 'குண்டலம்' என்ற பெயரடைக்குச் 'சுருண்டு சிக்கலான'வென்ற பொருளைக் கொள்ளுதலே பொருத்தமெனலாம். சமணம் முதலிய பிற சமய வாதிகள் கூறுஞ் சிக்கலான சமயக் கருத்துக்களைச் சிக்கல் அறுத்து எதிர்க்கும் ஆற்றல் படைத்த நூல் ஆகையாற் குண்டலகேசியெனப் பெயர் பெற்றது என்று நாம் கோடலாம் இப்பொருளுக்கு மாறாகப் பௌத்தத் துறவி ஒருத்தி சுருண்ட மயிரினால் அழகு பெற்றுக் காணப்பட்டமையால் அப்பெயரினைப் பெற்றாளென்று கொள்வது பேதமையின் பேரெல்லையாகும். பெண்ணொருத்தி பௌத்தத் துறவு கொள்ளின் அவள் கேசம் (தலைமயிர்) களையப் படுவது வழக்கமென்பதை யறியாதாரும் உண்டோ? பத்திரை யென்பவள் இல்லற வாழ்விற் சிறப்புற்ற பொழுது சுருண்ட மயிரினால் அழகுடன் விளங்கினாளெனக் கொள்ளவும் இடமில்லை அவ்வாறாயின் பத்திரையென்ற அவள் இயற்பெயர் மறைந்துவிடும். இவளின் தலைமயிர் சமயப் பள்ளியிற் களையப்பட்ட பொழுதும் அது மீண்டும் வளர்ந்து சுருண்டதாற் குண்டலகேசியென அவளை யழைத்தனரென்போர் கூற்றும் பொருந்தாது. துறவுகொண்டவள் எவளா

யினும் தன் கேசத்தினை வளரவிடாது காலத்துக் காலம் மழித்தல் சீரிய துறவொழுக்கங்களில் ஒன்று ஆகையால் பத்திரையும் அக்குற்றத்திற்கு ஆளாகி யிராளென நாம் துணியலாம்.

மணிமேகலை பௌத்தநத்தினையும் வணிகர் குலக் கோவலனின் மகளாகிய மணிமேகலையின் துறவு வாழ்க்கையினையும் பிற சமயப் பழிப்புரைகளையுங் கொண்டு விளங்குகிறது. இந்நூல் மணிமேகலை யெனனும் பெண்துறவி பெயரால் வழங்குகிறது. சாத்தனாரின் மணிமேகலையைப் பின்பற்றி நாத குப்தனாரும் இவ்வியல்புகளைக் குண்டலகேசியில் அடக்கினாரெனலாம்

இன்று எமக்குக் கிடைத்துள்ள குண்டலகேசிக் கதையினையுஞ் செய்யுட்களையும் வடமொழித் தண்டியின் காவியாதர்சத்தினைத் தழுவித் தமிழில் எழுந்த தண்டியலங்காரம் கூறும் பெருங்காப்பிய விலக்கணங்களைக் கொண்டு ஆராயின் அவை அவ் விலக்கணங்களுள் அடங்காவென்பது உறுதிப்படும்.

காப்பியமென்பது வடமொழிச் சொல்லாகிய 'காவ்ய' என்பதின் தமிழாக்கமாகும். தண்டி வட மொழியில் எழுதிய காவ்யா தர்சத்திற் காப்பிய விலக்கண விரித்துரைத்துள்ளார் அவ்விலக்கணங் களைத் தமிழில் அணிநூலியற்றிய தண்டி ஆசிரியர் வருமாறு கூறுகிறார் :

பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றினொன்
றேற்புடைத் தாகி முன்வர வியன்று
நாற்பொருள் பயக்கு நடைநெறித் தாகித்
தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைகட னாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றமென் றினையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழி னுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தலென்
றின்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரந் தூது செலவிகல் வென்றி
சந்தியிற் றொடர்ந்து சருக்க மிலம்பகம்
பரிச்சதே மென்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப.

பெருங்காப்பியமானது வாழ்த்து, வணக்கம், வருபொருள் ஆகிய மூன்றனுள் ஒன்றினைப் பெற்றதாயும் பாயிரத்தோடு வருவதாயும் அமைதல் வேண்டும். அதன் தலைவன் தனக்கு ஒப்பாருப் மிக்காரும் இல்லாதவனாகச் சிறந்து விளங்குதல் வேண்டும். தலைவன் அறம், பொருள், இன்பம், வீடாகிய நான்கு பொருளினையும் அடைவதாகக் கூறுதல் வேண்டும். மலை, கடல், நாடு, நகர் முதலிய இயற்கை வருணனைகளிலும், வைகறை, விடியம், நண்பகல், மாலை, எற்பாடு, யாமம் முதலிய சிறுபொழுதுகளிலும், கார், கூதிர், முன் பனி, பின் பனி, இளவேனில், முதுவேனில் முதலிய பெரும்பொழுதுகளிலும், ஞாயிறு, திங்களின் றோட்டம் முதலிய வருணனைகளிலும் பெரும்பாலான அதில் இடம் பெறும். மணஞ் செய்தல், முடிசூடுதல், சோலையில் இன்புறுதல், புனல் விளையாடல், மதுவுண்டு இன்புறுதல், புதல்வரைப் பெறுதல், கூடல், ஊடல் முதலிய நிகழ்ச்சிகளும் காப்பியத்திற் கூறப்படும். மந்திராலோசனை, தூது செல்லுதல், போருக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லல், போர்தொடுத்தல், வெற்றி முதலியன தொடர்ச்சியாகக் கூறப்படுதல் வேண்டும். இவை யாவும் சருக்கம். இலம்பகம், பரிச்சேதம் என்ற உட்பிரிவுகளுள் ஒன்றனைப் பெறுதல் வேண்டும். காப்பியமானது மெய்ப்பாட்டுக் குறிப்பினையும் வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகையாகிய எண்வகைச் சுவைகளையும் பெற்றுச் சான்றோரினாற் புனையப்பட்டு விளங்கும். தண்டியலங்காரத்திற் கூறப்படும் பொன் முடிகவித்தல், மந்திரம், தூது. செலவு, இகல், வென்றி முதலிய விலக்கணங்கள் அரசர்க்கே பொருந்துவன. இதையுணர்ந்தன்றோ திருத்தக்கதேவர், கம்பர் முதலானோர் மன்னர் பற்றிய கதைகளைத் தம் காப்பியங்களுக்குத் தேர்ந்தெடுத்தனர். வைசிய குலத்தவளாகிய குண்டலகேசி முடிசூடியதாகவோ போரிட்டதாகவோ கூறப்படவில்லை. அவள் பௌத்தத் துறவுபூண்டு தூய வாழ்க்கையினைத் தொடங்கியது முடிசூட்டியதற்கும் பிற சமயவாதிகளைப் போரிட்டு வென்றது இகல், வென்றி முதலியவற்றிற்கு சமயத்தைப் பரப்பும் வழிவகைகளை ஆராய்ந்து மந்திரத்திற்குஞ் சமமானவையென வலிந்து பொருள்கொள்வோமா? பௌத்த பிக்குணியாகிய குண்டலகேசியை யவள் வாதஞ்செய்யும் ஆற்றலொன்றனையே பொருட்படுத்தி யவளைத் தன்னிகரில்லாத் தலைவி என நாம் கொள்வதா? பொதுவான இலக்கியங்களில் வரும் சிறுவரைப் பெறுதல் போன்ற செய்திகளெளினும் இந்நூலில் இடம்பெறவில்லை. குண்டலகேசியினை யொரு சமயப் பிரசார நூலாகவே கொள்ளலாம்

குண்டலகேசிச் செய்யுட்களிலொன்று வருமாறு :

பாளையாந் தன்மை செத்தும்
பாலனாந் தன்மை செத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளையாந் தன்மை செத்துங்
காமுறு மிளமை செத்தும்
மீளுமிவ் வியல்பு மின்னே
மேல்வரு மூப்பு மாகி
நாளுநாட் சாகின் றாமால்
நமக்குநா மழாத தென்னோ

நாம் இப்பிறப்பிற் பாளை, பாலன், காளை முதலிய பருவங்களை அடைகின்றோம். குறித்த வொரு பருவத்தில் நிலையான வாழ்வினை நாம் நடத்துவதில்லை. பருவங்கள் பல நம்மை விரைவாகத் தொடர்கின்றன. அப்பருவங்களுக்கு ஏற்ற முறையில் நம் எண்ணங்களுஞ் செயல்களுந் திகழ்கின்றன. பலருங் காமுறுகின்ற இளமைப் பருவத்தை நாம் அடைந்து விட்டோமென்று இன்புறும் பொழுதே அப்பருவம் மின்னல்போலத் தோன்றி மறைந்து மூப்பிற்கு இடம் அளிக்கிறது. நாடோறுந் நாம் செத்துக் கொண்டிருக்கிறோம். நாள் என்பது எம் வாழ்வினை முடிக்கும் வாளாகும். ஒவ்வொரு நாளின் முடிவும் எம் வாழ்வின் சுருக்கத்தினைத்தான் உணர்த்துகிறது. இந்நிலையிலே முற்றாக விறந்தவருக்காக நாம் இறங்கி அழுவது பேதமை நாமும் அவர் கதியினை, விரைவில் அடைய நாடோறுஞ் செத்துக் கொண்டிருக்கிறோம். முற்றாக பிறந்தவருக்கும் நாடோறுஞ் செத்துக் கொண்டிருப்பவருக்கும் உள்ள ஒற்றுமையியல்பினை யுணர்ந்து நாம் அழுகையினை விடுதல்வேண்டுமெனக் குண்டலகேசி ஆசிரியர் யாக்கை, இளமை, முதலியவற்றின் நிலையாமையினை விளக்குகையில் எடுத்தியம்புகிறார்.

சமண-பௌத்தர் தத்தம் இலக்கியங்களுக்கு ஏற்ற மணிக்கும் பொருட்டு வடமொழி மரபுபற்றி 'ஐம் பெருங் காப்பியம்' (பஞ்ச காவ்ய) என்ற சிறப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கினை வழங்கினர். இவ்வழக்கில் மணிமேகலை, சிலப்பதிகாரம், சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதியாகிய சமண — பௌத்த நூல்களே யிடம் பெற்றன. இந்நூல்களின் ஆசிரியர்க்குப் பின்வாழ்ந்த சமண பௌத்த வுரையாசிரியர் இவ்வழக்குப் பெரு வழக்காக வழங்குமாறு தத்தம் உரைகளில் அதனைக் குறிப்பிட்டனர். சமயப் பொறுமையுள்ளம் படைத்த பிற சமயவுரையாசிரியரும் அவர்கள் கூற்றினைத் தம்முரைகளிற் கையாண்டனர். பெருங்காப்பிய இலக்கணங்கள் யாவற்றையுங் கொண்ட வைணவ நூலாகிய கம்பராமாயணம் சமயப் பொறாமை காரணமாகப் பெருங்காப்பிய வழக்கிற் சேர்க்கப்பட வில்லை. விசயாலய வழியில் வந்த ஆதித்தியசோழன் வைணவரைத் துன்புறுத்தியதன் விளைவாக நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தில் அவன் உயிரிழந்ததும், இரண்டாம் குலோத்துங்கன் சிதம்பரத்திலுள்ள விட்டுணு விக்கிரகத்தை அப்புறப்படுத்த முயன்ற கதையுஞ் சோழர் காலத்தில் வைணவ சமயம் வீழ்ச்சியுற்றதைக் குறிக்கின்றன. முன்பு சமண பௌத்த சமயங்களை எதிர்ப்பதற்கு ஒன்றியுழைத்த சைவ வைணவ சமயங்கள் இவ்வாறு பிளவுறின் அவற்றிற்கும் பிற வற்றிற்குமிடையே யிக்காலத்தில் நிலவிய பகை யினைக் கூறவேண்டுமா? சமணர் சிந்தாமணிக்கு ஏற்றமளிப்பதற்காகச் சேக்கிழார் திருத்தக்கதேவரின் இலக்கியத்திற் பொறாமை கொண்டு பெரிய புராணத்தை யியற்றினாரென்ற கட்டுக்கதையைப் பரப்பினர்.

இச்சமயப் போர்ச்சூழலிலே குண்டலகேசிக்குப் போட்டியாக வளையாபதி எழுந்தது வளையாபதிச் செய்யுட்களிற் சில சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய வுரையிலும் புறத்திரட்டிலும் யாப்

பருங்கல விருத்தியுரையிலுங் காணப்படுகின்றன. வைசிய புராணத்தில் வரும் 'பஞ்சகாவியத் தலைவரில் வைர வாணிபன் வளையாபதி பெற்ற சருக்கம்' என்பது வளையாபதிக் கதையைக் கூறுமென்பர். அக் கதை வருமாறு: 'நவகோடி நாராயணன் என்னும் வணிகன் தன் குலப் பெண், வேறு குலப்பெண் ஆகிய விரு பெண்களை மணந்தான். அவன் உறவினர் வேறு குலப் பெண்ணை மணந்ததற்காக வவனை ஒதுக்கி வைக்க முற்பட்டனர். இதனை யவன் அறிந்து அப் பெண்ணைப் பிரிந்து தன் குலப் பெண்ணுடன் வாழ்ந் தான். அவ்வேற்றுக் குலப்பெண் தன் கணவனை அடைவதற்காகக் காளிதேவியை நாடோறும் வழி பட்டாள். அவள் கணவனைப் பிரியும்பொழுது கரு வுற்றிருந்தாள். சின்னாட்களுக்குப் பின், ஓர் ஆண் மகனை யீன்றாள். அம்மகன் வளர்ந்து பள்ளி செல்லும் நாட்களில் ஒருநாள் அவனுக்லத் தன் தந்தை பற்றிய வையம் ஏற்படும் நிகழ்ச்சி ஒன்று அங்கு நிகழ்ந்தது. இதனாற்றன் தாய்வாயிலாகத் தந்தைபற்றிய வரலாற்றைக் கேட்டறிய நேரிட்டது. பின்பு அவன் தன் தந்தைபாற் சென்று தன்னை வெளிப்படுத்தினான். தந்தையவனைத் தக்க சான் றின்றி யேற்க மறுத்துவிட்டார். ஆனால் தாயும் மக னும் காளிதேவியைத் தம் உறவிற்குச் சாட்சியாகத் தோற்றுவித்து அவனையேற்கப் பண்ணினர். ஈற்றில் அவ்வணிகன் இரு மனைவியருடனும் பிள்ளைகளு டனும் ஒன்றி வாழ்ந்தான்

வளையாபதியின் கதைப்போக்கு மேற்கூறிய வாறு அமைந்திருக்குமென நாம் கொள்ள முடியாது. வளையாபதியொரு சமண விலக்கியமென வறி கிறோம். வைசிய புராணம் கூறும் வளையாபதிக் கதையிற் காளிக்கு முதன்மை அளிக்கப்பட்டிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. காளி வழிபாடு சிறப்பித்துக் கூறப்படுங் கதை சமணவிலக்கியத்தில் இடம்பெறாது. கணவனைப் பிரிந்து அல்லலுறும் பெண்ணொருத்தி தன் றுன்பம் நீங்கிக் கணவனை அடையும் கதைப் போககிற்கும் சமணத்தின் மேன்மையை விளக்க வந்த வளையாபதிக் கதைக்கும் வேற்றுமையுண்டு. இக்கதை வளையாபதி கணவனை யீற்றில் அடையாது துறவு பூண்டாளென முடிந்திருந்தால் அதனை நாம் ஓரளவிற்கு ஏற்கலாம். ஆகையால் வளையாபதிக் கதையின்று எமக்குக் கிடைக்கவில்லையென்று நாம் துணியலாம். எமக்குக் கிடைத்துள்ள வளையாபதிச் செய்யுட்களிலிருந்து அது ஓர் அறவொழுக்க நூலெனவறியலாமே ஒழிய வதன் கதை, பிற செய்திகள் பற்றி ஒன்றும் அறிய முடியாது.

வளையாபதிச் செய்யுளொன்றின் நலனை ஆராய்வோம்.

தொழு மகனாயினும் துற்றுடை யானைப்
பழுமரம் சூழ்ந்த பறவையிற் சூழ்ப
விழுமிய ரேனும் வெறுக்கை யுலந்தால்
பழுமரம் வீழ்ந்த மறவையிற் போல

ஒருவன் அடிமையல்லது கீழ் நிலையிலுள்ளவனெனினும் செல்வமுடையவனாக விருந்தால் அவனைப் பயன்மரம் பழுத்தவிடத்துப் பறவைகள் சூழ்வது போல மக்கள் சூழ்வர். அவர்கள் அவனை யேற்றிப் போற்றி அவனிடம் உதவி பெறுவர். அவன் தாழ் குலத்தினைப் பொருட்படுத்த மாட்டார்கள். வள்ளுவரும் ''பயன் மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம் நயனுடையான் கட்படின்'' என்றார். ஒருவன் சீரிய வொழுக்கங் கொண்டவனெனினும், வறுமையுறின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை யொருவரும் நாடார். பறவைகள் பயன் றரு கின்ற மரத்தினைப் பழமுள்ளவரைதான் நாடுகின் றன. அம்மரமானது பழங்களை நல்காத காலத்திற் பறவைகள் அதனைவிட்டு நீங்குகின்றன இப்பறவை களின் இயல்பினையே மக்களும் கொண்டுளளனர். இப்பாட்டின் கருத்து **''Prosperity makes friends adversity tries them''** என்ற ஆங்கிலப் பழமொழியை யினிது விளக்குகின்றது. ஆசிரியர் செல்வத்தின் நிலையாமையைச் சிறந்த வுவமைவாயிலாக விளக்கு கிறார். அகத்தாரே வாழ்வாரென்று அண்ணாந்து நோக்கியவரும் புறக்கணிக்கும் வாழ்வு செல்வத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு செருக்குற்ற வாழ்க்கை நடத்துபவனுக்கு வருமென வெச்சரிக்கை செய் கிறார்.

குண்டலகேசியும் வளையாபதியுஞ் சமயப் போர்ச் சூழலில் எழுந்தன. அதே சமயப் போர்ச் சூழல் நீடித்தமையால் அவை மறைந்தனவென்று கொள்வோமா? மணிமேகலை, நீலகேசி போன்ற சமய நூல்கள் இன்றுவரை நிலைத்திருக்கும்பொழுது இவ்விரு நூல்கள் மட்டும் ஏன் மறைந்து போயின? சோழர் காலத்திலே சமயப் பகை ஒரு புது வழியில் வெளிப்படலாயிற்று. பல்லவர் காலத்திலே சம்பந்தர் முதலியோர் சமணருடன் வாதஞ்செய்து அவரைத் தோற்கடித்தனர். அக்காலத்தில் நிலவிய சமயப்பகை யினை அப்பரின் பாடல்களிலிருந்தும் அறியலாம். சோழர் காலத்திற் சமயப்பகையை வெளிப்படை யாகக் காட்டுந் தன்மை குறைந்துவிட்டது. அஃது இலக்கியங்களிற் றர்க்க முறையிற் பிற சமயங்களைத் தாக்கும் பண்பில் அக்காலத்தில் வெளிவந்தது. குண்டலகேசி, நீலகேசி முதலிய தர்க்க நூல்களை யொட்டியே அருணந்தி சிவாச்சாரியார் 'பரபக்கம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பிற மதங்களை யெதிர்த்து வாதிடும் பகுதியைத் தம் நூலில் அமைத்தார். சமணமும் பௌத்தமும், வைணவமும் சோழர்காலத்திலிருந்த நிலையினின்றும் பிற்காலத்திற் குன்றிவிட்டன. வைணவத்திற்கு கிருட்டிண தேவராயர் போன்ற நாயக்க மன்னர் ஓரளவு ஆதரவு அளித்தது உண்மை. இசுலாமியர், ஐரோப்பியர் ஆகியோர் தமிழ்நாட்டிற்கு வந்தமையால் அவர்கள் சமயங்களாகிய இசுலாம், கிறித்தவம், கத்தோலிக்கம் முதலிய புதிய சமயங்கள் அங்கு பரவின பௌத்த-சமணர்போலவே இப்புதியோரும் இலக்கியப் பணிபுரிந்தனர். சமண-பௌத்த சைவத் தருக்க நூல்களுக்குப் பதிலாக சைவ-கிறித்தவ, கத்தோலிக்க-கிறித்தவ கண்டனங்களும் தர்க்கங்களும் எழுந்தன. ஐரோப்பியர் அச்சுப் பொறியினைத் தமிழ்நாட்டிற்கு அறிமுகப்படுத்தும்வரையேட்டுச் சுவடிகளிலே நூல்களை யெழுதும் வழக்கம் வழங்கிவந்தது. ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் இலக்கியங்களைப் பேணுவதற்கு முயற்சி செய்தனர். தர்மபுரம், திருவாவடுதுறை முதலிய மடங்கள் தமிழ் நூல்களைப் பேணிவந்தன. சமண பௌத்தம் செல்வாக்கற்றுப் போகவே அச்சமய நூல்களைப் பேணும் பொறுப்புப் பிறசமயத்தவர்களிடஞ் சுமத்தப்பட்டது. இச்சூழலிலே குண்டலகேசி, வளையாபதியாகியவற்றின் ஏட்டுச் சுவடிகள் மறைந்தொழிவதில் வியப்பில்லை. தமிழ்நாட்டிற் பலர் தங்கள்முன்னோர்கள் சேர்த்து வைத்திருந்த சுவடிகளைப் பயன்படுத்த வகையறியாமல் இருந்தனர். பலர் காவிரியாற்றிலே சுவடிவிட்டும் அவற்றை நெய்யிற் றோய்த்து விதிப்படி, ஆகுதிபண்ணியும் அழித்துவந்தனரென டாக்டர் உ. வே. சாமிநாதையர் மறைந்துபோன வேட்டுச் சுவடிகள் பற்றிப் 'புதியதும் பழையதும்' என்னும் நூலிற் குறிப்பிட்டுள்ளார். இக்கதிதான் இவ்விரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களுக்கும் நேர்ந்ததோ? தஞ்சை சரசுவதி மகால் (Tanjore Saraswathy Mahal) சென்னைப் பழைய வேட்டுச்சுவடி நூலகம், (Madras Oriental Manuscript Library) மதுரைத் தமிழ்ச் சங்கம், திருவனந்தபுரம் அரசாங்க நூலகம் (Travancore Government Library) முதலிய நிறுவனங்கள் பழைய வேட்டுச் சுவடிகளை விலைகொடுத்து வாங்கியும் அவற்றை வேறு வழிகளிற் பெற்றுந் தமிழிற்குத் தொண்டாற்றி வருகின்றன. அவைகூட இவ்விரு நூல்களின் படிகளைப் பெற முடியாத நிலையிலுள்ளன. எனவே, குண்டலகேசியும், வளையாபதியும் சமயப் போரினாற் றோன்றி மறைந்த நூல்களென்று நாம் கருதலாம். ○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீவக சிந்தாமணி



சா. வே.

UNIVERSITY OF PERADENIYA
2004-4-26
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சு. வே.' அவர்கள் சீவக சிந்தாமணியின் சிறப்பை முகவுரை யாகக் கூறி, அககாப்பியத்தின் கதையைச் சுருக்கமாக விவரித்துள்ளார். இது வாசிப் போருக்கு வழிகாட்டியாக அமைந் துள்ளது. பின்னர் நூலாசிரியராகிய திருத் தக்கதேவர் பற்றியும், அவரைக் கடைச் சங்கப் புலவர்களோடு சேர்த்துக் கூறுதல் தகாது என்பதற்குரிய காரணத்தையும் விளக்கியுள்ளார். திருத்தக்கதேவர் சீவக சிந்தாமணியைப் பாட நேர்ந்த வரலாற் றையுந் தொட்டுக் காட்டியுள்ளார். சிந்தாமணிக் கதைக்குள்ள மூல கதை, நூலில் உள்ள இலம்பகங்கள், அவை கூறும் பொருள், சீவகனிடம் சிறந்து நின்ற குணங்கள், ஒவ்வொரு இலம்பகமும் எவ் வெவ் வகையில் விளக்குகின்றன என்பதை ஆசிரியர் கூறியுள்ள முறை ஒரு பாடத்தை ஆசிரியர் திட்டமிட்டு விளக்கும் முறை போல இருக்கிறது. பண்டிதமணி 'சி.க' விடம் இலக்கிய இரசனை பெற்றோர் எந்த நூலிலும் பாத்திர அமைப்பைப் பற்றியே முக்கியமாகப் பார்ப்பார்கள. 'சு.வே.' சிந்தாமணியின் பாத்திர அமைப்புக்கே முக்கியத்துவம் கொடுத்துள் ளார். 'சீவகன் பிறப்போடு சிந்தாமணி யின் கதையம்சம் முடிந்து விடுகிறது' என்ற 'சு.வே'யின் முடிவை, அந்நூலை வாசித்துப் பார்ப்போர் நிச்சயம் உணர் வர். சச்சங்கன், சீவகன், குணமாலை, சுர மஞ்சரி என்ற பாத்திரங்களை ஆசிரியர் நன்கு அறிமுகஞ் செய்துள்ளார். சீவக சிந்தாமணி 'மனத்தை யீர்த்து உவகையில் ஆழ்த்தவல்ல வருணனைச் சிறப்புக்கள் கொண்டது' என்று சில பகுதிகளையும் அறிமுகஞ் செய்துள்ளார்.

- இரசிகமணி கனக செந்திநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பெருங் காப்பியங்களுள்
முதலில் வைத்து எண்ணப்படும் பெருமையுடையது சீவக சிந்தாமணி. கற்பனைச் செழுமையினாலே, எதிர்காலத்தில் நாடும் மக்களும் வாழ வேண்டிய வகையை, இலக்கியத்தின் வரைவிலக்கணத்தை வரையறுக்க முயன்ற காப்பியங்களுக்கு ஏற்றதொரு வழிகாட்டியாய் விளங்கியது சீவக சிந்தாமணி. அதன் பெருமை பலபடப் பேசப்படுகிறதாயினும், குறிப்பிடத் தக்கதொரு வரலாற்றுக் குறிப்புமுண்டு. அக் குறிப்பு, பெரிய புராணம் எழுந்த கதையோடு தொடர்பு கொள்கிறது. 11ஆம் நூறறாண்டிலே சோழ வளநாட்டின் பெருமைக்குக் காரணமான 2ஆம் குலோத்துங்கன், சீவக சிந்தாமணியின் சொற் செருக்கு, பொருளாழம், கற்பனை நயம் என்பனவற்றில் மனத்தைப் பறி கொடுத்து அக்காவியத்தைப் பாராயணஞ் செய்வானாம். அதனைக் கண்ட அவனது மந்திரியான அருண்மொழித் தேவர் என்னும் சேக்கிழார், சீவக சிந்தாமணியின் தமிழச் சுவைக்கு நிகராகப் பெரிய புராணம் பாடி மன்னன் மனத்தைக் கவர்ந்தாராம். பெரிய புராணம் பிறந்த கதையிலே, சீவக சிந்தாமணியின் சிறப்பும் இழையோடுகிறது. இது வரலாறு சீவக சிந்தாமணியின் பெருமைக்கு இடும் வரலாற்று முத்திரை. அது நிறக;

கதை தழுவிய பாடலே காப்பியம் என்பது காப்பிய இலக்கணத்தின் உயிர். எனவே, சீவக சிந்தாமணிக் கதையினை விரிவுபடக்காட்டுவது இயலாதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினும், மிகமிகச் சுருங்கிய அளவிற் பேச வேண்டியது தவிர்க்க முடியாததாகிறது.

ஏமாங்கத நாட்டின் மன்னனான சச்சந்தன், தன் மனைவி விசையை மேற்கொண்ட காதலால், அரசியற் கருமங்களைத் தன்னமைச்சனான கட்டியங் காரனிடம் ஒப்படைத்து, அந்தப் புரத்திலே காதலின் பத்திலே தன்னை மறந்திருக்கிறான். அரசைக் கவர எண்ணிய கட்டியங்காரன், தக்க சந்தர்ப்பத்திலே, சச்சந்தனுடன் போர்தொடுக்க அவன் கருவுற்றிருந்த, தன்மனைவியைத் தானாக்கிய மயிற்பொறியிலேற்றி அனுப்பிவிட்டுப் போர் புரிந்து ஆவிதுறக்கிறான். மயிற்பொறியிற் சென்ற விசையை மயானமொன் றிலே இறங்கிச் சீவகனைப் பெறுகிறாள். சீவகன் கந்துக்கடன் என்னும் வணிகனிடம் வளர்ந்து, அச்சணந்தியடிகளிடங் கல்வி பயின்று நாமகளை மணக்கிறான். காளைப் பருவமெய்திய அவன், வேடர்களாற் கவரப்பட்ட பசு நிரைகளை மீட்டு, இடையர் தலைவனது மகளான கோவிந்தையாரைத் தன் தோழனான பதுமுகனுக்கு மணஞ்செய்விக் கிறான். பின்னர் அவன், பலபல சந்தர்ப்பங்களிலே, தன் திறமைகள் பலவற்றைக் காட்டி, காந்தரு வதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனக மாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை என்னுங் கன்னியர் பலரை மணக்கிறான். கட்டியங்காரனைப் போரிலே புறமுதுகு கண்டு அரசபோகமெய்திய சீவகன், ஈற்றிலே சோலையிற் கண்ட ஒரு நிகழ்ச்சியி னால் மனம் மாறி, மெய்யுணர்வு தலைப்பட்டு, தவ மேற்கொண்டு பரிநிர்வாணம் என்னும் பெறற்கரும் பேற்றைப் பெறுகிறான். இது சீவகன் கதையின் வெறுஞ்சட்டகம்; அக்கதையின் சுருக்கத்தின் சுருக் கம். இச் சுருக்கம் காப்பியத்தின் முழுப் பொலிவினை யும், சுவையனைத்தையும் காட்டவல்ல தன்றாயினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீவக சிந்தாமணி யென்னும் பெருங்காவிய மாளிகை யின் விதான வாயிலிலிட்ட மிதிகல்லாக அமையுமானால், அது, அதுகொண்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டதாகிறது.

இம்மாபெருங் காப்பியமான சீவக சிந்தாமணி யின் ஆசிரியர் திருத்தக்க தேவர், இவரைத் திருத்தகு மாமுனிவர், திருத்த முனிவர், தேவர் என்று பலபெய ரிட்டு அழைப்பர் அறிஞர். ''சோழ குலமாகிய கடலிலே பிறந்த வலம்புரி'' என்ற நச்சினார்க்கினியர் உரைக் குறிப்பு மூலம் இவர் சோழர் குலத்திலே பிறந்தவர் என்று அறிய இடமுண்டு. இவர் இளமையிலே அறிவு முதிரப்பெற்று, சமணத்துறவியாகி, தம்மாசிரியர் உடன்பாடு பெற்று இக்காம நூலாகிய சீவக சிந்தாமணியைப் பாடினார் என்று கதையுண்டு.

அன்றி, இவர் வாழ்ந்த காலம், இடம், இவரை ஆதரித்த பிரபுவின் பெயர் முதலியன யாதொன்றும் அறிந்துகொள்ள முடிவதில்லை. நூல்களுக்கும் நூற் பொருள்களுக்கும் முக்கியத்துவம் அளித்த தமிழ்நாடு புலவர்களின் வரலாற்றுத்துறையில் எள்ளளவு சிரத்தையும் எடுக்காமை வருந்தத் தக்கதே. என்றாலும், திருத்தக்கதேவர் வாழ்ந்த காலம் கி. பி. 10-ஆம் நூற்றாண்டள வென்பது தமிழ் வரலாற்றுத் துறை யில் ஈடுபட்ட ஸ்ரீ கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் கருத்து. இந்நூலிலே நச்சினார்க்கினியர் உரைக் குறிப்பொன்றிலிருந்து இவர் காலத்தை இதனினும் மூற்பட்டகால மென்றுங் கூறுவர். ''இந்நூலைத் தேவர் செய்கின்ற காலத்துக்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும்'' என்பதே அவ்வுரைக் குறிப்பு. அன்றியும் திருத்தக்க தேவர் வரலாற்றினை ஆராய்ந் தெழுதிய தமிழ்த்தாத்தா சாமிநாதையர் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரைக் கடைச் சங்ககாலப் புலவர்களோடு சேர்த்துரைப்பவர். நல்ல புலமை மிக்க செய்யுள் நூல்களை சங்க காலத்தோடொட்டிக் கூறும் ஆசை அன்று தொட்டு இன்றும் இருந்து வருகிறது. இந்நெறியால் வரலாறு மறைக்கப்படுகிறது. நச்சினார்க்கினியர், சாமிநாதையர் ஆகிய இருவர் கூற்றாலும் திருத்தக்க தேவரைச் சங்க காலத்துக்கு உயர்த்தி வைத்தல் பொருத்த முடையதாகக் காணப்படவில்லை. அதற்குரிய காரணங்கள் சில உண்டு. சங்கச் செய்யுள்கள் பெரும்பான்மையும் அகவற்பா, கலிப்பா வகையைச் சார்ந்தவை. அவற்றினுக்கடுத்ததாகவே வெண்பாவுக்கு இடமுண்டு. விருத்தப்பாவகை வளர்ச்சி பிற்காலத்திலே தோன்றியது. விருத்தப்பா வகையை மேற்கொண்டு மாபெருங் காப்பியம் பாடிய முதற் பெருமை திருத்தக்க தேவருக்கு இருந்திருக்கலாம். அன்றியும் அதீத கற்பனைகளுக்குச் சங்கத்தில் இடமில்லை. இயற்கையோடொட்டிய அளவான கற்பனைகளே சங்கச் செய்யுள்களில் இடம்பெற்றுள்ளன. சீவக சிந்தாமணியோடு சங்க காலத்துக்குச் செல்ல முடியாமற் றடுத்து நிற்கின்றன. அன்றியும் சங்ககாலத்திலே புத்த, சமண சமயக் கொள்கைகளுக்கு இடமில்லை; பிற்காலத்தில் எழுந்த ''நாலடி நான்மணி'' என்ற பாடலைக் கொண்டு அவற்றைச் சங்க நூலாக்கிக் காட்டுவது பொருத்தமுடையதன்று என பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தமது 'சங்கத் தமிழ்' என்ற கட்டுரையிற் குறிப்பிட்டுள்ளார்கள். இக்காரணங்களைக் கொண்டு ஆராயும் போது சீவக சிந்தாமணி 10-ஆம் நூற்றாண்டளவில் எழுந்ததெனவே கொள்ள இடமுண்டு.

இவை நிற்க; இந்நூலாசிரியரான திருத்தக்க தேவரைப் பற்றிய சில புனைகதைகளும் வழங்கி வரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. அவற்றுள் ஒன்று அவர் சிந்தாமணி பாட வேண்டிய காரணத்தை உள்ளடக்கிச் செப்புகின்றது. புலமைப் பேறடைந்த திருத்தக்க தேவர் மதுரையடைந்து ஆண்டுள்ள (சங்கப்) புலவர்களோடு அளவளாவி இருந்தார். அப்போது, அங்குள்ள புலவரொருவர் சமணத் துறவிகளுக்கு உலக நிலையாமையையும் துறவையும் பற்றிப் பாடத் தெரியுமே யன்றி, காமச்சுவை பற்றிப் பாடவராது என்றார். உடனே அவர் தம்மாசிரியரை யணுகிக் காமச்சுவை நனி சொட்டச் சொட்ட ஒரு காவியம் இயற்ற அனுமதி கேட்டார். அவர் துறவு நிலையின் முதிர்ச்சியை அறிய விரும்பிய ஆசிரியருக்கு 'நரி விருத்தம்' என்னும் நூலியற்றித் தன் துறவு நிலையை வெளிப்படுத்தினார். வியந்து பாராட்டிய ஆசிரியர் காமச்சுவை கெழுமிய சீவக சிந்தாமணி பாட அனுமதி வழங்கினார். இக்கதை, சீவக சிந்தாமணியினை ஏட்டு வடிவிலிருந்து நூல் வடிவாக்கித் தமிழுலகத்துக்களித்த உ. வே. சாமிநாதையர் கூறுவது.

திருத்தக்க தேவருக்கு திருக்குறளிலே மிக்க ஈடுபாடுண்டு. அது சமண சமயக் கொள்கைகளுக்குப் பெரிதும் பொருந்துவது. திருவள்ளுவர் அறவழி நின்று பொருள் செய்து இன்பம் அனுபவித்த ஒருவனே பூரண மனிதனாய், பற்றற்று துறவு நிலை எய்தற்கு அருகதையுடையவன் என்ற கொள்கை கொண்டவர். திருவள்ளுவரது திருக்குறளுக்கு ஓர் இலக்கியம் ஆக்கல் வேணடுமென்னும் அருட்டுணர்வால் அவரது கொள்கையைக் கடைப்பிடித்து, காமச் சுவையைப் பூரணமாக அனுபவித்த சீவகன் ஈற்றில் பற்றற்று முத்தியடைந்தான் என்று கருவையமைத்து சிந்தாமணி பாடினார். இவ்வாறு இன்றுள்ள தமிழ்ப் பேரறிஞர் கருதுவர். இக்கூற்று பொருத்தமுடையதாகப் படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு திருத்தக்க தேவர் தாம் இயற்றிய சிந்தாமணிக்கு மூலக்கதையாக வடமொழியிலுள்ள ஸ்ரீ புராணத்துள்ள 24ஆம் தீர்த்தங்கரராகிய ஸ்ரீ வர்த்தமானர் புராணத்துள்ள சீவக சரிதத்தைக் கொண்டார் என்று அறிஞர் கூறுவர்.

தமிழிலே தேவராற் பாடப்பட்ட சீவக சிந்தா மணி 13 இலம்பகங்கள் கொண்டது. இலம்பகம் என்பது அத்தியாயம். இஃது இன்பச் சுவையினையே விதந்து கூறும் நூலாதலின் பதின்மூன்று அத்தியாயங் களிலும் சீவகன் பலவகையிலே மணம்புரிந்த கதை கூறப்படுகிறது. அதனாலே சீவக சிந்தாமணிக்கு மண நூல் என்றொரு பெயருண்டு. முதலிலுள்ள நாமகள் இலம்பகமும், பின்னுள்ள மண்மகள் இலம்பகம் - முத்தியிலம்பகம் என்பனவும் முறையே வித்தை பயின்றமையையும் அரசு புரிந்தமையையும் துறவு நிலை எய்தி முத்தியடைந்தமையையுங் கூறுகின்றன. இரண்டாவதான கோவிந்தையார் இலம்பகம் சீவகன் தன் நண்பனான பதுமுகனுக்கு மணஞ்செய்து வைத் தமையைக் கூறுகிறது. ஏனையன சீவகன் காந்தரு வதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனக மாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை என்னும் மகளிர் பலரை மணந்த வகையைக் கூறுகின்றன. இவ்வாறு நூல்முழுவதும் மணம்பற்றிய செய்திகளே கூறப்படுகின்றன.

சீவக சிந்தாமணியினுடைய இத்தன்மையை அந் நூலுக்குரியதொரு இழுக்காகக் கொள்வோருமுண்டு. இன்பச் சுவையினை அளவு மீறி, வாழ்க்கைக்குப் பொருந்தாவகையிற் கூறியதாக வெறுப்புக் கொள் வோரும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீவக மன்னன் மகளிர் பலரை மணந்தான் என்ற தேவர் கூற்றுக்கு என்ன காரணம் இருக்கலாம் என்பதை ஆராய்தல் வேண்டும். அக்காலச் சமூகவாழ்வில், மன்னர்கள் குல முறையில் பலதார மணம் இருந்தது. தசரதச் சக்கரவர்த்திக்குப் பதினாயிரம் மனைவியர் இருந்தனர் என்ற செய்தி நாம் அறிந்ததே. இம்முறையினாற் சீவகனும் மகளிர் எண்மரை மணந்தான் என்று கொள்ளலாம்.

இதனினும் பார்க்கச் சீவகன் ஆண்களிலே சிறப்புடையோனென்று போற்றுதற்குரிய நற்பண்புகள் பல கொண்டிருந்தான் என்பதைக் காட்டுவதற்காக, அக்குணங்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு மங்கையை மணந்த நிகழ்ச்சியின் மூலங் காட்டினார் என்று கொள்ளலே சாலச் சிறப்புடைத்து. காந்தருவதத்தையை இசை வாதிலே தோற்கடித்து மணந்தான் என்னும் போது அவனது இசையாற்றல் புலனாகின்றது. குணமாலையை அசனி வேகமென்னும் பட்டத்து யானையிடமிருந்து காப்பாற்றினான் என்றால் நாம் அறியக்கூடியது யாது? இங்கு நாம் சீவகனின் அருளுணர்வை, இரக்க சிந்தையை அல்லவா காண்கிறோம்? பதுமை என்பாள் விடந்தீண்டி இறந்தபோது அவளது விடந் தணித்து அவளை மணந்தான். இங்கு அவன் கற்ற சில வித்தைகளின் உயர்வை, விடம் நீக்கிய ஒரு கலையின் மூலங் காணுகிறோம். கேமசரி என்பாளுக்குச் சாதாரண ஆடவர் எவரும் ஆடவராகத் தோன்றார்; அதனால் அவள் நாணமடைவதும் இல்லை. அஃதாவது அவள் சாதாரண ஆடவர் அழகில் மயங்கியதில்லை. இந்நிலையில் சீவகனைக் கண்டு மயங்கி நாணமடைந்தாள் என்றால் அதியற்புத சௌந்தரியமே காரணமாயமைகிறது. சீவகன் கனகமாலையை மணந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அவனது வில்லாண்மை புலனாகின்றது. விமலையின் தந்தையான சாகரதத்தன் கடையை சீவகன் அடைந்தபோது அவனிடம் பல காலமாக விலைப்படாதிருந்த மணியும் முத்தும் விலையாயின என்னும்போது, சீவகனிடம் அமைந்துள்ள தெய்வீகத் தன்மை வெளிப்படுகிறது. சுரமஞ்சரி ஆடவரையே கண்ணெடுத்தும் பார்க்காதவள், அவளைத் தந்திரஞ் செய்து, மயக்கிச் சீவகன் தன்வசப்படுத்தினான் எனில், பெண்களை மயக்கும் காமக்கலையில் அவன் வல்லவன் என்பதை உணர்கிறோம். ஈற்றில் தன் முறைப் பெண்ணான இலக்கணையை மணக்கிறான், வீரத்தின் பரிசாக. கட்டியங்காரனைப் புறங்கண்ட பின் அவளை மணக்கிறான். இங்ஙனம் ஒவ்வொரு பெண்ணையும் அவன் மணந்தபோது அவனது ஒவ்வொரு பெருங்குணம் வெளியாகிறது. அன்றியும் சீவகன் நங்கையர் எண்மரை மணந்த நிகழ்ச்சியைத் துறவுக் கொள்கையோடு ஒட்டிப் பார்க்கவும் முடிகிறது. உலக மாயையிற் சிக்கி, போக போக்கியங்களை முற்ற அனுபவித்த பின்னர், அதன்மீது இயல்பாகப் பிறக்கும் பற்றின்மையே துறவுக்குரிய வாயில். இது சமயங்கள் கண்ட முடிபு. இதன்படி பார்த்தால்; சீவகன் உலகத்து இன்பங்களைத் துறைபோக அனுபவித்தான். அதன்பின் துறவை மேற்கொண்டான், சீவகன் மூலம்—சீவகன் போகம் முழுதையும் அனுபவித்தான் என்பதைக் காட்டுவதற்காக மகளிர் எண்மரை மணந்தான் என்று கூறுவதன் மூலம்—உலகுக்கு ஒரு பேருண்மையைத் திருத்தக்க தேவர் உணர்த்தினார் என்றுங் கொள்ள முடியும்.

இனி, சீவக சிந்தாமணியிலுள்ள ஒரு சில பாத்திரங்களையும், பாத்திர அமைப்பையுங் காணல் நலம். சீவகசிந்தாமணியில் முதலிற் சச்சந்தன் வரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறான். அவன் தன் முழுமுதற் கடமையான அரசியலை மறந்து, தன் மனைவிமீது தணியா வேட்கைகொண்டு, அந்தப்புறமே கதியெனக் கிடக்கிறான். சான்றோர் பலர் நீதி முறையை எடுத்து உரைத்த போதும் அவன், கட்டியங்காரனிடம்—ஒரு கொடியவனிடம்—அரசை ஒப்படைத்து இன்பந்துய்க்கிறான். ஈற்றில் அழிவடைகிறான். இப்பாத்திரம் நம்மையெல்லாஞ் சிந்திக்க வைக்கும் வகையிற் படைக்கப்பட்டுள்ளது. சச்சந்தன் கொண்ட கழி பெருங் காமத்தின் வன்மையை, அவனுக்கு அமைச்சரும் அறவோரும் அறிவுரை கூறுவதன் மூலம் மேலுந் தாக்கமுறச் செய்கிறார். அன்றியும், கொடியோனான கட்டியங்காரனிடம் அரசை ஒப்படைத்த செயல் மூலம் காமம் அவன் கண்ணை மறைத்த தன்மையன்றி, அரச நீதியில் வழுவிய பரிதாபததுக்குரிய தன்மையையுங் காண முடிகின்றது. சச்சந்தன் சீவக சிந்தாமணியில் ஓர் உபபாத்திரமே யாயினும், எடுத்த எடுப்பிலேயே ஆசிரியர் தமது கொள்கைகளை வலியுறுத்தற்கேற்ற, கருத்தைக் கவரத்தக்க பல திருப்பங்களோடு கூடிய பிரதான பாத்திரமாகப் படைத்துள்ளார். உண்மையாகப் பார்த்தால், சீவகன் பிறப்போடு, சிந்தாமணியின் கதையம்சம் முடிந்து விடுகிறது. மேலே வருவன சீவகனைத் தன்னேரில்லாத் தலைவனாக்க எடுத்துக் கொண்ட முயற்சிகளேயாம்.

சீவக சிந்தாமணி என்னுங் காப்பியத்தின் தலைவன் சீவகன். காப்பிய இலக்கண விதிப்படி, அவன், சௌந்தரிய சிகரமாக, சகல கலியாண குணங்களின் இருப்பிடமாக, பல்வகை ஆற்றல்களின் பிறப்பிடமாகப் படைக்கப்படுகிறான். இத்தன்மைகள் அனைத்தும் அவனது எண்வகை மணங்களின் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுவதாகக் கொள்ளல் சாலச் சிறந்தது என்பதை முன்னர் கண்டோம். அதனைச் சிறிது விரிவுபடுத்தி ஈண்டு நோக்குதல் தகவுடைத்து.

கலையின தகலமுங் காட்சிக் கின்பமும்
சிலையின தகலமும் வீணைச் செல்வமும்
மலையினின னகலிய மார்ப னல்லதிவ்
வுலகினி லிலையென ஒருவ னாயினான்" எனப்

பொது நோக்காகச் சீவகனது தன்மை ஆரம்பத்திற் காட்டப்படுகின்றது. ஞானம் முதலியனவற்றிற்கு இலக்கணங் கூற வேண்டுமானால் சீவகன் என ஒரு சொல்லிற் கூறி விடலாம் என்பதை "ஒருவனாயினான்" என்ற தொடர்பு புலப்படுத்துகிறது.

வனவேடர் இடையரது பசு நிரையைக் கவர்ந்து சென்று விடுகிறார்கள். இடையர் ஓடோடி வந்து கட்டியங்காரனிடம் முறையிடுகிறார்கள், கட்டியங்காரனின் பெருஞ் சேனை நிரை மீட்கச் சென்று புறமுதுகு காட்டி ஓடி விடுகிறது. இந்நிலையிலே இடையர் தலைவனான நந்தகோன் சீவகனிடம் முறையிடுகிறான். அதைக் கேட்ட சீவகன்,

"தன்பான் மனையாள், அயலான் தலைக்கண்டு, பின்னும்
இன்பால் அடிசிற்கு இவர்கின்ற பேடி போலாம்
நன்பால் பசுவே துறந்தார் பெண்டிர்பாலர் பார்ப்பார்
என்பாரை ஓம்பேன் எனில் யான் அவனாக"

என்று சபதஞ் செய்கிறான். "ஆவும் ஆனியற் பார்ப்பான மக்களும்" என்ற சங்கச் செய்யுளின் நாதம் கடைசி இரு அடிகளிலும் ஒலிக்கிறது. அவ்வொலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினூடு, சீவகனின் அருளுணர்வு ஒத்திசைக்கின்றது. சீவகன் சபதத்தை அமைக்கும்போது தேவர் காட்டிய உவமை, தன் மனைவி அயலானோடு இருக்கக்கண்டு, அவளிடம் உணவருந்த விரும்பும் பேடி பற்றிய உவமை, அந்த இடத்தில் மிகப் பொருத்தமாக விழுகிறது.

சீவகன் காப்பியத் தலைவனல்லவா? அவன் குல ஒழுக்கத்திற்றவறுதல் அழகன்று; பொருந்துவது மன்று என எண்ணிய தேவர், நந்தகோன், வீரனான சீவகனுக்குத் தன் மகளை மணஞ்செய்ய எண்ணிய போது, அவன் குலவொழுக்கத்தை மீறானாய், தன் தோழனுக்கு அவளை மணஞ் செய்கிறான் எனக் காட்டுகிறார். இதுவும் சீவகனுயர்வைக் காட்டுவது ஒரு நிகழ்ச்சியாய் அமைகிறது.

அடுத்து, சீவகனின் இசைத்திறன் வெளிப்படும் நிகழ்ச்சி காந்தருவதத்தையார் இலம்பகத்தில் வருகிறது இசைப் போட்டியிற் பங்குகொண்ட சீவகனிடம் வீணாபதி பலவகை வீணைகளைக் கொடுக்கிறாள் அவன் அவ்வீணைகளின் தந்திகளைச் சுண்டி, இசையெழுப்பி, அவ்விசையின் தன்மை கொண்டு, அவ்வீணைகளின் குறைகளைப் பேசுகிறான். கடைசியாக ஒரு வீணை கொடுக்கப்படுகிறது. அது நல்ல வீணை. அதன் திறத்தை அவன்,

"இருநிலமடந்தை ஈன்ற திருவிசும் பென்னும் கைத்தாய்
திருநல மின்னுப் பொன்ஞாண் முகின்முலை மாரித்தீம்பால்
அருநலங் கவினியூட்ட உண்டு நோய் நான்கு நீங்கி
அருநலங் கவினி வாள்வாய் அரிந்திது வந்தது என்றான்

சீகவனது இசைப்புலமைக்கு இவ்வொரு செயலே தக்கசான்றாக அமையும். இது காறுங் கூறியவை, காப்பிய நாயகனான சீவகனது பண்புகளென்னும் பாற் கடலிலே தெறித்த ஓரிரு துளிகள்.

ஈற்றில், சீவகன் மெய்யுணர்வு பெற்ற தன்மை சோலை ஒன்றில் நிகழ்ந்ததொரு நிகழ்ச்சி மேலேற்றிக் காட்டப்படுகிறது. சோலையிலே பலாமரத்தில் இருந்த ஆண் குரங்கு பெண் குரங்கின் ஊடலை நீக்கப் பலாச்சுளைகளை அதற்கு ஊட்டுகிறது. அதனைக் கண்ட காவற்காரன் பலாச்சுளையைத் தானுண்ண விரும்பி அவற்றினைக் கலைத்துப் பழத்தினைப் பெறுகிறான். இந்நிகழ்ச்சியைக் கண்ட சீவகன், ''கைப்பழமிழந்த மந்தி அரச வாழ்வை இழந்த கட்டியங்காரனை ஒத்தான். காவற்காரன் கட்டியங்காரனைத் துரத்தி அரச வாழ்வடைந்த என்னை ஒத்தான்'' என்று ஒப்பிட்டு எண்ணுகிறான். இதுவே அவன் அரசபோகந் துறந்து, தவஞ் செய்து பரிநிர்வாண நிலை அமைதற்குக் காரணமாகிறது. இத்தத்துவ உணர்வு தலைப்படுதற்காக, தேவர் ஓர் உருவக நிகழ்ச்சியினைத் தலைப்பெய்து கையாண்ட முறை சுவை நலம் பயப்பதாகும்.

சீவக சிந்தாமணியிலே உபபாத்திர முத்திரை பொறிக்கப்பட்டுவரும் பெண்கள் ஒவ்வொருத்தியும், அவரவர் பண்பு நலங்கள் நிறைவுறும் வகையிற் காட்டப்படுகிறார்கள், அவர்கள் பற்றிப் பேசுவது பேச்சின் விரிவுக்கு ஏதுவாகுமாயினும், ஓரிரு பாத்திரங்களிலாவது தொடாமற் செல்வது இவ்வுரையை மூளியாக்குஞ் செயலாகிவிடும். குணமாலையும் அவளது ஆருயிர்த் தோழியான சுரமஞ்சரியும் வேனில் விழாக் கொண்டாடுதற்காக ஆற்றங்கரையை அடைகின்றனர். அங்கு யாரது சுண்ணப் பொடி சிறந்தது

என்ற விடயமாகப் போட்டி ஏற்படுகிறது. அப் போட்டியிலே நடுவனாக விளங்கிய சீவகன் குண மாலையின் சுண்ணமே சிறந்ததெனக் கூறுகிறான். இந்நிலையிற் சுரமஞ்சரி—இயல்பாகவே சர்வத்தில் ஒரு மாற்றுக் கூடியவளான சுரமஞ்சரி.

''மாற்றம் ஒன்றுரையாள்: மழைவள்ளலென்
ஏற்ற சுண்ணத்தை ஏற்பில என்ற சொல்
தோற்று வந்தென் சிலம்படி கைதொழ
நோற்பன்: நோற்றனை நீ என ஏகினாள்"

இவ்வாறு சுரமஞ்சரி ஏகியபோது தலைவியான குண மாலை பாதங்களில் வீழ்ந்து வேண்டுகிறாள். இங்கு குணமாலை, தன் பெயருக்கேற்றவளாக மிளிர்வதை நாம் காணுகிறோம். அந்தக் குணமாலை, சீவகன் மேலே தான் கொண்ட காதலை வெளிப்படுத்தும் போது காட்டும் மனவுறுதி நம்மை மயக்குகிறது;

''கந்துகப் புடையிற் பொங்கும் கலினமா வல்லன்
காளைக்கு
எந்தையும் யாயும் நோராய்விடி இறந்தலொன்றோ
சிந்தனை பிறிதொன்றாகிச் செய்றவம் முயல்
ஒன்றோ
வந்ததால் நாளை என்றாள் வடுவெனக் கிடந்த
கண்ணாள்.''

குணமாலையை விட்டுப் பிரிந்து சென்ற சுர மஞ்சரி, ஆடவர்களெவரும் அணுகா வகையிலே ஓர் அந்தப்புரமமைத்து, ஆண்டுள்ள ஆண் பாவைகளைக் கூட பெண்பாவைகளாக்கி,

''சென்று காலங் குறுகினும் சீவகன்
பொன்றுஞ் சாகம் பொருந்திற் பொருந்துக
அன்றி என் நிறை யாரழிப்பா ரெனா
ஒன்று சிந்தைய ளாகி ஒடுங்கினாள்"

இத்தகை சுரமஞ்சரியை அடைந்து காம திலகனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறான் சீவகன். சீவகன் சுரமஞ்சரியை யடைந்த சம்பவம் நகைச்சுவையோடு கூடியது. சீவகன் விழு கிழவனாக உருத்தாங்கிச் சுரமஞ்சரியை யடை கிறான். அங்கே சுரமஞ்சரி அவனைப் பார்த்து வந்த காரியம் யாதென வினவ அவன் சிலேடையாக, ''குமரியாட'' என்கிறான். ''குமரியாடினால் என்ன பயனுண்டாகும்'' என்கிறாள் அவள். அதற்கு அவன், ''வருத்துகின்ற மூப்பு ஒழியும்'' என்கிறான். ''குமரியாடி இளமை பெறுவோர் நின்னையன்றி வேறிலர்'' என்று அவள் ஏளனமாக நகைக்கிறாள். அதனைக் கேட்ட விருத்தனாகிய சீவகன், ''இம்மூப் புப் போகும் துறையறிந்து நீராடுவார் என்னையன்றி வேறிலர்'' என்கிறான். இந்த இடம் நம்மை அறியா மலே புன்னகை பூக்க வைக்கிறது. ஈற்றில் சுரமஞ்சரி யின் தவம் பலிக்கிறது; அவள் மனத் திண்மை வெல் கிறது.

சீவக சிந்தாமணி கற்பனைக் களஞ்சியம். மனத்தையீர்த்து உவகையிலாழ்த்த வல்ல வருண னைச் சிறப்புக் கொண்டது. தேவரின் சங்க நூற் புலமையும் திருக்குறளிற் கொண்ட ஈடுபாடும் அவரது கூர்ந்த மதியுஞ் சொல்லலங்காரத்தோடு பொருளாழம் மிக்க பாடல்கள் பிறப்பதற்குக் காரணமாயின. சீவக சிந்தாமணியின் பின்னர் எழுந்த நூல்கள் பல, சிந்தாமணியின் கருத்தைத் தழுவி நடந்தன. சோமேசர் முதுமொழி வெண்பா, வெங்கைக்கோவை, அழகர் கிளளைவிடு தூது என் பன அவ்வகை நூல்களிற் சில. அன்றியும் பரிமேல ழகரும் தொல்காப்பிய உரையாசிரியர் சிலரும் சீவக சிந்தாமணிச் செய்யுள்களில் மேற்கோள் காட்டினர். இவையெல்லாம் அக்காலத்திலே சீவக சிந்தாமணிக் கிருந்த வியாபகத்தை எடுத்துக் காட்டுகின்றன. ○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பராமாயணம்



க. சச்சிதானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பளிங்கனைய கவிக்சுரசன் கம்பனெனுந்தேவன் பண்ணிவைத்த காவியத்தின் பசும்பொன் முடிதரித்து' இளங்குமரித் தமிழ்த்தாய் இறுமாப்போடு வீற்றிருக்கிறாள் என்கிறார் கவிஞா திலகம் ச. து. யோகியார் அவர்கள். உண்மை. கம்பனெனுந்தேவன் நமக்கு இராமாயணமாகிய அமிர்தவாரிதியை அளித்திருக்கிறான். அதை அழகு சொட்டச் சொட்ட அறிமுகஞ் செய்திருக்கும் கவிஞர் சச்சிதானந்தனின் சொற்பொழிவு, இத்தொகுதியில் நிமிர்ந்து நிற்கின்றது. பேச்சின் முகவுரை மனப்பாடஞ் செய்யத்தக்க பெற்றியது. கவிதைபோல அமைந்துள்ளது. 'அறமே இழையாய், அழகே மணியாய் அமைந்ததுவே இராமாயண மாலையாம்' என்ற அவரது முடிபுக்கேற்ப, கம்பன்கண்ட இராமனை, தாடகை வதை, முடிதுறந்து செல்லல், இராவண வதம் என்ற மூன்று இடங்களிலும் வைத்து ஆசிரியர் காட்டுகின்றார். தாடகையைக் கொல்ல விசுவாமித்திரர் ஏவும் காட்சியையும், இராமன் தயக்கத்தையும் அவர் கூறியுள்ள முறை நயக்கத்தக்கது. முடிதுறந்த காட்சியையும் இராவண வதத்தையும் இலக்கிய நயம் காட்டும் பகுதியாக ஆசிரியர் அமைத்துள்ளார். 'ஆளையா வுனக்கமைந்தன' என்ற பாடலில் வரும் 'நல்கினன்' 'வள்ளல்' என்ற சொற்களில் அமைந்துள்ள நயத்தையும், 'பெருந்தகை' என்ற சொல்லின் நயத்தையும் அவர் தொட்டு எழுதியவிதம் நன்றாக உள்ளது. தொல்காப்பியர் கூறிய 'மெய்ப்பாடு'கள் இராமாயணத்தில் எவ்வெவ்விடங்களிலே தோன்றுகின்றன என்று மொத்தமாகக் குறிப்பிடும் இடம் அவருக்கு கம்பராமாயணத்திலுள்ள புலமையை புலப்படுத்துகின்றது.

- இரசிகமணி கனக செந்திநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவின் புகழை

உலகுக்கு எடுத்தியம்ப அதன் வடபாலுந் தென் பாலும் இரு அழியாச் சின்னங்கள் துலங்குகின்றன. வடபாலுள்ளது இமயம். தென்பாலுள்ளது கம்ப ராமாயணம். இராமாயணக் கதை பரத கண்டத்தின் வழிவழிச் சொத்தாகும். ஆனால், அதனை உலகம் போற்றும் உன்னத அமர காவியமாக்கித் தந்தவர் கம்பர். அந்தி வானச் செம்மையின் அழகு அழியாது. அலைகடலின் நீல அழகு சாகாது. புலரிக் காலத்தில் வாயவிழும் பூவின் புதுமை இறக்காது. மழலைச் சிறுவர் கடைவாயின் புன்னகை மாயாது. முழு நில வின் அமுததாரை அள்ளி வரும் இன்பம் என்றுங் கெடாது. இராமாயண காவியமும் அழியாத அமர காவியமாகும். அது காலத்தால் வாடாது. கற்ப தனால் புளியாது. ஒரு கால் கண்ட புதுமை தோற்க, மறுகால் வேறொரு புதுமையைக் காட்டும் மந்திர காவியம் அது. ஊட்டும் அழகு விருந்தெல்லாம், மீட்டும் அழகுப் பசி தொகுக்கும் மருந்தாகும் அமுத காவியம் அது.

காவியம் தன்னிகரில்லாத் தலைவனைக் கொண் டது. அறம், பொருள், இன்பம், வீடெனும் நாற் பொருள் பயப்பது. இடையறாது எண்வகைச் சுவை களையுந் தருவது. நாடு, நகரம், மலை, ஆறு என்ப வற்றின் இயற்கை அழகை அள்ளிச் சொரிவது. போர், திருமணம், தூது, பிரயாணம் ஆகிய நிகழ்ச்சிகளைத் தன்னகத்தே கொண்டது. அந்தி மாலை, நிலவு, புனல் விளையாட்டு, பொழில் விளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாட்டு, உண்டாட்டு என்னும் காட்சிகள் மலிந்தது. இன்னும் இவற்றைப் போலப் பலவகை இலக்கணங் களையும் உடையது. இராமாயண காவியமோ இவையெல்லாவற்றையும் ஒருங்கே கொண்டதால் காவியங்களுக்கே சக்கரவர்த்தியாகின்றது. அதனாற் கம்பனையும் கவிச்சக்கரவர்த்தி ஆக்கிவிட்டது.

கம்பன் கவிச்சக்கரவர்த்தியானான். அவனைக் கவிச்சக்கரவர்த்தி ஆக்கியவன் இராமன். வால்மீகி கண்ட இராமனும், துளசிதாசர் கண்ட இராமனும், வடமொழி இலக்கியங்கள் பல கண்ட இராமனும், கம்பன் கண்ட இராமனுக்கு ஈடாகார். கம்பன் கண்ட இராமனோ கோசலை வயிற்றிற் பிறந்த குணத்தெய்வம். அவன் பெருங்குணமென்னும் மாணிக்க மாமலை, மானிடப் போர்வையில் வந்த அறத்தெய்வம். குணமணியாகிய ஓர் இராமனைக் காவியத் தலைவனாகக் கொண்டதாலேயே இராமா யணம் அமர காவியம் ஆயிற்று.

விசுவாமித்திரனுடன் இராம-இலக்குமணர்கள் நிற்கிறார்கள். பேரிடி போன்ற முழக்கங் கேட்கிறது. தாங்கொணா முடை நாற்றம் வீசுகின்றது. காடும், திசையும், மலையும் நடுங்குகின்றன. மண்ணும் விண் ணும் மயங்குகின்றன. தோற்றினாள் தாடகை. கருங் கல் போன்ற மேனியும், கோரப் பற்களும், செம் பட்டை மயிரும் இவள் பெண்ணோ பேயோ என ஐயுற வைக்கின்றன. மலைகளை எடுத்து வீசுகின் றாள்; மரங்களைப் பிடுங்கி எறிகின்றாள். யாகங்கள் இவளால் அழிந்தன. முனிவரர் தவச்சாலைகளை எல்லாம் அவச்சாலைகள் ஆக்கினாள். யோகியரும் நல்லோரும் இவளால் இன்னலுற்றுக் கொண்டிருக் கின்றனர். "தவத்தைக் குலைக்கும் இவளை இன்னே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழித்தலே, சத்திரியனாகிய இராமா உனது கடமை யாகும்'' என்கிறார் தவசிரேட்டராகிய விசுவாமித்திரர் இராமனோ பாலகன்; தயங்குகிறான். ஏன்? அவளின் பயங்கரத் தோற்றத்தைக் கண்டு பயந்து விட்டானா? முனிவர்களின் தவம் அழிந்தால் அதற்காக நான் ஏன் போரில் இறங்க வேண்டும் என்று தயங்குகின்றானா? படைகளின்றிப் போர் புரிதல் முடியாதே என்று கைகள் அம்பைத தொடாதிருக்கின்றனவா?

கம்பனைக் கேளுங்கள் :

"அண்ணன் முனிவற்கதுக ருத்தெனினு மாவி
யுண்ணென வடிக்கணை தொடுக்கில னுயிர்க்கே
துண்ணெனும் வினைத்தொழில் தொடங்கியுள
ளேனும்
பெண்ணென மனத்திடை பெருந்தகை
நினைத்தான்"

நான்காவது அடியிலே கம்பன் பதில் கூறுகின்றான். 'பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைத்தான்' என்பதுதான் அது. எத்தனை அட்டூழியங்கள் செய்தாலும் இவள் பெண்ணாயிற்றே என்றுதான் தயங்கினான் இராமன்.

இராமனுக்கு இந்தத் தயக்கம் வேண்டியதில்லையே! அவளைக் கொல்லும்படி ஏவுகின்றவன் யாவன்? போர் போரென்று முரசடிக்கும் மறச் சேனாதிபதியா? திக்கு விசயஞ் செய்து சக்கரவர்த்தியாகப் போகும் மன்னனா? இரத்தமும் நிணமும் பிணமுமே ஒவ்வொரு நாளும் போர்க்களத்திலே கண்டு மரத்துப்போன மனமுடைய மறவனா? முனிவரெல்லாம் கையேந்தும் முனிபுங்கவன்; வேள்வியும், யோகமும், தானமும், தனவமின்றி வேறறியாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணிய மூர்த்தி; அன்பும் ஈகையும் தண்ணளியும் குளிர்வித்த உள்ளமுமுடைய அறவள்ளல் என முனிவரும் ஏத்தும் தெய்வ முனிவனல்லவா ஏவுகின்றான்? அவனை 'அண்ணல் முனிவன்' என முனி சிரேட்டனாக்கியுள்ளான் கம்பன். அந்த முனிவருக்கெல்லாம் அண்ணலாகும் தகைமையுடைய விசுவாமித்திரனுக்கு இது சம்மதமே. வேதத்தின் அந்தத்தையும், அறத்தின் ஆதியையும் கண்ட விசுவாமித்திரனுடைய கட்டளையல்லவா இது? 'முனிவற்கு அது கருத்தெனினும்' என அழகாக அவர் சம்மதத்தைக் கூறியுள்ளார் கம்பர். ஆனால், அவளோ நாசகாரியமாகிய வேள்வி யழித்தலையே தொடங்கியுள்ளாள்.

இராமா, என்ன தயக்கம்?

'பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைத்தான்'

இராமன், 'எப்படியாயினும் இவள் பெண்ணல்லவா?' என்று தயங்கினான். இங்கே இராமன் விசுவாமித்திரனிலும் அறத்திலே ஒருபடி கூட நிற்கின்றான் என்ற உட்பொருளைக் காட்டியிருக்கின்றார் கம்பர். அதனாலேயே, அவனைப் 'பெருந்தகை' எனப் பொருத்தமாகப் பெயரிட்டுள்ளார். இராமன் பெருங் குண மூடைய வள்ளல். தருமத்தின் பிள்ளை. குணமென்னும் மாணிக்க மாமலை. இக்கருத்தையே இராமாயண காவியம் முழுவதிலும் கம்பர் இழைத்திருக்கின்றார்; விரித்திருக்கின்றார். இராமன் 'பெருந்தகை' என்னும் இழை ஒன்றே இராமாயணமாகிய மணிமாலையினூடே செல்கின்றது.

நாளைக்கு விடிந்தால் இராமனுக்கு முடிசூட்டு விழா நடக்கப் போகின்றது. தாயரெல்லாம் தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தன் மணிமுடி சூடுகின்றான் என்று ஆரவாரிக்கின்றார்கள். தந்தையரெல்லாரும் தன் மைந்தன் முடி சூடுகின்றான் என்று ஆடிப் பாடுகின்றார்கள். நகரமோ அதற்கென அலங்கரிக்கப் பட்டுவிட்டது. சீதைக்கோ மகாராணி ஆவதற்கேற்ற புனைவுகளைத் தோழியர் தொடங்கி விட்டனர். அந்தணர் முனிவராதியோர் ஓமச் சுள்ளி முதலாக யாவும் ஆயத்தஞ் செய்து விட்டனர். மன்னரும் மற்றோரும் விழாக் காண நகரில் நிறைந்து விட்டனர். மங்கையரோ ஆடிப் பாடி இராமனின் எழில் காண ஏங்கி 'எப்போது' என்று அவாவடக்கி நிற்கின்றார்கள்.

அப்போது கைகேயியின் அந்தப்புரத்துக்கு வரும்படி இராமனுக்குக் கட்டளை பிறந்தது. ஒடுங்கி, வாய் புதைத்து, மேலாடை மடக்கி இராமன் கைகேயியின் முன் தோன்றுகின்றான். அவளைத் தாயென்று வணங்குகின்றான் இராமன். அவளோ அவனுடைய கூற்றுவனாகக் கூறுகின்றாள். ''அப்பா, இராமா! இந்த அயோத்தியைப் பரதன் ஆளவேண்டுமாம். நீ சடை முடி தரித்துக் காட்டிற்குப் போய், தவமேற்கொண்டு புண்ணிய நதிகளிலாடிப் பதினான்கு வருடத்திற்குப் பின் வரவேண்டுமாம். இப்படி நான் சொன்னேனல்லன். உன் தந்தையே பணித்தார்'' என்று கூறினாள்.

இராமன் அப்பொழுது கண்ணீர் விட்டான். ஆத்திரத்தோடு பேசத் தொடங்கினான். ''இது யாருடைய சூழ்ச்சி? அப்பாவும் உங்கள் மாய வலையில் விழுந்து விட்டாரா?''—இப்படி ஆரம்பித்தான் இராமன். இப்படி இந்தச் சந்தர்ப்பத்தில் ஆரம்பித்தவன் கம்பன் கண்ட பெருந்தகை இராமனல்லன்.

கம்பன் தந்த இராமன் கைகேயிக்கு எப்படிக் கூறுகிறான் தெரியுமா? ''மன்னவன் பணியன்றாகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நும்பணி மறுப்பனோயான்? பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ?''

''எந்தையே ஏவ நீரே உரை செய
இயைவதுண்டேல்
உய்ந்தனன் அடியேன்''

என்று ஆரம்பித்தான். ''அம்மா, தாயே? அப்பா கூறுகின்றார் என்று ஏன் சொன்னீர்கள்? நீங்கள் இட்ட கட்டளை என்றால் அதை நான் மறுப்பேனோ? என் தம்பி பெற்ற செல்வம் யான்பெற்ற செல்வமல்லவோ? தந்தை பணியிட, தாய் பணிக்க அப்பணியை நிறைவேற்றும் என் பாக்கியமே பாக்கியம்'' என்று மகிழ்ந்தான்.

அவன் முகம் அப்போது எப்படி ஆயிற்று?

''ஒப்பதே முன்பு பின்னவ் வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற
தம்மா''

எடுத்த இடங்களிலெல்லாம் தாமரையை இராமனின் முகத்துக்கு உவமை கூறிவிட்டார் கம்பர். தாய் பணியை நிறைவேற்ற நிற்கும் இராமனின் மலர்ந்த முகவிலாசத்துக்கும் அந்தத் தாமரை மலரையா உவமை காட்டிக் கூறல் வேண்டும்? ஆயிரம் மடங்கு மலர்ந்த அக்களிப்பு முகமும் வெறும் தாமரைதானா! அப்படி உவமை கூறினால் அவன் கம்பனல்லவே.

முன்பும் முகத்துக்குத் தாமரை ஒப்பதே. ஆனால் அவ்வாசகம் கேட்டபோது, 'அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா' என்று கூறுபவன்தான் கம்பன். 'நும்பணி மறுப்பனோ?' என்று கூறுவிப்பவன்தான் கம்பன். இராமனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பெருந்தகை என்று முன்னே கூறியதை இங்கே மீண்டும் வலியுறுத்தியுள்ளார் கம்பர்.

கற்புக் கரசியைக் கவர்ந்த இராவணனைக் கொன்று, அவளைச் சிறை மீட்கக் கடும்போர் தொடங்கி விட்டது. அரக்கர் பெரும் படையெங்கே? வானரப் படையெங்கே? சிவபெருமானிடம் தவ வலியால் நெடிய நாளும், கொடிய வாளும் பெற்றவன் வீரன் இராவணேஸ்வரன். திக்கு யானைகளை மார்புறப் பொருது அவற்றின் கொம்புகள் உழுது அவை முறித்த மார்பினன் அவன். இறைவனின் வெள்ளி மலையை அசைத்த வீரன் அவன். மூன்று உலகங்களையுங் கடந்து நின்றது அவன் அரசு. தாமரையடியும், கொடியிடையும், மலர்க்கரமுடைய தேவ நங்கையர் அரக்கர் பெண்களைக் குளிப்பாட்டச் செய்தான் அவன். அரக்கர் சோலையை அமரர் காக்க அரசு செலுத்தினான். அத்தகைய வீரனின் உயிர்குடிக்க எப்பொழுது, எப்பொழுது என்ற துடிக்கின்றது இராமனின் பாணம்.

முதனாட்போரிலே பொருது வெறுங் கையனாய்ப் போர்க் களத்தில் நிற்கிறான் இராவணன். சானகி, 'ஒருகணங் கூடப் பொறேன்' என்று தவித்து அனுமனிடம் கூறியிருக்கிறாள். இந்த அரிய சந்தர்ப்பத்தை யார் நழுவ விடுவார்கள்? ஒரே பாணம் விட வேண்டியதுதான். சரிந்தான் இராவணன். போர் முடிந்து விடும். ஆனால், இராமன் கை பாணத்திற் போகவில்லை. ''இராவணா, நீ, வெறுங் கையனாய் நிற்கின்றாய். இன்று போய்ப் போர்க்கு நாளை வா'' என்று கூறுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆலை யாவுனக் கமைந்தன மாருதம் அறைந்த
பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப்
போர்க்கு
நாளை வாவென நல்கினனா கிளங் கமுகின்
வாளை தாவுறு கோசலை நாடுடை வள்ளல்"

தாடகை முன் அம்பு விடாது தயங்கியபொழுது 'பெருந்தகை' என்று கூறிய கம்பன், இப்பொழுது இராமனை 'வள்ளல்' என்று குறிப்பிடுகின்றான். எதைக் கொடுத்தான் இராமன்? பொன்னை வாரி வாரி இறைத்தானா? பொருள்களை இரவலர்க்குக் கொடுத்தானா? இராமன் எல்லாவற்றுக்கும் மேலாக, ஏனைய மானிடர் எதிரிக்குக் கொடுக்காததைக் கொடுத்தான் இராவணனுக்கு உயிர்ப்பிச்சை அளித் தான் அதற்காகவே, கம்பர் 'நாளை வாவென நல் கினன்' என்ற சொல்லைப் பதித்துள்ளார். அதனையும் அடியின் ஈற்றில் வரும் 'வள்ளல்' என்ற சொல் லையும் பொருத்தி நோக்குக 'வள்ளல்' என வாய் நிறையக் கூறுங் கம்பரின் இன்பந்தான் என்னே! 'கோசலை நாடுடை வள்ளல்' என்ற அடையில் இன் னொரு குறிப்பையுங் கம்பர் பொதித்துள்ளார். இராமனைக் காடாளச் செய்ததற்காக மன்னனைக் கோசலை கடிந்தாளல்லள். பரதனைக் கடிந்தாளல் லள். கைகேயியைக் கடிந்தாளல்லள். பரதனைக் கடிந்தாளல்லள். அவர்களிடம் என்றும் மாறா அன்பு காட்டினாள். அத்தகைய பெருங்குணக் குன்று கோசலை. அந்தக் கோசலை பிறந்த கோசலநாட்டுக் குணமாகத்தான் இராமனின் வள்ளாண்மையைக் கம்பர் கூறியுள்ளார்.

இராமன் 'பெருந்தகை', 'வள்ளல்' என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமாயணம் முழுவதுங் காட்டியுள்ளார் கம்பர். அதுவே கம்பராமாயண சாரம்.

தசரதனின் புத்திர சோகமும், பிரிவாற்றாத இராமனின் தாபமும், சீதையின் கண்ணீரும் தொல் காப்பியர் கூறிய அழுகை என்னும் மெய்ப்பாட்டைக் காட்டுகின்றது. மிதிலைக் காட்சியும், அங்கே நடக்கும் புனல் விளையாட்டும், பொழில் விளையாட்டும் உவகைச் சுவைக்கு அணியாய் நிற்கின்றன. இலக்குவன் வீராவேசம், பரதன் தாயைக் கடிதல், பரதன் வருகையைக் கண்ட குகனின் சீற்றம் என்பனவும், இவைபோல்வனவும் வெகுளிச் சுவையின் சிகரமாகின்றன. திக்கு யானைகளின் கொம்பை மார்பில் ஏற்றி, தேவர்களை ஏவல் கொண்டு, வெள்ளி மலையை அசைத்த இராவணன் சிங்காதனத்திருக்கும் போது பெருமிதம் நாதஞ் செய்கின்றது. சித்திரகூடக் காட்சியும், கோதாவரி தீரமும் உவகை மாத்திரமன்றி மருட்கையையுந் தருகின்றது. ஏனைய சுவைகள் ஆங்காங்கே இவற்றுடன் பின்னி இராமனின் வீரத்தை மேம்படுத்துகின்றன.

காவியங்களில் வரவேண்டுமென இலக்கணஞ் சொல்லும் காட்சிகளுக்கும் இராமாயணத்திற் குறை வில்லை. அயோத்தி மாநகரின் திண்ணைகளிலே அந்தணர்களோடு பேசலாம். அங்கு சாளரங்களிலே பூக்குந் தாமரைகளாகிய மடவாரின் முகத்தைக்கண்டு இன்புறலாம் மிதிலாபுரியிலே 'மாசுறு பிறவிபோல வருவது போவதாகி' என ஆடும் ஊசல்களில் நகைக்கும் மங்கையரோடு குலவலாம்.

இலங்கை மாநகரில் நடக்கும் ஆடல் பாடல்கள் எங்களுக்கொரு தனி விருந்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பளிக்கு மாளிகைத் தலந்தொறும் இடந்தொறும் பசுந்தேன்
றுளிக்குங் கற்பகத் தண்ணறுஞ் சோலைக டோறு
மளிக்குந் தேறலுண் டாடுநர் பாடுந ராகிக்
களிக்கின் றாரலாற் கவல்கின்றா ரொருவரைக் காணேன்"

என அனுமன் கூறிய இலங்கையில் எங்கள் இன்பமே இன்பம். தெருக்கூட்டும் தேவமாதரும், சோலைகாக் குந் தேவரும், நாம் கண்ணயர இன்னிசை யாழ் வாசிக்கும் அரம்பையரும், விண்முட்டுங் கோபுரங் களும் கொடிகளுமா எமது இன்பப் பொருள்கள்? சோலைகளிலும் மாடிகளிலும் தூய மது மாந்தித் திளைக்கலாம். கற்பகச் சோலைகளிற் புகுந்து கையிலே கிள்ளை வந்து விளையாடும் கன்னியரோடு ஆடலாம். அது தெவிட்டினாற் கோதாவரி ஆற்று மணலிலே, பச்சறுகு மெத்தையிலே, ஒதுங்கும் அன் னங்களையும் அசையும் மத யானைகளையுங் கண்டு இன்புறலாம். பசித்தாற் குகனிடத்திலே தேனும் மீனும் வாங்கி யுண்டு, வெள்ளி ஓடத்திலே, கங்கைக் கரையிலே உலாவலாம். தென்றல் வீசும். நிலவு தருமத் தின் வதனம் போலப் பால் சொரியும். வேனிற் குயில் விருந்து தரும். முல்லை மல்லிகை முகையவிழ்ந்து மணம் கொடுக்கும். ஆகா! இவை எல்லாம் வாழ்வில் நாம் காணா வகையின.

அறமே இழையாய் அழகே மணிகளாய் அமைந்த துவே இராமாயண மாலையாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய புராணம்

தங்கம்மா அப்பாக்குட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபுராணம் சைவத்தின் பெருமையை விளக்க எழுந்த புராண மாகையால், அது காப்பியமாகா என்று பலர் நினைக்கிறார்கள். அந்த எண்ணம் பிழையானது என்பதைத் தங்கம்மா அவர்கள் முதலில் நிரூபித்து விட்டு, சேக்கிழார் பெருமான் இயற்றிய காப்பியத்தால் பழைய கால வரலாறுகள் துலக்கமாவதைத் தொட்டுக் காட்டியுள்ளார். பெரிய புராணம் வருணனைகளில், காதற் சிறப்பில், பக்திச் சுவையில், சித்தாந்தக் கருத்தில் உவமை நயத்தில் எங்ஙனம் தலை சிறந்த காவியமாகத் திகழ்கிறது என்பதைப் பாடல்களின் மூலம் அவர் நன்கு விளக்கியிருக்கிறார். மருத நிலக்காட்சியைப் பாட வந்த கம்பர், 'சேலுண்ட ஒண்கணாரில்', 'தண்டலைமயில்களாட' என்ற அருமையான பாடல்கள் மூலம் விளக்கஞ் செய்ய, பெரிய புராண ஆசிரியர் சமய நூலுக்கேற்ற விதமாக வயல் வரம்பிலே உள்ள மாமரங்கள்கூட பங்கயமாகிய ஓம குண்டத்தில் பழச்சாறாகிய நெய்யை நீண்ட இலைகளால் பெய்து ஆகுதி செய்கின்றன' எனப் பக்திச் சுவை கொட்ட வருணித்தலைத் தங்கம்மா அவர்கள் காட்டுவது அவரது புலமைக்கு ஒரு சான்றாகும். அப்படியே சுந்தரரும் பரவையாரும் கொண்ட காதலையும்கூட இலக்கிய இன்பத்துக்கூடே தெய்வீக ஒளியைக் காட்டும் சிறப்பாக அவர் நமக்கு அறிமுகம் செய்கிறார். அப்படியே பக்திச் சுவையையும் சித்தாந்தக் கருத்துக்களையும் காட்டிவிட்டு உவமையின் சிறப்புக்கு 'அஞ்செழுத்தும் உணரா அறிவிலோர் நெஞ்சம் என்ன இருண்டது நீலவான்' என்ற இடத்தைக் காட்டியது அருமையாக இருக்கிறது.

- இரசிகமணி கனக. செந்திநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. பதினொன்றாம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளிலே தோன்றிய இரு பெருங் காவியங்கள் பெரிய புராணமும் இராமாயணமுமாம், ஏறக்குறைய ஐம்பது ஆண்டு இடைவெளி இவ்விரண்டு காவியங்களுக்கு மிடையிலுண்டு. இதனால், இவையிரண்டும் ஒருமுகப்பட்ட பல கருத்துகளை நமக்கு நல்குகின்றன. முதலிற்றோன்றிய பெரிய புராணத்தை எடுத்துக் கொண்டால், அஃது ஒரு தெய்வ மணங்கமழுஞ் சிறந்த காவியம் என்பது கண்கூடு.

காவியம் என்பது பொருட் தொடர் நிலையாய், வாழ்த்து, வணக்கம், வருபொருளுரைத்தல் என்னும் மூன்று வகை மங்கலத்துள் ஒன்று முன்வரப் பெற்று, அறம் - பொருள் - இன்பம்-வீடு தழுவி, தன்னேரில்லாத் தலைவனையுடையதாய் வருவதாம். இதன்கண் பல வருணனைகளும், நன் மணம் புணர்தல், புலவியிற் புலத்தல், கலவியிற் களித்தல், நட்புக் கோடல், தூதுவிடுதல், குரவரைப் பணிதல் முதலிய ஒழுகலாறுகளும் விரவி, சருக்கம்-இலம்பகம்-பரிச்சேதம் என்ற பாகுபாட்டால் விளக்கமுடையதாய், எட்டு வகைச் சுவையும் பொருந்திவரக் கற்று வல்ல புலவனாற் செய்யப்படும். இந்த அமைவைப் பெரிய புராணத்திற் சிறப்புறக்காணலாம். தமிழின் இனிமையையும் சைவத்தின் பெருமையையும் ஒரு சேர எடுத்துக் காட்டுவது பெரிய புராணமே.

உயிர்கள் தத்தம் நிலைக்கேற்றவாறு சரியை-கிரியை-யோகம்-ஞானம் என்னும் மார்க்கங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாகப் படிப்படியாக உயர்ந்து தந்தலைவராகிய சிவபெருமானின் திருவருளை நாடுகின்றன. இவ்வாறு இறைவனுடைய திருவடி நீழலை எய்திய அடியார்களின் வரலாற்றை ஆங்காங்கு வைத்து, முதலிலும் இடையிலுங் கடையிலுஞ் சுந்தரமூர்த்தி நாயனாருடைய வரலாற்றை வைத்துப் பாடப்பட்டுள்ளது. தெய்வீகத் தன்மையிலே தோய்ந்த உள்ளத்தை உடைய சேக்கிழார் உயர்ந்த சில குறிக்கோளுடனே இந்நூலைப் பாடினார். நிறைந்த புலமையும் அனுபவமும் வாய்ந்த இவர் முதலமைச்சர் பதவியில் ஈடுபட்டவர். எனவே, நல்லவரும் வல்லவரும் ஆகிய ஆசிரியருடைய இந்த நன் முயற்சி ஒப்பற்ற பலனையே அளித்தது. சைவப் பேருலகிற் சிறந்தவொரு காவியத்தை நமக்களித்த பெருமை தெய்வச் சேக்கிழாரையே சார்ந்தது. இவர் செந்தமிழ் நாட்டின் ஒப்பற்ற கவிஞர். இவரை நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும், போதகாசிரியராகவும், ஞானாசிரியராகவும் அறிந்து போற்றுகிறார் அறிஞர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள். சேக்கிழார் தமது பெரிய புராணத்தாற் சைவத் தமிழுலகின் வரலாற்றையுமே நமக்குத் தெளிவு படுத்தியுள்ளார்.

பிற்காலச் சோழர் காலம், தமிழகத்திற் சைவம் மிகமிக ஓங்கியே காலமாகும். பன்னிரண்டாம் நூற்றாண்டில் அநபாயனும், அவன் மகன் இராசராசனும் சைவ நூற் புலமையும், சிவதொண்டும் மிக்கவர்களாய் வாழ்ந்து, மக்களையும் அவ்வழிப்படுத்தினர். சேக்கிழார் முதலமைச்சராக இருந்ததால் மேலும் சைவத் தொண்டுகள் நாட்டில் மிளிர்ந்தன. அக்காலத்திற் சீவக சிந்தாமணியை நயந்து கொண்டிருந்த மன்னனுக்கு நிலையான ஒரு மெய்யுணர்வையூட்டும் நெறியைக் காட்டுவான் வேண்டித் திருத்தொண்டர் பெரிய புராணத்தைச் சேக்கிழார் பாடினார். பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களையுந் தரிசித்துச் செவிவழிச் செய்தியையுங் கல்வெட்டுச் சான்றுகளையுந் திரட்டிக் கொண்டார். சுந்தரரின் திருத்தொண்டர்த் தொகையும், நம்பி யாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி யும், மூவர் திருமுறைகளும் காவியப் படைப்பைச் செய்வதற்கு உதவி புரிந்தன. பாடி முடிப்பதற்கு ஏற்ற சௌகரியங்களை அரசன் அளித்தனன். இறைவன் திருவருளை முன்னாகக் கொண்டு சேக்கிழார் சிதம்பரத்தை அடைந்தார். தில்லையம்பல மூர்த்தியின் திருவருளை வேண்டினார். அச்சமயத்தில் முதலடி எடுத்துக் கொடுக்கப்பட்டது. ''உலகெலாம்...'' என்ற தொடர் செவியிற்பட்டதும் பெரு மகிழ்ச்சியுடனே எம்பெருமான் வாக்கை அருள் வாக்காகக் கொண்டு பாடத் தொடங்கினார்.

காவியத் தலைவராகச் சுந்தரரை நிறுத்து முகமாக, முதலிலே தடுத்தாட் கொண்ட புராணத்தில் அவர் வரலாற்றைத் தொடக்கிப் பின்பு இடையில் இரண்டு பகுதியைக் கூறிக் கடைசியில் வெள்ளை யானைச் சருக்கத்தில் அவர் வரலாற்றை முடிக்கிறார். பெருங்காப்பிய முறைக்கேற்ற நாடு-நகர வருணனைகளும் இந்நூலிற் கலந்து மிளிர்கின்றன. இது தில்லைப்பிரான் திருக்கோயிலிலே அநபாய சோழன் முன்னிலையில் பல்லோர் பாராட்டுந் தெரிவிக்க அரங்கேற்றப்பட்டது. சேக்கிழாரை யானை மேலேற்றித் திருத்தொண்டர் புராணத்துடன் வீதி வலஞ் செய்தனர். ''தொண்டர் சீர் பரவுவார்'' என்ற சிறப்புப் பெயரைச் சோழன் சேக்கிழாருக்கு அளித்தனன். அருண்மொழித் தேவர் என்றும், குன்றை முனி சேக்கிழார் என்றும், மாதேவடிகள் என்றும் பாராட்டி அறிஞர் பெருமக்கள் சிறப்புச் செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய புராணம் சிறந்தவொரு வரலாற்றுச் சிறப்புடைய நூலாகும். இன்றுள்ள நாம் வேறு எவ் வகையிலும் அறிய முடியாத அக்காலச் செய்திகள் பலவற்றைப் பெரிய புராணத்தால் அறிகிறோம். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலே, தமிழ்நாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கூறுபவை. அவற்றுக்குப் பிறகு தமி ழகத்திற் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. சமணம் பரவியது. ஆறாம் நூற்றாண்டு தொடக்கம் ஒன்ப தாம் நூற்றாண்டு வரையிலும் சமயப் பிரசாரம் ஏற் பட்டதே தவிர, இலக்கிய வளர்ச்சி தேங்கிக்கிடந்தது. மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் ஒன்பதாம் நூற்றாண்டு வரையுமுள்ள காலத்திலே தமிழ்க் காவியம் எதுவும் எழுதப்படவில்லை. பத்தாம் நூற் றாண்டிற் சீவக சிந்தாமணி என்ற சமண காவியந் தோன்றியது. அடுத்து, பன்னிரண்டாம் நூற்றாண்டு தான் சைவ சமயம் வளர்ச்சிக்குப் புத்துயிர் அளிக்கப் பட்ட காலமாகும். இக்காலமே சேக்கிழார் பெரிய புராணம் தோன்றியது. கோச்செங்கணான் முதல், பல்லவர் காலம் வரை தமிழநாட்டு அரசியல் முறை கள்-போர்கள்-அரசர்கள் என்பவற்றை ஓரளவுக்கு விளக்கி நிற்பது பெரிய புராணமே. இதனைத் தொகுப்பதற்கு ஆசிரியர் சேக்கிழார் எடுத்த முயற்சி பெரிதும் பாராட்டுதற் குரியதாகும்.

இனி, பெரிய புராணத்துக்குட் புகுந்து பார்ப் போம். நாடு-நகர வருணனை, காதற் சிறப்பு, உவமை நயம், பக்திச் சிறப்பு, சித்தாந்தக் கருத்துகள் என்பவை ஆங்காங்கு பாடல்களிலே மிளிர்ந்து காவி யச் சிறப்பைக் காட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பரந்த விளை வயற் செய்ய பங்கயமாம் பொங்
கெரியில்
வரம்பில் வளர் தேமாவின் கனிகிழிந்த மலைநறுநெய்
நிரந்தரம் நீள் இலைக்கடையால் ஒழுகுதலால்
நெடிதவ்வூர்
மரங்களும் ஆகுதி வேட்கும் தகைமையென
மலர்ந்துளதால்''

இங்கே இயற்கையான வொரு மருத நிலக்காட்சியைத் தெய்வீக உள்ளத்தோடு நின்று சேக்கிழார் காட்டுகிறார். காண்பவனுடைய உளப் பாங்கிற் கேற்பக காட்சி வேறுபடுகிறது. சந்திரனைக் காணுகின்ற கவிஞன் கடல் மீது காணும் வெள்ளி ஓடத்தை நினைவு கொள்ளுகின்றான். அதே நேரத்தில் விஞ்ஞானியின் சிந்தை சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிய முற்படுகிறது. பக்தன் ஒருவன் சந்திரனைக் கண்டவுடன் இறைவனுடைய சடாமுடியை நினைவு கொளகிறான். ஆகவே. காட்சி காண்பவருடைய உள்ளத்திற்கேற்ப வேறுபடுகிறது அதேபோல, இங்கே வயல் மரங்கள்கூட வேள்வி செய்கின்ற ஒரு நிலைமையைச் சேக்கிழார் காண்கிறார். பங்கயமாகிய ஓமகுண்டத்திலே பழச்சாறாகிய நெய்யைச் சொரிந்து வேளவி நடக்கிறது. இப்படியான ஒரு காட்சியைக் காண்பதற்குக் கவிஞருக்கு எவ்வளவு பக்தியுள்ளம் வேண்டும்! தெய்வீகத்திலே தோய்ந்த உள்ளம் ஒன்றுதான் இதனைக் காண முடியும் என்பதிற் சந்தேகமேயில்லை.

திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில் மற்றொரு நாட்டு வருணனையைக் கவனிப்போம்.

''கடைஞர் மிடை வயற்குறைத்த கரும்பு குறை
பொழிகொழுஞ்சாறு
இடைதொடுத்த தேன்கிழிய இழிந்தெழுகு நீத்தமுடன்
புடைபரந்து ஞிமிறொலிப்பப் புதுப்புனல்போல்
மடையுடைப்ப
உடைமடையக் கரும்படுகட்டி யினடைப்ப ஊர்கள்
தொறும்.''

வயல் நிலத்தைச் செப்பஞ் செய்வதற்காகக் கருப்பந் தடிகளை கடைஞர்கள் வெட்டி விடுகிறார்கள் குறைத்தடிகளிலிருந்து கருப்பஞ்சாறு சொரிகிறது. அத்தோடு தேனுஞ்சேர்ந்து ஓடி வாய்க்கால் மடைகளை உடைக்கிறது. இதனைத் தடுப்பதற்கு உடைபட்ட மடைகளுக்குக் கருப்பங்கட்டிகளைக் கொண்டு மள்ளர்கள் அடைக்கிறார்கள். அத்தகைய செழிப்புடைய நாடு திருமுனைப்பாடி நாடு என்று வருணிக்கிறார் சேக்கிழார். இதில் ஒரு பெரிய உண்மையையும் பொதித்து வைத்திருக்கிறார். கருப்பஞ்சாறு போன்று பயன் தரக்கூடிய திருநாவுக்கரசருடைய வாழ்க்கை அவமே சமணத்தோடு கலக்காமல் கருப்பங்கட்டி போன்று பயன தந்து கொண்டிருக்கின்ற திலகவதியாரால் தடைப்படுத்தப்படுகிறது என்ற உண்மை வருணனைக்குட் பொதிந்து கிடக்கிறது. இப்படியான வருணனைகள் பலவற்றைப் பெரிய புராணத்தில் நிரம்பக் காணலாம்.

அடுத்து, காவியத்தில் அமைந்திருக்க வேண்டிய காதற் சிறப்பைக் குறித்து ஓர் இடத்தைக் காண்போம்.

காவியத் தலைவனாகிய சுந்தரன் திருவாரூர்ப் பெருமானை வணங்குவதற்கு வந்திருக்கிறான். அவ்வூரில் உருத்திர கணிகையர் குலத்திலே தோன்றிய பரவையார் என்பவளும் தோழிப் பெண்களுடன் அவ்வாலயத்திற்கு வந்திருக்கிறாள். விதி வழி கூட்ட சுந்தரன் பார்வை பரவை மேற் செல்கிறது. அதே நேரத்திலே பரவையாரின் பார்வையும் சுந்தரன் மேற் செல்கிறது. சுந்தரன் அதிசயித்து நிற்கும் நிலையை,

"கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல் சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேன்
என்றதிசயித்தார்"

என்பதாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவையின் காதல் நிலையை,

"முன்னே வந்தெதிர் தோன்றும் முருகனோ
பெருகொளியால்
தன்னேரில் மாரனோ தார் மார்பில் விஞ்சையனோ
மின்னேர் செஞ்சடையண்ணல் மெய்யருள்
பெற்றுடையவனோ
என்னே என்மனந் திரித்த இவன்யாரோ என
நினைந்தார்"

என்பதாலும்,

கவிஞர் விளங்க வைக்கிறார். காதலனும் காதலியும் சிவனடியார்கள் அல்லவா? எனவே ஒன்றுபட்ட உள்ளங்கள் இரண்டும் சிவனருளை முன்னிட்டே நிற்கின்றன. அதனால், 'அற்புதமோ சிவனருளோ' என்கிறார் சுந்தரர். 'செஞ்சடையண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ' என்கிறார் பரவையார் இன்னும், 'கற்பகத்தின் பூங்கொம்போ' என்று சுந்தரர் நினைக்கும்போது, 'முருகனோ' என்று பரவையார் நினைக்கிறார். எத்துணை ஒன்றுபட்ட உள்ளங்கள்! கம்பன் காட்டுகின்ற காதற் காட்சிக்கும், சேக்கிழார் காட்டுகின்ற காதற் காட்சிக்குமிடையில் ஒரு பெரிய வேறுபாடு உண்டு. கம்பன் இலக்கிய நயத்தை மாத்திரம் நல்கி நிற்கிறான். சேக்கிழாரோ வெனிற் காவியப் படைப்பின் நோக்கத்தை நிறைவேற்றுவான் பொருட்டு இலக்கிய இன்பத்துக்கூடே தெய்வீக ஒளியொன்றைக் காட்டி வைக்கிறார்.

பக்திச் சுவை சொட்டச் சொட்டப் பெரிய புராணம் பாடப்பட்டது. ஆனபடியால், அதற்குரிய சில இடங்களைக் காண்போம். தில்லைப் பெருமான் திருக்கோயிலுக்குத் திருநாவுக்கரசர் சென்று கொண்டிருக்கிறார். கோயில் வாயிலை அண்மியதும் நாயனாரது நிலை வருமாறு உளது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கையுந் தலைமிசை புனையஞ்சலியன கண்ணும்
பொழிமழை ஒழியாதே
பெய்யுந் தகையன கரணங்களுமுடன் உருகும்பரிவின
பேறெய்தும் நின்றாடும்
மெய்யுந் தரைமிசை விழுமுன் பெழுதரும் மின்தாள்
சடையொடு
ஐயன் திருநடம் எதிர்கும் பிடுமவர் ஆர்வம்
பெருகுதல் அளவின்றால்."

தலைமிசைக் கூப்பிய கரங்கள்; கண்களிலே இடையறாது பொழியுங் கண்ணீர்: அந்தக் கரணங்கள் உருகுகின்ற நிலை; உடம்பு விழுதலும் எழுதலும் ஆகிய முயற்சிகள......எனவே, மனம்-வாக்கு-காயம் மூன்றும் இறைபணியில் ஈடுபடுகின்றன. இதனால், உள்ளத்திலே ஒரு பேரார்வம் தாண்டவமாடுகிறது. மற்றோரிடத்திற் சுந்தரரையும் இதே நிலையில் அமைத்துக் காட்டுகிறார்.

"ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள அளப்பருங்
கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குண மொருமூன்றுந் திருந்துசாத்
வீகமேயாக
இந்து வாழ் சடையா னாடு மானந்த எல்லையில்
தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா
மகிழ்ச்சியில் மலர்ந்தார்"

கண்ட கண்களே எம் பெருமானை இடையறாது நோக்குகிறது. இந்த நிலையில் ஏனைய நான்கு இந்திரியங்களின் தொழிற்பாடுகளும் அடங்கிக் கண்களுக்கே சக்தி சென்றுவிட்டது. இதனால், சுந்தரருடைய செவிகள் கேட்கவில்லை; மெய்யுணரவில்லை. வாய் அசையவில்லை. அது மட்டுமா? அந்தக் கரணங்கள் நான்கும் தமது தொழிற்பாட்டைச் சிந்தைக்கு அளித்துவிட்டன. சிந்தை இடையறாது எம்

பெருமானைத் தியானிக்கிறது. சாத்வீகம் தலையெடுத்து நிற்கிறது. இந்த நிலையிற் சுந்தரருடைய உள்ளம் தில்லைப் பெருமான் திருவடிகளிலே தோய்கிறது என்று காட்டிய சேக்கிழாரின் பக்திச் சுவைக்கு வேறு சான்றும் வேண்டுமா?

இனி, பெரிய புராணங் காட்டும் சித்தாந்தக் கருத்துகள் சிலவற்றைக் கவனிப்போம்.

சேக்கிழார் பன்னிரண்டாம் நூற்றாண்டினர். இவர் காலத்தில் எதுவித சித்தாந்த நூல்களுந் தோன்றிற்றிலது. பதின்மூன்றாம், பதினான்காம் நூற்றாண்டுகளே சித்தாந்த நூல்கள் தோன்றிய காலமாகும். எனினும், சேக்கிழார் ஞானவிளக்கமுடையவரான படியால் சித்தாந்தக் கருத்துகள் பலவற்றை ஆங்காங்கே விளக்கிச் செல்கிறார். பதி, பசு, பாசம், மும்மலம், இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திணிபாதம், நான்கு பாதங்கள் என்பவற்றைப் பற்றிய விளக்கங்கள் பெரிய புராணத்திற் பலவிடங்களிற் காணப்படுகின்றன.

''முன்னை வல்வினையும் நீங்கி முதல்வனை
யறியுந்தன்மை
துன்னினான் வினைகள் ஒத்துத் துலையென
நிற்றலாலே"

என்ற பாடலில் இருவினை யொப்பு விளக்கப்பட்டு இருக்கிறது.

''திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர்
காணாமுன்னே
அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு
நோக்கமெய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட்டகல
நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழற் பொருவிலன்புருவ
மானார்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே நயன தீட்சையைப் பற்றிய குறிப்புத் தொனிக்கிறது.

"தன்பரிசும் வினையிரண்டும் சாருமலமுன்று மற
அன்பு பிழம்பாய்த் திரிவார் அவர் கருத்தின்
அளவினரோ"

என வரும் பாடலில் ஆன்மாவானது மலமகன்று சிவமாகுந் தன்மை கூறப்பட்டுள்ளது.

மற்றோர் இடத்தில் அவர் காட்டிய உவமையின் சிறப்பு ஒன்றைக் கவனிப்போம்.

"பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும்
வஞ்சமாக்கள் தம் வல்வினையும் பரன்
அஞ்செழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சம் என்ன இருண்டது நீண்டவாள்"

பெண்கள் இயல்பாகவே சில எண்ணங்களைத் தம் மனத்துள் அடக்கி வைத்திருக்கும் தன்மையினர். அப்படியாக உண்மைகளை மறைத்து வைத்திருக்கும் அவருள்ளம் போலவும், அழுக்காறுடையோரின் கொடிய வினைபோலவும், திருவைத் தெழுத்தையறியாதோரின் நெஞ்சு போலவும் ஆகாயம் இருண்டிருந்தது என்று காட்டப்படுகிறது.

இப்படியாக வருணனை, காதற் சிறப்பு, பக்தி, சித்தாந்தக் கருத்துகள், உவமை நயம் ஆதியன பொலிந்து விளங்குவது பெரிய புராணம்.

"கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கிய..."

மெய்யடியார்களின் பெருமையை எத்துணை என்று யாராற்றான் இயம்ப முடியும்? எனினும், சேக்கிழார் சைவத் தமிழுலகத்திக்குச் செய்த மகத்தான தொண்டு பாராட்டுதற்குரியது. அவர் நல்கிய பெரிய புராணம் பக்திச் சுவை சொட்டும் சிறந்த காவியம் என்றால் அதில் மிகை ஒன்றுமில்லை. ○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீறாப் புராணம்

ஜே. எம். எம். அப்துல் காதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாத்தின் வண்ணமிகு ஊடக மொழிகளுள் தமிழும் ஒன்றெனநிலைநாட்டிய பெருமை, கலைசேர் இலக்கிய மணி மண்டபமாகத் திகழுஞ் சீறாப் புராணத்தைச் சாரும். தமிழ்ப் புலமையிலே திளைத்து, இஸ்லாமியப் பண்புகளிலே ஊறிய உமறுப் புலவர் தமிழுக் களித்துள்ள சீறாப்புராணம். தமிழின் பெருங்காப்பிய வரிசையில் இடம்பெற்று உயர்ந்தது. 'சீறா' என்ற அரபுச் சொல் தரும் சிறப்பு அர்த்தத்தை முதலிற் கூறும் அப்துல் காதிர் அவர்கள், சீறாப் புராணம் எவ்வாறு நாற்பயனுங் கொண்டு பெருங் காப்பியமாகத் திகழ்கின்றது என்பதை ஆணித்தரமாக நிறுவுகின்றார். நபி பெருமானாரே தன்னிகரில்லாத் தலைவனாக இருக்கிறார் என்று காப்பியத் தலைவரைக் குறித்துச் சொல்லும் இடத்தில் அவருடைய மார்க்க பக்தி மிளிர்கின்றது. இஸ்லாமியத் தூய மரபிலிருந்து வழுவாமல், எவ்வாறு செந்தமிழின் சீரிய இலக்கிய மரபை உமறுப் புலவர் பேணுகின்றார் என்று விளக்கும் இடம் மிகவும் சுவைப்பட அமைந்துள்ளது. 'காக்குதற் குதித்த வள்ளல் காரிகை வடிவைக் கண்ணால் நோக்கியும் நோக்காதது போல' என்ற அடியை மிதிலையில் அண்ணல் சீதையை நோக்கிய நிகழ்ச்சியின் பின்னணியில் விளக்கியிருப்பதும் நன்றாக அமைந்துள்ளது. இஸ்லாமியரல்லாதோரையும் சீறாப் புராணத்தைப் படிக்கத் தூண்டுவதாக அவர் சொற்பொழிவு அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும்.

- இரசிகமணி கனக. செந்திநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2004-4-26
LIBRARY.

அமிழ்தினுமினிய அருந்

தமிழன்னைக்கு அரும்பணி புரிதலையே பெருங் கடனாய்க்கொண்ட செந்தமிழ்ச் செல்வர் வரிசையில் இஸ்லாமிய நன்மக்கள் பலர் ஈடிணையற்று விளங்கு கின்றனர். இவ்விஸ்லாமியப் பாவலரும் நாவலரும், பெருங்காப்பியங்கள் முதல் சிறு பிரபந்தங்களீறாகப் பன்னூற்றுக் கணக்கான பொற் பூணாரங்களைத் தமிழன்னைக்குச் சூட்டி மகிழ்ந்துள்ளனர். ஆயினும், இவர்கள் தமிழ்கூறு நல்லுலகால் நன்கறியப்படாமல் குடத்துளிட்ட விளககுப்போலவே இதுகாறும் இருந்து வருகின்றார்கள். இவ்வவல நிலை நீங்கி, இஸ்லாமியரின் இன் தமிழ் நூல்களுந் தமிழ்த் தாயின் தவப்புதல்வரனைவராலும் சமநோக்குடன் பயிலப் படும் நாள் அண்மிவிட்டமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

இஸ்லாமியரியற்றிய தமிழிலக்கியங்களுள் 'சீறாப் புராணம்' தனி சிறந்த நூலாய் இலங்குகின்றது. 'சீறா' என்பது 'சரிதை' எனப் பொருள்படும் ஓர் அரபுச் சொல்லாகும். சரிதைகள் பல உளவாகவும் சிறப்பு நோக்கி, வான்புகழ் வாய்ந்த வள்ளல் நபியின் திருவரலாற்றையே 'சீறா' என்னுஞ் சொல் இது காலை சுட்டி நிற்கின்றது. தம்மை ஒப்பாரும் மிக்காரும் இல்லாத-தன்னிகரில்லாத் தலைமகனாகிய-நபிகள் கோமானையே பாட்டுடைத் தலைவராய் இந்நூல் கொண்டுள்ளது. சீறாப் புராணத்தை இயற் றியவர் எட்டயபுர வேந்தரின் அவைக்களப் புலவ ராயிருந்த உமறுப் புலவரென்னும் ஓங்கிய சீர்த்தியின் உயர்ந்த நாவலராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த உமறுப் புலவர், அது காலை வடநாட்டிலிருந்து வந்து தென் நாடெங்கும் வெற்றி முழக்கஞ் செய்து பல புலவர் களை வாதில் வென்ற 'வாலைவாருதி' என்பானை வாதிலே வென்றார். இதன் மூலம் தமது ஆசிரிய ராகிய கடிகை முத்துப் புலவருக்கும், சமஸ்தானத் துக்கும்-ஏன் தென்னாடனைத்துக்குமே பெரும் புகழ் தேடித் தந்தார்

மேற்கிலிருந்து தோன்றிவந்த இஸ்லாமியப் பேரொளியானது தமிழ்நாட்டில் மூலைமுடுக்குகளில் எல்லாங்கூடப் பரவிப் பிரகாசித்த காலம் அது. முஸ்லிம் புரவலர்கள் தமிழையும் தமிழ்ப் புலவர் களையும் போற்றி வளர்த்த காலம். இஸ்லாமியத் திருநெறியினை ஒட்டிய தமிழ் நூல்கள் பல தோன்ற வேண்டுமென்னும் வேட்கை தளிர்விட்ட காலம். எனவே, செத்துங் கொடை கொடுத்த சீதக்காதி வள்ளலின் தோழமைபெற்ற உமறுப்புலவர் இறவாப் புகழ்பெறவல்ல நூலொன்றைத் தமிழிற் செய்யப் போந்தார். செந்தமிழ் மரபு பேணி நூலியற்றும் ஆற் றல் அவரிடம் இருந்தது. ஆயினும், இஸ்லாமிய மரபு பிறழாது உலகுடைய கோமானின் உயர்சரிதையை அவர் உரைக்க முடியுமோ என்பதே இஸ்லாமிய அறிஞர்களின் ஐயத்துக்கிடமாயிற்று. இருப்பினும் அவர் ஈற்றில் யாவருடைய ஒப்புதலையும் பெற்றார். இரு மரபையும் போற்றும் உயர் நூலாய் நின்று நிலவுகின்றது சீறாப் புராணம்.

சீறாப் புராணம், தமிழிலக்கணத்திற் கூறப்படுங் காப்பிய விலக்கணங்களுக்கோர் எடுத்துக் காட்டாய் இலங்குகின்றது தண்டியாசிரியர் கூறும் 'பெருங் காப்பிய நிலை'யினைத் தக்கவாறுணர்ந்து நூல் இயற்றியுள்ளார் உமறுப்புலவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காப்பியமானது 'நாற்பொருள் பயக்கும் நடைநெறித்தாகி' இயல வேண்டுமென்பது விதி. 'அறம் பொரு ளின்பம் வீடடைதல் நூற்பயனே' என்றதனால் நூலானது அறம், பொருள், இன்பங் களைப் பயப்பதுடன் வீடுபேறு எய்தற்காம். நன் னெறியை இனிது விளக்குதல் வேண்டுமென்பதும் நன்கு விளக்கமுறுகின்றது. இந்நான்கினுள் ஒன்றும் பலவுங் குறைந்து வருவது சிறுகாப்பியம் எனப்படும். ஐம்பெருங்காப்பியங்கள் என்று சிறப்பித்துக் கூறப் படும் சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணி மேகலை, குண்டலகேசி, வளையாபதி என்பன உண் மையிலேயே பெருங்காப்பியங்கள் தாமோ என்பதில் அறிஞர்கள் கருத்து வேற்றுமை கொண்டுள்ளார்கள். சீவகசிந்தாமணி ஒன்றே பெருங்காப்பிய விலக்கணங் களை முற்றிலும் பெற்று விளங்குகின்றது என்பர் சிலர்.

சீறாப் புராணம் தன்னிகரில்லாத் தலைவனைக் கொண்டு, ஏனைய எல்லா அங்கங்களுஞ் செய்விதின் வாய்ந்து விளங்கியபோதிலும், அறமுதல் நான்கில் ஒன்றாய் வீடுபேறு கூறப்பெற்றிலதாதலின், அஃது ஒரு சிறு காப்பியமே ஆகும் எனக் கூறுவாரும் உளர். வீடெனப்படுவது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகலின் நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம் என்பதனை உட்கொண்டதனாற் போலும், உமறுப்புலவர் வீடுபேறு கூறிற்றிலர் எனத் தமக்குத் தோன்றியவாறே கொண்டு அன்னார் இடர்ப்படுவர்.

முப்பால் நூல் எனப்படுந் திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும் மட்டுமே யன்றி வீடுபேறடையும் வழியையுந் திறம்படக் கூறு கின்றது என்பது பேரறிஞர் பலர் கருத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கின் திறமறிந்து செப்பிய தேவு' என வள்ளுவர் அக்காலத்திலேயே சிறப்பிக்கப்பட்டுள்ளார். வீடுபேற்றின்பம் சிந்தையாற் கருதவும், மொழியால் உரைக்கவும் இயலாமை பற்றி அதனை அடைதற்காம் நெறி கூறுதல் நூல்களிடத்து இல்லை என்பது பொருந்தாக் கூற்றாம், அங்ஙனமாயின், நூற்பயனுள் வீடடைதல் ஒன்றாதல் எங்ஙனஞ் சாலும்? மறைமலையடிகளார் தாமியற்றிய திருக்குறள் ஆராய்ச்சியில் இதனைச் செவ்வனங் கூறியுள்ளமையுங் காண்க.

வீடுபேறெய்தும் வியன் நெறியினை வாய்த்துழி வாய்த்துழி விளகக உமறுப்புலவர் தவறினாரல்லர். இன்ன நெறியினை மேற்கொண்டோர் வீடடைவர். இன்ன தன்மையோர் இருளுலகடைவர் என்று பன்னிப் பன்னிக் கூறியுள்ள பாசுரங்கள் பன்னூற்றுக் கணக்காய் நூலெங்கும் பரவிக்கிடக்கின்றன.

அஞ்ஞான அரபிகள் வணங்கி வந்த அசேதனப் பொருளாகிய 'புத்து' ஒன்று அண்ணல் நபியோடு அற்புதமாய் மொழிகின்றது:

"வெண்ணிலவு துளித்தொழுகு மதிவதன
முகம்மதினை விளித்து நோக்
வண்ணமலர் வாய்திறந்து பெரியோன்றன்
திருத்தூதாய் வந்த கோவே
பண்ணரு நன் மறை நபியே வானவர் பொன்
அடிபரவப் படியின் வந்தோய்
எண்ணரும்பே ரொளியுமும தொளியில் வரக்
கதிர் வடிவாயிருந்த வேந்தே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அல்லாவின் திருத்தூதர் வேத நபி
முகம்மதெனை அகத்திற் கொள்ளார்
பொல்லாத நரகடைவர் உமதடியிம்
பணிந்து கலிமாவைப் போற்றிச்
சொல்லார மனத்திருத்த வல்லவரே
சிறந்த பெருஞ் சுவனமாள்வார்
எல்லாரு மெனைப் போல்வார்
அறிவரிது சரதமென இயம்பிற்றன்றே."

இங்ஙனம் ஓர் அற்ப 'புத்தி'ன் வாயிலாய்க்கூட சுவன வழி இன்னது, நரக வழி இன்னது என எடுத்துக் காட்டப் புலவர் தயங்கினாரல்லர்.

சீறாப் புராணத்தை அச்சியற்றியவர் புலவர் நாயகம் செய்கு அப்துல் காதிர் நயினார் லெப்பை ஆலிம் புலவர் ஆவர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இப்பெரும் புலவர் அவர் காலத்து இஸ்லாமியப் புலவருட் சிறந்து விளங்கினார். அன்னவர் உமறுப்புலவரைப் பற்றிக் கூறுங்கால்,

"..............சீறா வென்ன
முதனூல் நாமமே நாட்டி முதுபயன்
அறம் பொருள் இன்பம் வீடனைத்து மடங்கிய
திறம் பெறுங்காப்பியஞ் செய்தனர்"

எனக் கூறுதல் காண்க.

எனவே, உமறுப்புலவர் வீடுபேறு கூறினார் எனப் புலவர் நாயகம் கூறியவதனை யாமும் மேற்கொண்டு, சீறாப்புராணம் நாற்பொருளையுங் கூறும் ஒரு பெருங்காப்பியமேயெனத் துணிதலில் யாதுந் தவறின்று. காப்பியத் தலைவர் வீடுபேறெய்திய வரலாறு கூறப் பெற்றிலதே எனின், அற்றன்று; நூலால் வருவதாய நூற்பயன் அதனைக் கற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராய எம்போல்வார்க்கேயன்றி அன்னவர்க்கன்று என மறுக்க. கவிஞன் இந்நாற்பயனையும் எம்மனோர்க்கு அறிவுறுத்தலே நூற்பயனாமென்க.

இனி, இந்நூல் கூறும் வரலாற்றினைச் சுருக்கமாய் நோக்குவோம்.

முது குரவர் வழியினுந் தூய்மையே நிறைந்த உயர் குடியாம் குறைஷிக் குலத்தில், அப்துல்லாவென்னும் நம்பிக்கும், ஆமினா வென்னும் நங்கைக்கும் அருந்தவ மகவாய் மக்கமா நகரத்தில் அண்ணல் நபி அவதரித்தனர். தாய் வயிற்றிலிருக்கும்போதே தந்தையையும், ஆறாம்வயதிலேயே அன்னையையும்இழந்து. பாட்டனாராலும் பின்னர் பெரிய தந்தையாராலும் வளர்க்கப்பட்டனர் 'அலிமா' என்னுஞ் செவிலியாற் பாலூட்டப்பட்டு, அமரர்களால் நபித்துவ இலச்சினையாகிய இலாஞ்சனை பொறிக்கப்பட்டு, சிறுவருடன் கூடிப் புனல் விளையாட்டமர்கின்றனர். வாலிபராய் வளர்ந்தபோது வணிகர் தலைவராய் வளநகராம் சாமுநகர் செல்கின்றனர். பற்பல அற்புதங்கள் செய்கின்றனர் மங்கை கதீசாவின் மனத்தைக் கவர்ந்து, மணமும் புரிகின்றனர். இவ்வரலாறுகள் 'விலாதத்து'க் காண்டமென்னும் முதலாங் காண்டத்தில் அழகுற எடுத்துக் கூறப்படுகின்றன.

ஆண்டவன் ஆணைப்படி அமரர்கோன் ஜிப்ரீல் (அலை) வாயிலாய் நாற்பதாம் வயதில் நபிப்பட்டஞ் சூட்டப்படுகின்றனர். மறமாக்கள் மத்தியில் அறம் வளர்க்கத் தொடங்கி அல்லலுழல்கின்றனர். இஸ்லாம் தழைக்கின்றது. அற்புதங்கள் பல நடக்கின்றன. இடுக்கண் அழியாத இன்பத் தோழர் பலர் அண்ணலைப் பின்பற்றுகின்றனர். ஆருயிர்ப் பிராட்டியின் பிரிவு அல்லலைக் கூட்டுகின்றது. மற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக்களின் மத்தியிலும் மறைவளர்ந்தோங்குகின்றது. இவ்வரலாறுகள் இரண்டாங் காண்டமாகிய 'நுபுவத்து'க் காண்டத்தில் இனிமையாய் எடுத்துக் கூறப்படுகின்றன.

அண்ணலுக்கும் தோழர்களுக்கும் ஆற்றொணாத் துன்பங்கள் நிகழ்வதால் ஆண்டவன் ஆணைப்படி, பிறந்த பொன்னாட்டை நீத்து ஆதரவு நிறைந்த மதீனாவென்னும் அணி நகரத்துக்குக் கரந்து செல்கின்றனர் நபிகளார். தோழர்களுஞ் சென்றார்கள். ஆதரவாளர் நகரத்திலே இஸ்லாம் வேரூன்றிப் படர்கின்றது. இதனைச் சகிக்காத மக்கத்தார் படையெடுக்கின்றனர். இஸ்லாத்தை ஒழிக்க எத்தனையோ போர்கள் நிகழ்த்தப்படுகின்றன. அவற்றையெல்லாம் முறியடித்து, ஆண்டவனுதவியால் அறப் போர்த் தளபதிகள் வெல்கின்றனர் இவற்றினிடையே நபிகளின் புதல்வி பாத்திமாவுக்குத் திருமணம் நிகழ்கின்றது. பேரர்கள் பிறக்கிறார்கள். மக்கள் கூட்டம் மாண்புடன் இஸ்லாத்தைத் தழுவுகின்றது. இவ் வீரப் போராட்ட வரலாறுகள் 'ஹிஜிறத்து'க் காண்டத்திற் கூறப்படுகின்றன.

மூன்று காண்டங்களையுந் தொண்ணூற்றிரண்டு படலங்களையுங் கொண்ட இந்நூலில் ஐயாயிரத்து இருபத்தியேழு திருவிருத்தங்கள் உள.

நபி பெருமானின் இறுதிக்கால வரலாறு உமறுப் புலவராற் பாடப்படவில்லை. பிற்காலத்தில், பனீ அகுமது மரைக்கார் என்னும் புலவர் 'சின்னச் சீறா' என்னும் பெயரில் ஏனைய வரலாற்றைப் பாடியுள்ளார்.

உமறுப்புலவர் தமிழிலக்கியங்களிற் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார் என்பதைச் சீறாப் புராணத்தைப் பயில்வோர் இலகுவில் அறிவர். அவருடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணப்படலங்களில் மண நூலாகிய சிந்தாமணி யின் மணம் வீசுகின்றது. நாடு நகர வருணனைகள் கம்பராமாயணத்தை நினைவூட்டுகின்றன. அற்புத நிகழ்ச்சிகளும் பக்திச்சுவையும் பெரிய புராணத்துக்கு எம்மை இழுத்துச் செல்கின்றன. நீதி வாக்கியங்கள் வள்ளுவரைக் கொண்டு வந்து எம்முன் நிறுத்துகின் றன. பக்திப் பாடல்கள் தேவார திருவாசகங்களைச் சுவைக்கச் செய்கின்றன. வீரப்போர் வரலாறுகள் மாபாரத ராமாயண யுத்த களங்களுக்கு எம்மை இட்டுச் செல்கின்றன.

இனி, இஸ்லாமியத் தூய மரபையுஞ் செந்தமி ழின் சீரிய மரபையும் ஒருங்கே பேணுதலில் உமறுப் புலவர் அடைந்துள்ள வெற்றிக்கு ஓர் உதாரணம் காண்பாம்.

இராம கதையை வடமொழியில் வகுத்த வால்மீகி, திருமணத்தின் முன்னர் இராம சீதையர் ஒருவரையொருவர் கண்டு காதல் கொண்டதாய்க் கூறிற்றிலர். அச்சரிதையைத் தமிழ் செய்ய வந்த கம்பரோ தமிழ் மரபிற்கேற்ப, அத்தலைவனும் தலைவியும் திருமணத்தின் முன்னரே கண்டு காதல் கொண்டனரெனக் கற்பிக்கின்றார். கௌசிகர் முன் னும், இலக்குவன் பின்னும் வர இராமபிரான் மிதிலா நகருட் செல்கின்றான். மேன்மாடியிலே பெண்ணலங் கனிய நிற்கும் பிராட்டியைக் காண்கின்றான். அவ ளுங் காண்கின்றாள். கண்கள் கவ்வுகின்றன. உணர்வு கலக்கின்றது. பிராட்டி நோக்கிய நோக்காகிய கூரிய வேலாயுதங்கள் வீரனின் புயவரைகளிற் பதி கின்றன. வீரத்திருமகனின் கண்களாகிய அம்புகள் திருமடந்தையின் தனபாரங்களிற் சென்று தைக்கின் றன. இங்ஙனம் கற்பனையை வளரவிட்ட கம்பர் இரு வர் தம் உள்ளத் துணர்ச்சிகளையுஞ் செம்மையாய்ப் படம் பிடிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், இஸ்லாமியத் திருமரபைப் பேணும் பெரியோர் இத்தகைய வருணனையை, கற்பனையை இஸ்லாமியப் புனிதர்களின் வரலாற்றில் அனுமதி யார். கற்பியலை மட்டும் போற்றும் அவர்கள், திரு மணத்தின் முன்னர் தலைவனும் தலைவியும் தனிமை யில் அளவளாவுதலை அனுமதிப்பதில்லை. திருமணத் தின் முன்னர், ஒருவரையொருவர் பார்த்துக் கொள் ளத் தடையில்லாவிடினும் பெண்மையின் பூரணப் பொலிவினை வெளிக்காட்டும் தோற்றங்களைக் காணவோ நுகரவோ தடையுண்டு. எனவே, இஸ்லா மியப் புலவர் புனித மாதவர் ஒருவரின் கண் 'தாக் கணங்களையவள் தனத்திற் றைத்த' கதையைக் கூற முடியாது.

உமறுப் புலவர் தமிழ் நூல் செய்ய வந்தவர். அவர் தமிழியற் கொப்பத் தலைவன் தலைவியர் சந்திப்பைக் கூறக்கடமைப்பட்டவர். ஆயின், இஸ்லா மியத் திருமரபையும் அவர் பேணுங் கடப்பாடுடைய வர். எனவே, இருமரபுக்கு மொத்த புது வழியைக் கைக்கொண்டுள்ளார்.

நபிகளார் இளைஞராயிருந்த காலம். கதீசாப் பிராட்டியுடன் முதற் சந்திப்பை நிகழ்த்துகிறார் உமறுப்புலவர். வணிகப் பெருமாட்டியின் இல்லத் துச்கு வாலிபர் முகம்மது (ஸல்) அழைக்கப்படுகின் றார். பீடத்தில் அமர்கின்றார். பிராட்டி அழகின் திருவுருவாய் வீரத்தின் விளைநிலமாய் வீற்றிருக்கும் பெருமானைக் கண்டு மயங்குகிறார். ஆயினும், நாணெனும் போர்வை போர்த்துக் கற்பெனும் வேலி கோலித் தம்மைத் தாமே காத்தும், தமது உள்ளத் தைத் தம்மிடம் காணாது வருந்துகிறார்.

பிராட்டியின் நிலை இவ்வாறாகப் பெருமானின் நிலையைப் பார்ப்போம். பிராட்டியை ஏறிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கினாரென்றோ அங்கங்களிற் கண்களைத் தைக்க விட்டாரென்றோ ஈண்டு புலவர் கூறிற்றிலர். அங்ஙனங் கூறுதல் மாசற்ற சீல வாழ்வுக்கொரு முன் மாதிரியாய் வந்த மாநபிக்கு மாசுகற்பித்தலாகும். எனவே, அண்ணலின் நிலையை மிக்க அவதானத் துடன் கூறுகின்றார் புலவர்:

"காக்குதற் குதித்த வள்ளல் காரிகை வடிவைக்
 கண்ணால்
நோக்கியும் நோக்காதும் போல் நொடியினில்
 எழுந்தம்மாதின்
மாக்கடலனைய கண்ணும் மனமும்
 பின்தொடர்ந்து செல்லக்
கோக்குல வீதி நீந்திக் கொழும னையிடத்திற்
 சார்ந்தார்."

உலகைத் தீநெறிகளினின்று விலக்கி நன்னெறி உய்த்துப் புரத்தற்கென்றே தோன்றிய அருள் வள்ளலைக் 'காக்குதற்குதித்த வள்ளல்' என்று ஈண்டு போற்றுந் திறம் நயத்தற் குரியது. எத்தகைய சந்தர்ப் பத்திலும், அவர் செந்நெறி தவறாச் சான்றோர் என்பதை இத்தொடர் வலியுறுத்துகின்றது. எனவே, இத்தகைய சீர்மிகு சான்றோர் தமக்கு முன்னே நிற்கும், தமக்குரியளல்லளாய ஒரு மங்கையை எங்ஙனம் ஏறிட்டு நோக்குவர்? பெண்மையின் அங்கங் களிலே தமது கண்களைத் தைக்கவிட எங்ஙனம் ஒருப் படுவர்? எனவே, கவிஞர் 'காரிகை வடிவைக் கண்ணால் நோக்கியும் நோக்காதும் போல்' என்று மிக்க நாகரிகமாகச் சதுரப்பாட்டுடன் கூறுகின்றார். அத்துடன் நில்லாது, அவ்விடத்தை விட்டு நொடி யினில் எழுந்து போகுமாறு அப்பிரானை அனுப்பி நாணப்பண்பின் உச்சாணிக்கே அவரை உயர்த்திக் காட்டுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, மறைமொழி போதித்த மாநபி இறைவனுக்காகவே வாழ்ந்து, இறைவனுக்காகவே எதனையும் செய்துகாட்டிய ஒப்பற்ற தியாகப் பண்பு இந்நூலெங்கும் நின்று மிளிர்கின்றது. அவர்கள் தமக்காக வாழாது, இடர் எதுவரினும் அவனருள் என ஏற்றார்கள். இப்பண்பே சீறாப் புராணத்திற் சிறந்து விளங்குதலைக் காணலாம்.

பகைவராலே துரத்தப்பட்டுக் கல்லடியுண்டு இரத்தஞ் சிந்திச் சோர்வுற்ற தருணத்தில், அப் பெருமான் அவர்கள் என்ன கூறுகின்றார்கள்? உமறுப் புலவர் கூறுவதைப் பார்ப்போம்:

"ஊறுபட்டதன் வருத்தமும் பசியின் உள்ளு லைவும்
மாறுபட்டவர் தொடர்ந்ததன் நடந்த மெய்ம்ம லைவும்
பேறுபட்டமும் தந்தவன் அருளெனப் பெரிதின்
தேறுபட்டவண் இருந்தனர் திருநபி இறசூல்."

நபிகளார் மட்டுமன்றி, அவர்தம் தோழர்கள்கூட, தங்கள் உடல் பொருள் ஆவியனைத்தையும் இறைவனுக்கே அர்ப்பணஞ் செய்தார்கள் இறை தூதருக்கு முற்றும் பணிந்தார்கள். அவர்களின் தியாக வாழ்க்கையை அழகாக எடுத்துக் கூறுகின்றார் புலவர்.

பதுறுப்போர் ஆரம்பமாகின்றது. தமது தோழர்கள்-துணைவர்களுடன் மந்திரம் சூழ்கின்றனர் நபிகளார். அவ்வேளையில், அச்சீடர்கள் கூறும் வாக்கு அப்பெருமகனார் மீது அன்னவர்கள் கொண்டிருந்த ஆழிய பக்திப் பெருங்காதலையும், அவர் பொருட்டு எதையுந் தியாகஞ் செய்ய அவர்கள் சித்தமாயிருந்த நிலையினையும் எமக்கு எடுத்தோதுகின்றது.

"அடிகளே, தாங்கள் எங்களிடம் ஆலோசனை கேட்பதா? நாங்கள் கூறக் கூடியதென்ன உண்டு? தங்கள் திருவுளப் பாங்கிற்கிசைந்து, பகைவரை அழிக்கச் சொன்னாலும் அழிப்போம். அல்லது, எங்கள் உயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையே கொடுக்கச் சொன்னாலும் இக்கணமே கொடுக்கின்றோம்'' எனக் கூறுகின்றார்கள். எத்தகைய தியாகம்!

''அடிகளா புந்தியினிருந்தவை யுரைக்கிலவ்வழியே
முடியு மெங்களா லுரைப்பதென்
முரணுடையவரைத்
தடிமினென்றலுந் தடிகுவம் எமர்கடம் முயிரை
விடுமினென்றலும் விடுக்குவம் நும் திருவுளத்தால்''

என்று சீரொழுகக் கூறுகின்றார் உமறுப்புலவர்.

ஆடவர் வாழ்வில் மட்டுமன்றி, உமறுப்புலவர் கூறும் பெண்டிரும் தமது வாழ்வினை இறைவன் பொருட்டே வாழும் தியாக வாழ்வாகவே நடத்தினர். நபிகள் பெருமானின் நற்றவச் செல்வி பாத்திமாப் பிராட்டியின் உன்னதத் தியாகம் ஒன்றைப் புலவர் எமக்குக் கூறுகின்றார். அத்தியாகச் செல்வியின் திருமண நாளன்று ஒரு புதிய குப்பாயம் அவருக்குக் கூறையாக அணிவிக்கப் பட்டது. அடுத்த நாட் காலையில், அம்மணமகளை மணமகனில்லத்துக்கு அழைத்துச் செல்ல இனத்தவர் வந்தனர். வள்ளல் நபியும் வந்தார்கள். தமது மகளை நோக்கினார்கள். புதிய குப்பாயமின்றிப் பழையதை அணிந்திருந்தது கண்டு திகைத்தார்கள். ''ஏன்?'' என வினாவினார்கள் துகில் இலாச் சஞ்சலத்தினால் வந்த ஓர் ஏழைக்கு அதனைத் தாம் தானமளித்த விபரத்தைத் தந்தையாரிடந் திருமகளார் கூறினார். இம்மாதரசி தமது திருமணக் கூறையை ஏழைக்கு அளிப்பதாயிருந்தால், அவர் எத்தகைய மனப்பரிபக்குவம் வாய்ந்த, தனக்கென வாழாப் பண்புமிக்கத் தவத் திருவாட்டியாய், சிறுமுதுக் குறைவியாய் இருத்தல் வேண்டும்? எந்த வள்ளலில் வரலாற்றிலாவது இத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகைய தானத்தைக் கேள்வியுற்றிருக்கிறோமா? எந்த வரலாற்று நிகழ்ச்சியும் இதற்கீடாகுமா?

திகைப்பிலிருந்து விடுபட்ட வள்ளலார் (ஸல்) தந் திருமகளை நோக்கி, "இரவலனுக்குப் பழையதை ஈந்துவிட்டுப் புதிய குப்பாயத்தை மணமகள் அணிந்திருக்கலாமே?" என்று கேட்டார்கள். அப்பொழுது, அந்த அறிவுசால் தியாகச் செல்வி அளித்த அழகிய விடையைக் கேளுங்கள்:

"மாரிபோலக் கொடுக்குங் கொடை வள்ளலாகிய எந்தையே, நம்மனத்துக் கினியவென நாமுவந்துள்ள அழகிய பொருள்களையே அல்லாவின் பொருட்டு மனம் விழைந்து வழங்கவேண்டுமென்று தங்களுடைய பழைமை பொருந்திய வேத வாக்கியங்கள் கூறுகின்றனவன்றோ? எனவே, எனது விருப்புக்கு இசைந்த புதிய ஆடையை எமது இறைவன்பாற் பூண்ட பக்தியின் பொருட்டுத் தானஞ் செய்தேன்" என்று அறிவொளிர, அழகொளிரக் கூறினார்கள்.

"அழகிய தெவையு மல்லாவுக்காகவே
விழைவுடன் கொடுத்திட வேண்டு மென்று நும்
பழமறை வாக்கினிற் பகர்ந்த தாலரோ
மழைதவழ் கொடையுனீர் வழங்கினேனென்றார்."

இவ்விடையைக் கேட்ட வள்ளலின் மகிழ்ச்சிக்கு ஈடுண்டா? வள்ளலாரின் அறிவே திரண்டு உருவாய் வந்த வனிதையரன்றோ பாத்திமா!

"தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது"

என்பர் குறளுடையாரும்.

பிறன் மனை நயக்கும் பேதையைச் சாடுகின்றது இராமாயணம்; பொறுமையின் சிறப்பைப் போற்றுகின்றது பாரதம்; வாய்மையின் வெற்றியைப் பறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாற்றுகின்றது அரிச்சந்திர புராணம்; பக்தியின் மேன்மையைப் பாராட்டுகின்றது பெரிய புராணம் என்றால், சீறாப் புராணம் தியாகத்தின கீர்த்தியைத் திசையெட்டும் முழக்குகின்றது எனக் கூறுவது மிகை யன்று.

சீறாப் புராணம் எம்மை எங்கே இட்டுச் செல் கின்றது? அது காட்டும் பாதை என்ன?

உடல் பொருள் ஆவி அனைத்தையும் இறைவ னுக்கே பலியாக அர்ப்பணித்து, 'தான்' என்னும் எண்ணத்தினை 'பனா' (இம்மை) ஆக்கி, 'உண்மை' யாகிய அவனிடமே ஓயா இன்பத்திற்றிளைக்கும் பெற்றிக்கு எமக்கு அது வழிகாட்டுகின்றது.

அவர் கூறுவது போல ''முதல்வனைப் பணிந் துள்ளி வாழ்த்துவோம்.' அவனை உடலாற் பணிந்து, மனத்தால் உள்ளி, மொழியால் வழுத்தி வணங்குவோம். இதுவே இஸ்லாம் கூறும் வணக்க மாகிய தொழுகை.

''என்னுடைய புழுக் கூட்டை மலச்சடத்தை
வீணே போமிருக்கை யேது
மின்னதென வறியாது கிடந்து புவி
யிடத்துழன்ற வெளியே னந்தோ
வுன்னுடைய திருக்கூத்தை யறிவதென் கொல்
பதவியெனு மோயா வின்பந்
தன்னையடைந்திருப்ப தென் கொல் கிருபையளித்
தெப்பவமும் தடிய வேண்டும்.''

○

தேம்பாவணி

F. X. C. நடராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரறிஞரான F. X. C. நடராசா அவர்கள் வரமாமுனிவர் யாத்த தேம்பாவணி என்னுங் காப்பியம் தமிழ்க் கன்னிக்குச் சூட்டிய மாலை எனத் தொட்டுக் காட்டி, வீரமாமுனிவர் பிறப்பால் இத்தாலியராயினும், நடையிலே, உடையிலே, பண்பாட்டிலே அவர் தமிழர் ஆவாரெனச் சொல்லி, அவர் தமிழுக்குச் செய்த தொண்டை விளக்கமாகக் கூறியுளளார். அவர் எழுதிய திருக்காவலூர் கலம்பகத்தில் ஆசிரியருக்குள்ள ஈடுபாடு காரணமாக, அதை அறிமுகஞ் செய்து வைத்து, 'அம்மானை' என்ற பகுதியை விளக்கியுள்ளார். 'அம்மானை' என்பதற்குரிய பொருள் பலருக்குத் தெரிவதில்லை என்பதும் உண்மையே. அதையும் அறிந்துகொள்வது வேண்டப்படுவதே வீரமாமுனிவர் தேம்பாவணியைப் பாடுவதற்கு முன்னர் தமிழிலுள்ள அநேக நூல்களைக் கற்று உணர்ந்தார் என்பதையும், தேம்பாவணி என்ற சொல்லின் கருத்தையும் விளக்கி, மிக இறுக்கமான ஒரு பந்தியிலேயே காவியத்தை அறிமுகஞ் செய்துள்ளார். வீரமாமுனிவர் எவ்வாறு மகிழ்ச்சியான காட்சிகளையுங் துக்கமான காட்சிகளையும் ஈடுபாட்டுடன் விவரித்துள்ளார் என்பதற்குச் சில பாடல்களை எடுத்துக் காட்டியுள்ளார். இரு வேறுபட்ட பாத்திரங்களைச் சித்திரிக்கும் பொழுது, 'தூமஞ் சூடிய தூய்துகில் ஏந்துபு தாமஞ்சூடிய தாரொடு பூண்மலி காமஞ் சூடிய காந்தரி' என்று ஒருத்தியை வர்ணித்துள்ளமையைக் காட்டி, மற்றவளை 'கூனுருக் கோலில் ஊன்றிக் குலுங்கிய சென்னி சூட்டி' என நேர் எதிர் மாறாக வர்ணித்துள்ளமையை விளக்கியுள்ளார்.

- இரசிகமணி கனக செந்திநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்காப்பியம் உருவுந் திருவும்
பெற்றுக் கருவுற்றது. முச்சங்கத்துப் பாடல்கள் அங்க மாயின. நற்றமிழன்னை புனைவன புனைந்து, அணி வன அணிந்து காட்சியளித்தனள். இளங்கோவின் மணிச்சிலம்பு அன்னையின் கடிமணச் சீறடியில் கலீர் கலீர் என்று ஒலித்தது. தாளத்திற் கிசையச் சிலம் பினை ஒலிக்கச் செய்ய மணிமேகலையை இறுக்கிப் புனைந்தனள் அன்னை. சிந்தாமணி சூடாமணியாகத் திகழ்ந்தது கடிகாப்பாக கைகளில் வளையாபதி வளைந்து கொண்டது. குண்டலமும் கேசியும் ஒன்றாய் ஆடி நுடங்கின. காவியப் பூஞ்சோலையிற் பிரபந்தமலர்கள் முறுக்கவிழ்ந்தன. தாய்மையே உரு வானாள் தமிழ் அன்னை. முறுக்கவிழாக் கன்னி மாலை சூட்டி அன்னையைக் கன்னியாக்க விரும் பினார் முற்றத்துறந்த துறவி ஒருவர்.

அன்னையைச் சந்ததமுஞ் சிந்தையிலிருத்துபவர் அத்துறவி. அன்னை மரியாளைக் கன்னியாகவும் போற்றித் துதிப்பவர், அத்துறவி. ஆகவே, மரியாள் அன்னையுமானாள்; கன்னியுமானாள். இது சத்திய வேத உண்மை.

தமிழ் மக்கள் மறையிலும் இந்த உண்மை புலப்படு கின்றது. தாயுமானவர் உமாதேவியைப் போற்று மூகத்தான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆரணி சடைக்கடவுள் ஆரணியெனப் புகழ
அகிலாண்ட கோடியீன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென
மறைபேசும் ஆனந்தரூபியே'

என்று கூறிப் போந்துள்ளார். யேசுநாதரை ஈன்ற அன்னை மரியாள் கன்னியாகவே போற்றப்படுகின் றாள். இந்த ஒற்றுமையைத் தமிழன்னையிலுங் கண் ணுற்றார் வீரமாமுனிவர். 'கன்னடம் களி தெலுங்கு கவின் மலையாளமும் துளுவும் உன்னுதரத்து உதித் தெழுந்து ஒன்றுபல ஆயிடினும் ஆரியம்போல் உலக வழக்கழிந்தொழிந்து சிதையா உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துமே' என்ற சுந்தரம் பிள்ளையின் அடிகளை யொற்றி யுணர்ந்த வீரமா முனிவர் தேம்பாவணி என்ற தேம்பாத, வாடாத, கூம்பாத மலர்மாலையைத் தமிழ்த் தாய்க்குப் புனைந்து, அவளை என்றுங் கன்னியாக்கி, அகமிக மகிழ்ந்தனர். துறவியின் பெருமையே பெருமை!

வீரமாமுனிவர் உண்மையில் ஐரோப்பியர். இத்தாலி தேசத்திற் பிறந்தவர்; உத்தம கத்தோலிக்க துறவி; நடையிலே தமிழ மகன்; உடையிலே தமிழ் மகன்; பண்பட்ட தமிழ்மகன்; தண்டமிழ் ஆசான்; மறைமொழிவாயினன்; மலிதவத்திறைவன்; நிறை மொழிக் குரவன்; நிகரில் கேள்வியன்; காப்பியக் கவிஞன்; இலக்கணப் புலவர்: வசன எழுத்தாளர்; தமிழ்வளர்த்த தந்தை; எழுத்துத் திருத்திய வித்தகர்.

இவர் தமிழ்நாட்டிற் பிறக்கவேண்டியவர். இசை விரும்பி இசையாலே திசைபோய இத்தாலியநாட்டிற் பிறந்தார் போலும். இசைமொழியில் வளர்ந்த இளந் துறவி இத்தாலிய நாடுவிட்டு இந்தியத் தென்னகப் புகுந்தனர். தமிழ் கற்றனர். சுப்பிரதீபக் கவிராய

ரிடந் தமிழ் கற்றுத் தேறினர். உற்றுழி உதவியும் பிற்றை நிலை முனியாதுங் கற்றார். முத்தமிழிலும் வித்தகரானார். பத்து ஆண்டுகளிலே தமிழ்மொழி யின் கரைதுறை கண்டனர். தமிழ் மொழியில் இலக் கணங் கண்டார்; இலக்கியங் கண்டார்; அகராதி கண்டார். வசனநடை கண்டார்.

முதன்முதலிலே தமிழ் அகராதி கண்டவர் இவரே. இது சதுர் அகராதி எனப்படும். தொன்னூல் விளக்கமென்னும் ஐந்திலக்கண நூலைச் சூத்திரங் களால் யாத்தனர் வசன நூல்கள் பல எழுதினார். இவற்றுட் பல சத்தியவேத சம்பந்தமானவை. சிறு கதைத் தொகுதியாகப் 'பரமார்த்தகுரு கதை' என்ற நூலை வெளியிட்டார். அது கேலிக்கதைகள் பொதிந் தது.

வீரமாமுனிவரின் திருக்காவலூர்க் கலம்பகம் சொல்லணி பொருளணி மிக்கது. அருள் நிறைந்தது. பல அரிய துறைகளையுடையது. அருகிய வழக்கு களை எடுத்துக் காட்டுவது. உதாரணமாக ''அம்மானை'' என்பதற்குரிய பொருள் பலருக்குத் தெரிவதில்லை மூன்று பெண்கள் கூடி அம்மானை ஆடுகையில், அவர்களில் ஒருத்தி தலைவனைப் புகழ்ந்து கூற வேறொருத்தி அதில் ஐயங்கொண்ட வளாய் வினாவ, மற்றொருத்தி அவள் வினாவிற்கு மற்றிருவரும் ஏற்கும்படியான விடை கூறுவதாகப் பாடப்படுவதே அம்மானையாகும். கலம்பக நூல் களில் அம்மானை ஓர் அங்கமாகும். திருக்காவலூர்க் கலம்பகத்தில் அமைந்த அம்மானைப் பாடல் போல வேறு எந்தக் கலம்பகத்திலுஞ் சிறப்புற - அழகுற அமையவில்லை. இஃதொன்றுமே வீரமாமுனிவரின் பேராற்றலையும் புலமையையும் புலப்படுத்தப் போதுமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மானையின் முதலாவது தன்மை ஒருத்தி தலைவனைப் புகழ்தல். இங்கு தலைவியைப் புகழ்தல். அஃதாவது தேவமாதாவைப் புகழ்தல். முதலா மொருத்தி தேவமாதாவைப் புகழ்கின்றாள்.

சீர்த்த திருக்காவல் நல்லூரர் தேவணங்கு தாள்கமலம்
நீர்த்த திருத்திங்கள் மேல் நின்றனகாண் அம்மானை

என்கின்றாள். அஃதாவது, திருக்காவலூரில் ஒரு தெய்வப் பெண் இருக்கிறாளாம்; அவளுடைய தாமரை போன்ற பாதங்கள் எப்போதும் சந்திரன் மேலேயே நிற்கின்றனவாமே; —இவ்வாறுரைத்தாள் முதலாமொருத்தி.

இச்செய்தியைக் கேட்ட இரண்டாம் ஒருத்தி சும்மா இருப்பாளா? எதிர்ப்புரை கூறினாள். குற்றங் காட்ட விரும்பினாள். நெற்றிக் கண்ணைக் காட்டி லும் குற்றமே குற்றம் என்ற பரம்பரையில் வந்த வளல்லவா? இஃதென்ன வேடிக்கை? தாமரைக்குஞ் சந்திரனுக்கும் பொருந்தி வராதே. சந்திரனைக் கண் டாற் றாமரை கூம்புமல்லவோ? சூரியனுக்கல்லவோ தாமரை மலரும்? இது வெறும் புளுகு. கமலமலர்ப் பாதங்கள் கூம்பியிருக்கின்றன; அங்கு வண்டூதா; தாதளையா என்றல்லவோ சொல்லவேண்டும்? அவ்வாறாயின் ஒப்புக் கொள்ளலாமென்கின்றாள்.

நீர்த்த திருத் திங்கள்மேல் நின்றன என்றா மாகில்
ஆர்த்த திருவண்டு உவப்ப ஆங்கு அலரா
அம்மானை

என்று பாடினாள்.

இவற்றைக் கேட்டுக் கொண்டும், அம்மானை ஆடிக்கொண்டுமிருந்த மூன்றாம் ஒருததி இருவருக் குஞ் சமாதானஞ் செய்ய விரும்பினாள். 'தேவ மாதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின் பாதங்கள் மலர்ந்த கமலங்கள்தாம். ஏனெனில், தேவமாதா சூரியனையே ஆடையாக அணிந்திருக்கின்றாள்; ஆகையால், அவள் பாதங்கள் மலர்ந்திருக்கின்றன. வண்டுகளும் தேனுண்ண ஆரவாரிக்கின்றன' என்றாள்.

போது அலரும் தண்சினைக்காப் பூங்காவலூர் அரசி
ஆதவனைத் தூசாய் அணிந்தனன் காண்
அம்மானை

இதனைக் கேட்ட முதலாமொருத்தி "ஆமாம்" என்றனள்.

இரண்டாமொருத்திக்கு இது கேட்டதும் பெரும் ஆத்திரம் மடக்க விரும்புகிறாள். 'சூரியனை ஆடையாக அணிந்தால் உடல் வெம்பிப்போம்' என்று ஒரு மடக்கு மடக்கினாள்.

ஆதவனைத் தூசாய் அணிந்தனள் என்றாமாகில்
மாது அலர்பூமேனி நலம் வாடாதோ அம்மானை

இதனைச் செவியுற்ற மூன்றாம் பெண், இரண்டாம் பெண்ணினை விளித்து, 'நீயறியாது பேசுகின்றாய்; உண்மை உனக்குத் தெரிகின்றிலது. அந்தத் தேவதாயின் உடலோ அருளாகிய குளிர்நீர் நிரம்பிய தடாகம் ஆகும். அவ்வாறனைய குளிர்நீர் நிரம்பிய தடாகத்தில் மூழ்கிக் கிடக்கும் சூரியனுக்கு வெப்பமேது? அனலேது? சூடேது?'

மாது அருள்நீர் மூழ்கு இரவி வாய்குளிரும
அமமானை

என்று இந்த வாதத்தை இவ்வாறு முடித்து வைத்ததும், முதலாம் பெண், மேலும் ஒரு சங்கதியை எடுத்துரைக்கலானாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எங்கள் திருக்காவலூர் மாதா இருக்கின்றாளே அவள் முறை வேண்டினார்க்கும், குறை வேண்டினார்க்கும் வரமளித்துக் காப்பவள். இவள் விண்மீன்களையே முடியில் அணிந்திருக்கின்றாள். முந்திய விந்தையோடு இதுவும் பெருவிந்தையாக அமைந்து கிடக்கின்றது' என்றனள்.

வாய்குளிர் பூங்காவல் நல்லூரர் வாழ வரம்பெய்
இறைவி
மீகுளிர்வாய் மீன்முடியை வேய்ந்தணிந்தாள்
அம்மானை

என்று பாடலாயினாள்.

இது கேட்ட இரண்டாம் பெண்ணுக்கு மேலும் பொங்கியது ஆத்திரம். 'அது எப்படி? சந்திரன் சூரியன் நட்சத்திரம் இவையெல்லாம் ஒன்று கூடி ஓரிடத்திலிருக்க முடியுமா? சூரிய ஒளியினால் சந்திரனும், நட்சத்திரங்களும் ஒளி குன்றிப் பிரகாசிக்க முடியாது ஏங்கி நிற்பன அன்றோ? அவ்வாறாயின் விண்மீன்களை முடியாக அணிந்திருப்பதில் நன்மை ஒன்றுமில்லையே' என்று பெரும்போடு ஒன்று போட்டாள்.

மீகுளிர்வாய் மீன்முடியை வேய்ந்தணிந்தாள்
ஆமாகில்
தூய்குளிர்வாய் மீன்கதிர்முன் தோன்றுமோ
அம்மானை

என்ற கேள்வியைச் செவியுற்ற மூன்றாமொருத்தி சமாதானம் உரைக்கின்றாள்.

அப்படியொன்றுமில்லை; அருள் நிறைந்த அவள் திருமேனியைத் தீண்டியவர் எவராயினுஞ் சரி அவர்களுக்கு உயர்வு தாழ்வு என்ற வேற்றுமை கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்குளிர்வாய்ச் சார்ந்தார்க்குத் தாழ்வில்லை
அம்மானை

என்று தங்கள் வாக்குவாத அம்மானையை முடித்து வைத்தனர்.

இவ்வாறு வீரமாமுனிவர் திருக்காவலூர் அடைக்கலமாதாவின் தோற்ற நலன்களை அம்மானை என்னும் உறுப்பு வழியாகப் புலப்படுத்திய அருமையைப் போற்றுமுகத்தான் அப்பாடலை முழுமனே படிப்போமாக!

தீர்த்த திருக்காவல் நல்லூர்த் தேவணங்கு
தாட்கமலம்
நீர்த்த திருத்திங்கண்மேல் நின்றன காண்
அம்மானை
நீர்த்த திருத்திங்கண்மேல் நின்றன
என்றாமாகில்
ஆர்த்த திருவண்டுவப்ப ஆங்கலரா அம்மானை
போர்த்ததிருச்சோதி இன்பப் போதலரும்
அம்மானை
போதலரும் தண்சினைக்காப் பூங்காவலூர்
அரசி
ஆதவனைத் தூசாய் அணிந்தனள்காண்
அம்மானை
ஆதவனைத் தூசாய் அணிந்தனன் என்றாமாகில்
மாதவர் பூமேனி நலம் வாடாதோ அம்மானை
மாதருள் நீர்மூழ்கி இரவி வாய் குளிரும்
அம்மானை
வாய்குளிர் பூங்காவல் நல்லூர் வாழ வரம்பெய்
யிறைவி
மீகுளிர்லாய் மீன்முடியை வேய்ந்தணிந்தாள்
அம்மானை
மீகுளிர்வாய் மீன்முடியை வேய்ந்தணிந்தாள்
ஆமாகில்
தூய்குளிர்வாய் மீள்கதிர் முன்தோன்றுமோ
அம்மானை
தாய்குளிர்வாய்ச் சார்ந்தார்க்குத் தாழ்வில்லை
அம்மானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாடு போற்றும் திருக்குறளை இலத்தின் மொழியினில் செய்யுள் வடிவில் மொழிபெயர்த்துள்ளார். பிராஞ்சு, போர்த்துகீசம், இசுப்பானியம், கிரேக்கம், எபிரேயம், இலத்தின் பாரசீகம், இந்துத்தானி, தெலுங்கு, தமிழ் முதலாம் பலமொழிகளைக் கற்றுத் தேறிப் பன்மொழிப் புலவராய் விளங்கினார்.

அந்நிய நாட்டினராயிருந்தும், தமிழன்னைக்குச் செய்த சேவையின் காரணமாக இவரைத் தமிழ் மக்கள் பெரிதும் போற்றுவர். இவரின் சமயங் கருதி வெறுத்தாரல்லர். சுத்தானந்த பாரதியாரின் பாடல் இதனைத் தெளிவுபடுத்துகின்றது.

வீரமாமுனிவர் தைரியநாதர் விரிதமிழ்க்கலை
மணங்கமழும்
ஆரமாமுனிவர் அகத்தியர்போலே அருளினார்
அரியநன்னூல்கள்
சாரமாந்தேம் பாவணியினைத் தொடினுந்
தமிழ்மணங்கமழுமென் கரமே
ஈரமாநெஞ்சில் இடம்பெற நட்டால் இன்பமாய்
மலருமென்வாழ்வே

முனிவர் அவர்கள் தேம்பாவணியைப் பாடுவதன் முன்னர் தமிழ்க்கலை நலமெலாம் கண்டுணர்ந்து கல்லாத நூல் ஒன்றுமிலை யெனும்படி எல்லாத் தமிழ் நூல்களையுங் கற்றார். திருக்குறட் கருத்துக்களைப் புத்தியிலிருத்தி, சிந்தாமணியைச் சதா சிந்தித்து, மணிமேகலையைப் போர்த்து, கம்பனை அங்கையிற் பற்றி, சிலப்பதிகாரத்தை வதனதிலகமாக வைத்து, தேவார திருவாசகங்களை மலராகச் சூடி, பண்டைத் தமிழ்ப் புலமை சான்ற சங்கப் புலவர் போல் தமிழ்ப்பண்பும் பயனும் ஒருங்கமைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப் பங்கமில் தேம்பாவணியினை நயம்படயாத்தனர் வீரமாமுனிவர்.

தேம்பாத-வாடாத-கூம்பாத மலர்மாலை எனும் பொருள் பயக்கும் 'தேம்பாவணி' எனும் சொற் றொடர்ப் பெயரை நாட்டி, அவதரித்த நாதனைக் கைத்தாதையாக வளர்த்த சூசையெனும் வளனைத் தன்னேரில்லாத் தலைவனாகக் கொண்ட தொடர் நிலைச் செய்யுட் காவியத்தை 1726இல் வீரமா முனிவர் யாத்தனர்.

இக்காப்பியம் பெருங்காப்பிய இலக்கணம் ஒருங் கமையப் பெற்றது; அருகிய இலக்கண முறைகள் அமைந்தது. பெருகிய கற்பனை பொருந்தியது; சொல்நயம் பொருள்நயம் செறிந்தது. இமிழ்கடல் சூழ் தமிழ்நாடு மெச்சும் திருத்தக்கதேவர், கம்பர், சேக்கிழார் போன்ற நல்லிசைப் புலவர்களின் அரும் பெருங் கருத்துக்களெனும் திருமணிகள் பொதியப் பெற்ற கருவூலமாகத் திகழ்வது. சத்தியவேதத்தின் உத்தம சரித்திரங்களும், சன்மார்க்க சீலங்களும், நியாயப் பிரமாணங்களும் விளங்க மூன்று காண்டம் முப்பத்தாறு படலங்களாக வகுக்கப் பெற்று மூவா யிரத்து அறுநூற்றுப் பதினைந்து செய்யுள்களைக் கொண்டது. பாரகாவியஞ் செய்த கல்வியிற் பெரியோன் கம்பன் தனது 12000 செய்யுள்களில் 87 சந்தபேதங்களை வைத்துப் பாடினர். வீரமா முனிவரோ 90 சந்தபேதங்களை அமைத்துக் காவியம் இயற்றியுள்ளார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங் கேற்றப் பெற்ற காலத்தில் அவைக்கண் இருந்த அருந் தமிழ் வாணர் இதன் சொற்பொருள் நயத்தைப் பெரிதும் பாராட்டினர். பாராட்டினதுமின்றி வீரமா முனிவரெனப் பட்டமும் வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஆர்வம் படைத்த யாவரும் இதனைப் படித்தின்புற்றிருக்கின்றனர். தமிழ் வரலாறெழுதிய பூரணலிங்கம் பிள்ளை என்பார். "சீவக சிந்தாமணிக்கு இணையானதோர் காவியம் இது" என்று எழுதியுள்ளார்.

"தமிழ் இலக்கியங்களில், தலைசிறந்த காவியங்களில், நாலினைத் தேர்ந்தால் தேம்பாவணியும் அவற்றுள் ஒன்றாகும்" என்கிறார் கால்டுவெல் ஐயர்.

"நான் தேம்பாவணியைப் பாடஞ் சொல்லுதலும், கிறிஸ்தவர் முதலிய பிற மத மாணாக்கர் என்பாற் பாடங்கேட்டலும் கூடாத செயல்களென்று சிலர் சொல்லி வருவதாகத் தெரிகின்றது. தமிழ்நூல் யாதாயிருப்பினும் அதிலுள்ள சொற் பொருள் நயங்களை உணர்தல் பிழை ஆகாதே. கிறிஸ்தவ மதத்தைப் பிரசாரஞ் செய்யவேண்டுமென்பது என் கருத்தன்று. தமிழ்நூல் என்னும் முறையில் யாதும் விலக்கப்படுவது அன்று' என்று தம் கருத்தைப் புலப்படுத்தினார். குறை கூறியவர்கள் இவர்களுடைய உண்மைக் கருத்தை அறிந்து அடங்கி விட்டனர்" என்று மகா மகோபாத்தியாயர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் இயற்றிய ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளைவர்கள் சரித்திரம் முதற்பாகம் 149ஆம் பக்கத்தில் எழுதியுள்ளார். பிள்ளையவர்களிடம் கலை பயின்ற சவராயலு நாயக்கர்,

விளங்குறுவெண் புகழ்வனைந்த
மீனாட்சி சுந்தரப்பேர்க்
களங்கமில்தே சிகனென்பாற்
கருணைநனி புரிந்ததனாற்

றுளங்குறுதேம் பாவணிக்குச்
சொலத்துணிந்தே னுரைவிரித்து
வளங்கெழுமவ் வருளிலையேல்
வகுத்தலரி தரிதரிதே

என்று தங்குருமூர்த்தியைப் போற்றுகின்றார்'

கம்பராமாயணத்தைத் துருவித் துருவி ஆராய்ந்து, அதன் கவி நயத்தை இரசித்து, அனுபவித்து வரும் சென்னை பட்டணம் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் சேதுப்பிள்ளையவர்கள் வீரமாமுனிவர் சரித்திரத்தையும் எழுதிப் பதிப்பித்தது மல்லாமல், அந்நூல்களின் நயங்களையும் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

''சிறந்த காவியமாகத் தெவிட்டாத மதுரமாய்த் தெளிந்த கருத்தாய்ச் செப்பரும் பொருளாய்ச் சகல அலங்காரத்தோடு வீரமாமுனிவர் தேம்பாவணியைப் பாடினார்'' என்கின்றார்கள் சேதுப்பிள்ளையவர்கள். தேம்பாவணியின் பொருள் செவ்வனம் விளங்குதற் பொருட்டு வீரமாமுனிவரே அதற்குப் பதவுரையும், பொழிப்புரையும் உவந்து செய்துள்ளார். இறையன்பு, இயற்கை எழில், ஈடும் எடுப்புமில்லா உயரிய குறிக்கோள், சொற்சுவை, இன்னோசை, பொருள் ஆழம்—இவையெல்லாம் ஒருங்கு திரண்டு இக்காப்பியத்தில் விளங்கக் காரணமென்ன? முன்னொரு காலத்திற் புலவர் ஒருவர் கம்பரை நோக்கி, ''அன்னவர் இராமாயணம் அவ்வளவாக இரசிக்கக் காரணமென்ன'' எனக் கேட்டபோது கம்பர் மறுமொழியாக, ''ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் அகப்பை அள்ளிக் கொண்டேன். அதுவே காரணம்'' என்றாராம். கம்பராமாயணம் இவ்வளவாக இரசித்துந் தெவிட்டாமலிருக்கின்றதே என்று வீரமாமுனிவரைக் கேட்டபோது, அவர் கம்பரின் இரசத்தில் ஓர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகப்பையைத் தான் எடுத்துவிட்டதாகக் கூறினாராம். கம்பரின் காவிய அமைப்பைப் பின்பற்றிச் சிந்தாமணி, சிலப்பதிகாரப், திருக்குறள், பெரிய புராணம் என்னுந் தமிழ் நூல்களின் சுவையொரு சிறிதும் குறையாவகையிற் தங்காப்பியத்தைச் செய்து முடித்தமையே அதற்குப் பெருமையளிக்கின்றது.

இனி, இந்நூற்கு முன்னூல் யாது என ஆராயுமிடத்து, ஆகிர்தமரியாள் என்னும் பக்தியுள்ள கன்னிகை எழுதி வைத்த சூசையப்பர் சரித்திரம் என்பது புலனாகும். வீரமாமுனிவரே தமது நூலிற் காட்டியுள்ளார். ஆகிர்தவென்னும் பட்டணத்தின் ஒப்பில்லாத புகழ் வரங்களினால் உயர்ந்திருந்த ஒரு கன்னிகையானவள் கன்னிமரியம்மாளின் சீர்பாதங்களைத் தடவித் தபசுபண்ணி வருங்காலத்தில், சூரியனை ஆடையாகவுடுத்த திருமேனியையும், சந்திரனைப் பாதகுறடாக மிதித்தெழுந்த இரண்டு கமல பாதங்களையும், நட்சத்திரங்களை முடியாகத் தரித்த திருச்சென்னியையும் உடையவளாகிய பரம தேவதாயானவள், பூங்கொடியை யொத்த அக்கன்னிகையின் பெருமையைக்காட்டத் தனது மரியாள் எனும் திருநாமத்தையுஞ் சூட்டி, அளவில்லாத வரங்களையும் கொடுத்துத் தாயும் மகளும்போல அந்நியோந்நியமாய்க் காட்சியளித்து வருநாளிலே, தாயானவள் தன் பத்தாவாகிய சூசை மாமுனிவருடைய பழைமையாகிய திருக்கதைகளை மகளுக்குச் சொல்லியருள, மகளுந் தாய்சொற்பிரகாரம் யாவரும் அறிய சூசையப்பர் கதையை எழுதி வைத்தனள். அதே கதையை வீரமாமுனிவரும் தமிழ்ச் செய்யுளில் யாத்து வைத்தனர்

தேம்பாவணி யெனப் பெயர்சூடிய காரணம் என்னையோவெனிற் கூறுதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியந்தமில்லாத சருவேசுரன் நிலவுலகத்தில் மனுமகனாக அவதரித்து, உலகத்தை இரட்சிக்கத் திருத்தாயாராகத் தெரிந்து கொண்ட கன்னிமரியம்மாளுக்கு, ஒரு திருத்துணைவனை நியமனஞ் செய்யும்படி சேருசலைப் பட்டணத்துத் தேவாலயக் குருப்பிரசாதியாய் விளங்கிய சிமியோனுக்குக் காட்சி கொடுக்க அவர், ''தாவிதரசரின் மரபிற் பிறந்த அரசர்கள் ஒவ்வொருவரும், தங்கள் தங்கள் கரங்களில் ஒவ்வொரு கோலைத் தாங்கித் தேவாலயத்தில் வந்து எம்பெருமானை வணங்கித் துதிக்கவேண்டும்; அப்பொழுது அப்பெருமானது திருவருளால் யாருடைய கோல் மலர்ந்து தேனைச் சொரிந்து பரிமளிக்குமோ, அவருக்குக் கன்னிமரியம்மாளைஞ் திருமணஞ் செய்வோம்'' என்று பறைசாற்ற, கட்டளைக்கிசைந்து, தாவீதரசனின் மரபிற் பிறந்த அரசர் யாவரும் கன்னிமரியம்மாளின் தெய்வீக சுந்தரக்கரத்தை விரும்பி, தேனை நாடும் வண்டினம் போல தேவாலயத்தில் நிறைந்தனர். இளமைப் பருவத்திலேயே கலியாணத்தை வெறுத்துத் துறவறம் பூண்டவராதலினால் குருப்பிரசாதிகளின் கட்டளைப் பிரகாரம் கோலேந்தி நின்றாராயினுந் தன் கோல் மலர்தலைச் செய்தலாகாதெனச் சூசையப்பர் பிரார்த்தித்து நின்றார் அந்த நேரத்தில் திருவுளச் சம்மதப்படி அவருடைய கோல் தளிர்த்துப் பூத்தலர்ந்து, மெய்ஞ் ஞானத் தேனைச் சொரிந்து, தெய்வ மணங்கமழ்ந்து மூவுலகும் பரிமளித்தது. இதனால், தேவதாயாரைச் சூசையப்பர் திருமணம் முடிக்கலாயினர். சருவேசுரனின் திருவருட்பிரகாரம் இல்லறம் - துறவறமாகிய ஈரறம் பொருந்தத் தன் கோலில் மலர்ந்த பூங்கொடி நிழலிற் கன்னித்தாயையும், அவதரித்த திருக்குமாரனையுங் காத்தருளிய தன்மையைக் குறித்து வானவர் இம்மாமுனிவரின் கொடியிற் பூத்த 3615 மலர்களைக் கொண்டு, 36 மாலைகள் தொடுத்து அவர்க்குச் சூட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டினர் என்பதற்கு அடையாளமாக, வீரமாமுனிவரும் 3615 திருவிருத்தங்களைக் கொண்டு, 36 படலங்களாகக் கொண்ட ''தேம்பாவணி''யெனும் வாடா மாலையைச் சேசுமரி சூசையெனும் திருக்குடும்பத்துக்கு அர்ப்பணஞ் செய்துள்ளார்.

இனி, தேம்பாவணியின் சிறப்பினை எடுத்தியம்புவாம். அதன் கண் எடுத்தாளப்பட்ட சொன்னயம், பொருணயம், அணிநயம் முதலியவற்றை நுணுகி ஆராய்வாம்.

இராயன் கட்டளைப்படி பெத்திலேம் நகருக்குச் சூசையப்பரும் தேவமாதாவும் கால்நடையாக நடந்து செல்கிறார்கள். வழியிடையே பல காட்சிகள். இவ்வகைக் காட்சிகள் நடுவே இவர்களிருவரும்,

கொம்பினார் குயில் கூவவு மஞ்ஞைகள்
பம்பியாடவும் பைஞ்சிறைத் தேனொடு
தும்பிபாடவும் தூயன நாணவு
நம்பிமாதொடு நன்னெறி போயினான்

என்று வெகு அழகாக எடுத்துரைக்கின்றார். இஃது ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி. இதற்கு எதிரிணையான - துக்ககரமான காட்சியைக் கவி சித்திரிக்குமாற்றலைப் பார்ப்போமாக.

எரோதன் பகைக்கஞ்சி, சேசு மரி சூசை ஆகிய மூவரும் தங்கள் சுய நாடாகிய யூதேயா நாட்டை விட்டு, எசித்து நாடு நோக்கிப் போகின்றார்கள். இவர்கள் நாடுவிட்டுப் போவதை எவரும் விரும்பவில்லை. துக்கசாகரத்தில் யாவரும் மூழ்கின்றார்கள். குளிர் மிகு கூதிர்காலம்; காலை நிகழ்ச்சி வான் முதலிய இயற்கைப் பொருள்கள்கூட இவர்கள் போவதையிட்டுத் துக்கிக்கின்றன. இதனை முனிவர் சித்திரிக்கின்றார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளியழக் குயில் கேட்டழத் தேனுணா
தளியழச் சிறை நைந்தழ ஆவென
வளியழத் துயர் மல்கி வனத்தெலா
வுளியழத் தகவோர் அழ வேகினார்

இயற்கைக் காட்சி மூலம் இன்பத்தையும் துன்பத்தையும் சித்திரித்துக் காட்டிய மறைமொழிவாயான் மானிடப்பிறவிக்கு நலனில்லா வழியாற் சென்ற இரு மாதரை வருணிக்கும் ஆற்றலைப் பார்ப்போமாக. ஒருத்தி இளம்வயதினள். பரத்தை வழியிற் செல்பவள். மற்றொருத்தி படுகிழவி. இவர்களிருவரின் போக்கும் வெறுப்புக்குரியவை. காம வெறிகொண்ட நாரியின் பெயர் காந்தரி. இவளை முனிவர்,

தூமஞ் சூடிய தூய்துகில் ஏந்துபு
தாமஞ் சூடிய தாரொடு பூணமலி
காமஞ் சூடிய காந்தரி யென்றொரு
நாமஞ் சூடிய நாரியைக் கண்டுளார்

என்று அவளின் நடை உடை பாவனை இவற்றையெல்லாம் அழகுற ஒரே பார்வையிற் சித்திரித்துக் காட்டினார்.

மற்றைய முழுவயதுப் பெண்ணின் பெயர் சுரமி. இவள் தற்கொலை புரிந்துகொண்டவள். இவள் தற்கொலையை, 'பசியாற் காயும் நாய் தன்னைக் கடித்துக் கொள்வது போல்' என்று உவமித்துள்ளார். இப்படிப்பட்டவள் தன்மையை,

கூனுருக் கோலில் ஊன்றிக் குலுங்கிய சென்னி
ஆட்டி
ஊனுருக் கழிந்த நீள்தோல் உடுத்த என்பு
ஒழுங்கில்தோன்றி
மீனுருக் கழிந்த கண்புண் மெலிமுகச்
சுரமியென்பாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று முதுமைப் பருவத்தின் அத்தனை குறிப்புகளுந் தோன்ற வருணித்துள்ளார்.

இறுதியாக, சிலப்பதிகாரத்துக் கானல்வரிப் பாட்டை ஒப்பு நோக்கத்தக்க முறையில் ஒரு சில பாடல்களை வீரமாமுனிவர் தமது காவியத்தில் அழகுறப் புனைந்துள்ளார். அவற்றுள் ஒன்றைத் தருதும்.

பாற்கடலென் னுள்ளப் பதும மலரரும்ப
நூற்கடலே யீங்குதித்தாய் நும்மலர்க்கண் முத்தரும்ப
நும்மலர்க்கண் முத்தரும்ப நோய்செய் வினை செய்தேம்
எம்மலர்க்கண் முத்தரும்ப இன்று வினைதீர்த்தாய்.

இவ்வாறு தமிழ்மக்கள் பெரிதுவப்ப அரும்பெருங் காப்பியம் ஒன்றினை நமக்குத் தந்த வீரமா முனிவரை,

மறைமொழி வாயினன் மலிதவத்திறைவன்
நிறைமொழிக் குரவன் நிகரில்கேள்வியன்

என்று போற்றுவோமாக. O

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரட்சணிய யாத்திரிகம்

கே. ஈ. மதியாபரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரட்சணிய யாத்திரிகத்தின் ஆசிரியரான கிருஷ்ண பிள்ளையின் வாழ்க்கை வரலாற்றை, மதியாபரணம் அவர்கள் ஆரம்பத்தில் விரிவாகக் கூறுகின்றார். 'வயிற்றுப் பிழைப்பிற்காகவே பலர் கிறிஸ்தவ மதத்தை மேற்கொண்டனர்' எனச் சிலர் சொல்லி வரும் பழியைத் துடைத்து, வைஷ்ணவத்தில் வைராக்கியம் பெற்றவரான கிருஷ்ணபிள்ளை, எவ்வாறு இரட்சிப்பை நாடியே, கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றார் என்பதை மிகவும் தெளிவாகவும், விரிவாகவும் கூறியுள்ளார். 'அவர்கள் பட்சத்தோடும் அன்போடும் போதிக்கிற அருமையான வார்த்தை'கள் எனக் கிருஷ்ணபிள்ளை எழுதிய உரைப் பகுதியைக் காட்டி இதனை மெய்ப்பிக்கின்றார். ஆங்கில நூலொன்றை முதநூலாகக் கொண்டு எழுந்த முதலாவது பெருங்காப்பியம் 'இரட்சணிய யாத்திரிகம்' ஆகும். இருப்பினும், கம்பராமாயணத்தினைபோல், எவ்வாறு நூலாசிரியர் கம்பனையும் விஞ்சுகிறார் என்பதைக் காட்டியுள்ளார். இறுதிப் பகுதி, மதியாபரணம் அவர்களுக்குச் சைவ நூல்களிலுள்ள ஈடுபாட்டைப் புலப்படுத்துவதுடன், நூல்களை ஒப்பு நோக்கி வாசிக்கும் ஆற்றலையுங் காட்டி நிற்கின்றது.

-இரசிகமணி கனக. செந்திநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரிலக்கிய நூலை ஆராயப் புகுமுன், அதனை ஆக்கியோரது வாழ்க்கை வரலாற்றையும், அவர் வாழ்ந்த இடங்காலம் முதலிய வற்றையும் ஆராய்தல் இன்றியமையாததாகும். மேற் குறித்த நூலை எழுதியோர் மகா வித்துவான் கிருஷ்ணபிள்ளை ஆவர். இவர் தென்னிந்தியாவில் உள்ள திருநெல்வேலியில், 1827-ம் ஆண்டில், வைஷ்ணவ சமயத்தில் வைராக்கியமுள்ளவரும் சிறந்த தமிழ்ப் புலவருமான சங்கர நாராயண பிள்ளை என்பவருடைய மூத்த மகனாகப் பிறந்தார். இவருடைய தாயாரும் இராமாயணச் செய்யுள்களை இசையுடன் பாடவும், அவற்றை விளக்கவுங் கூடிய அளவுக்குக் கற்றிருந்தனர். இவ்வாறான பெற்றார்க் குப் பிள்ளையாகப் பிறந்தமையின், சிறு வயதில் அவர் தம் வீட்டிற்பெற்ற தமிழறிவையுஞ் சமய அறி வையும் ஒழுக்கத்தையுங் குறித்துக் கூற வேண்டிய தில்லை.

மூத்த ஆண் குழந்தையானமையின், அவனுக்குக் கிருஷ்ணனென்று பெயரிட்டுத் தந்தையார் தன யனைப் பெரிதுமன்புடனுங் கரிசனையுடனும் வளர்த்து வந்ததோடு, அவன் தன் வயதுக்குத் தகப் பெறவேண்டிய தமிழ்க் கல்வியையும் சமயக் கல்வியை யுந் தாமே அவன் உட்கொள்ளத் தக்க அளவுக்கு ஊட்டி வந்தார். அவனுங் கூரிய புத்தியுந் தமிழ்ப் பற்றும் பெரிதும் உடைய காரணத்தால், காய்ந்த நிலத்தில் ஊற்றிய நீரை அது எவ்வாறு உறிஞ்சுமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே தந்தையார் தனக்கு ஊட்டிய கல்வியைக் கிருஷ்ணன் ஆவலுடன் உட்கொண்டான்.

வைஷ்ணவ சமய நூல்களைச் சிறு வயதிலேயே பாராயணம் பண்ணி வந்தான் பதினாலு வயதா யிருக்கும்போதே கம்பராமாயணக் கவிகளைப் பாரா யணம் பண்ணி அவற்றிற்குப் பொருள் சொல்லவுங் கற்று விட்டான். தம்முடைய மகன் ஆழமான இலக்கண அறிவு பெறுவதற்காகச் சிறந்த இலக்கண அறிவு வாய்ந்த ஒரு புலவரை அவனுக்கு ஆசிரியராக ஒழுங்கு பண்ணினார். கிருஷ்ணனுக்கு ஆங்கிலக் கல்வி கற்பிக்க ஆசை இருந்தும், வசதி கிடைக்க வில்லை. வடமொழி நன்கு கற்பிக்கப்பட்டது

கிருஷ்ணபிள்ளை பதினைந்தாவது வயதாயிருக் கும்போதே தந்தையார் சிறந்ததொரு குடும்பத்தில் அவருக்கு மணஞ்செய்து வைத்தனர் அடுத்த ஆண் டிலே தந்தையாரிறக்கத் தமக்கு முதுசொமாய்க் கிடைத்த பொருளில் ஒரு பாகத்தைப் பயன்படுத்தி, ஒரு சிறந்த வித்துவானை அடுத்து யாப்பு முதலிய இலக்கண நூலைக் கற்றதோடு, பிள்ளையவர்கள் தாமாகவும் இலக்கிய இலக்கண நூல்களைக் கற்றுத் தேறினர்.

தம்முடைய தகப்பனார் இறந்தபின் கிருஷ்ண பிள்ளை வைஷ்ணவ சமயத்திற் பெரிதும் வைராக்கிய முடையவர் ஆனார். அக்காலத்தில் திருநெல்வேலி நாட்டிற் கிறிஸ்து மார்க்கம் மிகுதியும் பரவுவதைக் கண்ட பிள்ளையவர்கள், சில நண்பருடனுஞ் சுற்றத் தாருடனுஞ் சேர்ந்து நல்லூரென்னுங் கிராமத்தில் இருந்த கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினர். அக்கூட் டத்தார் யாவரும் அக்குற்றத்திற்காகச் சிறை செய்யப்பட, அவர் மட்டுந் தப்பினர்.

சில ஆண்டுகள் சென்றபின், சாயர்புர மிஷன் கலாசாலையிற் காலியாயிருந்த ஒரு தமிழ்ப்பண்டிதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவிக்கு அபேட்சித்த மூவர் பரீட்சிக்கப்பட்ட போது, பிள்ளையவர்களே தெரிந்தெடுக்கப்பட்டனர். இதற்கு முன் 'அருள் அவதாரம்' என்னுந் தலைப்பிட்ட துண்டுப்பிரதி ஒன்றில் வாசித்ததைத் தவிரக் கிறிஸ்து மதம் பற்றி வேறொன்றும் அவர் அறியவில்லை. சாயர்புரம் கல்விச் சாலையில் ஆசிரிரான பின், தலைவரான மிஷனரி கிறிஸ்து சமயம் பற்றிக் கூறியவற்றை எல்லாக் கேட்டறிந்தனர். 'அவர்கள் பட்சத்தோடும் அன்போடும் போதிக்கிற அருமையான வார்த்தைகள் ஆரம்பத்தில் எனக்கு வெறுப்பாயுங் கசப்பாயுமிருந்தாலும் நாளடைவில் அவர்கள் காட்டிய நற்குண நற்செய்கைகள் என் மனதில் ஊன்றி அவர்களைத் தடுத்துப் பேசாமல் இருக்க என்னை ஏவின' என்று தான் கேட்டவற்றைக் குறித்துக் கிருஷ்ணபிள்ளை தாமே கூறியுள்ளனர்.

இதன்பின் விவிலிய வேதமொன்றைப் பிள்ளையவர்கள் வாங்கி வாசிக்கத் தொடங்கிக் கிறிஸ்து சமய உண்மைகளை ஆராய்ந்தனர். அவ்வாறு செய்யச் செய்ய அச்சமயத்திலே அவருக்குக் கவர்ச்சியுண்டானது. அதை உணர்ந்த பிள்ளையவர்கள் கிறிஸ்தவர்களுடைய சகவாசத்தையுஞ் சம்பாஷணையையும் வெறுத்து, சமய ஆராய்ச்சி செய்வதைத் தவிர்த்து, மனச்சாட்சியின் தூண்டுதலையுந் தடுத்தனர். இக்காலத்திலே திருநெல்வேலியிலிருந்த கல்வி, அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்தோராகிய இந்துக்கள் பலர் கிறிஸ்தவர்களாயினர். அவர்களுள் தனக்கோடி ராஜு, மனக்காவலப் பெருமாள்பிள்ளை ஆகிய இருவரும் வெகு கால ஆராய்ச்சியின் பலனாகக் கிறிஸ்து மதத்தைத் தழுவி இயேசு பெருமானே தங்களைப் பாவத்தினின்றும் விடுதலை செய்ய வல்லவரென்பதை உணர்ந்தவர்களாய் அவரையே தம் சொந்த இரட்சக

ராக ஏற்றுக் கொண்டனர். இவ்விருவருள் தனக் கோடி ராஜு என்பவர் பிள்ளையவர்களுடன் கிறிஸ்துவைப் பற்றிப் பன்முறை பேசியதோடு ஆங்கிலத்தில் பன்னியன் (Banyan) எழுதிய 'பில் கிறிம்ஸ் பிறொகிறெஸ்' (Pilgrim's Progress) என்ற நூலின் மொழி பெயர்ப்பாகிய 'பரதேசியின் மோட்ச பிரயாணம்' என்னும் நூலையும் வேறு மூன்று நூல்களையுங் கொடுத்து அவற்றைக் கற்று நுட்பமாக ஆராயுமாறு கூறினர். இவற்றுள் 'மோட்ச பிரயாணம்' இவருள்ளத்தில் தைத்து, உணர்ச்சியை உண்டாக்கியது. இதன் பின் நண்பன் ஏவியவாறு, வித்துவானவர்கள் சுவிசேஷங்களை ஒழுங்காக வாசிக்கவும் தம்மிருதயக் கண்கள் திறபடும்படி இறைவனிடம் மன்றாடவுந் தொடங்கினர். எனினும், உள்ளத்திற் பல ஐயங்கள் தோன்றின. ஒரு நாளிரவு பிள்ளையவர்கள் தம் நண்பரிடஞ் சென்று ஐயங்கள் யாவற்றையுங் கூறி, இரவு பன்னிரண்டு மணி மட்டுங் கலந்து பேசித் தர்க்கித்ததன் பலனாக, அவை யாவும் அறவே நீங்கின. அந்த நேரமே கிறிஸ்துவைத் தம் மிரட்சகராக ஏற்றுக்கொண்டனர். அந்த நாளிரவில் அவரெழுதி வைத்த செய்யுள் வருமாறு:

கருணையங் கடலே அந்த காரமாம் வினையைப்
போக்கும்
அருணனே அடியேற் காக ஆருயிர் விடுத்த தேவே
பொருணயந் தெரியாத்தீய புல்லிய னெனையாட்
கொள்ளத்
தருணமென் னிதய நிற்கே சமர்ப்பணந் தரும்
மூர்த்தி.

இச்செய்யுள் தான் இயேசு பெருமானை வித்துவானவர்கள் துதித்துப் பாடிய முதற் செய்யுளாகும். மேற்குறித்த நிகழ்ச்சி 1858-ம் ஆண்டு மார்ச் மாதம் 27ந் தேதி நிகழ்ந்தது. இதன்பின் 1855-ம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் மாதம் 18ந் தேதி ஞான தீட்சை பெற்றனர். அக்காலத்தில் அவர் எழுதிய இன்னொரு செய்யுள் வருமாறு :

பிறவியிற் பிடிவாத கொடியனைவஷ் ணவனாய்ப்
பிறந்து முப்பது வற்சவம்
பிரபஞ்ச மயல்கொண்டு மூடாந்த காரப் பிழம்பில்
அடைபட்டுழன்று
மறவினைக் காளாகி நெறிநிலாத் தூர்த்தமன
வாஞ்சைக் கிடங் கொடுத்து
மருளுற்று வறிதுநாள் செலவிட்ட, நீசனெனை
மலரடிக் காட் படுத்திக்
குறைவிலாப் பேரருளளித்தின்றுகாறும்
குறிக்கொண்டு காத்தியெனினும்
கொச்சைமதி யேற்கின்னும் நன்றியறியாக்
கெட்ட குணதோஷமொழிய விலையே
இறைவலப் புறமிருந் தடியருக்காப் பரிந்தென்றுமன்
றாடு முகிலே
ஏசு நாயக சருவ லோக நாயக கிறிஸ்து யேசு
நாயக ஸ்வாமியே.

இரட்சிப்பு என்பது ஒரு மதம்விட்டு, இன்னொரு மதம் புகுவதன்று என்பதே பிள்ளையவர்களது கொள்கையாகும். அஃதே உண்மையுமாம். பாவத்துக்கு அடிமையாயிருக்கும் நிலையிலிருந்து விடுதலை பெறுவதே இரட்சிப்பாகும் இக்கொள்கை மேற்குறித்த இரு செய்யுள்களையும் உற்று நோக்கிக் கற்கும்போது நன்கு விளங்கும்.

இரட்சணிய யாத்திரிகம் என்னுஞ் சொற்றொடர் இரட்சணையின் (அல்லது இரட்சிப்பின்) யாத்திரையைப் பற்றியது எனப் பொருள்படும். ஆசிரியரே, நூலுக்குத் தாமெழுதும் முகவுரையில் அதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்குகின்றனர். ஆத்தும ஈடேற்றத்தை விரும்புவோர் அப்பேறு பெறுதற்குச் செய்யும் முயற்சிகளும், அவற்றைத் தடுப்பதற்கு வந்து ஏற்படுந் தடைகளும், அத்தடைகளை விலக்குதற்கு இறைவன் தம்மடியார் மூலங்காட்டும் வழிகள் முதலியவற்றையுங் கூறும் நூலே இது.

இவரது இரட்சிப்புக்குப் பெரிதும் வழிகாட்டிய நூல் 'மோட்ச பிரயாணம்' ஆகும். அது பன்னியன் எழுதிய Pilgrim's Progress என்ற நூலின் தமிழ் வசன மொழி பெயர்ப்பாகும். இந்நூல் அவரைப் பெரிதுங் கவர்ந்தமையால், அதனைத் தழுவி 'இரட்சணிய யாத்திரிகம்' என்ற 3800 செய்யுள்கள் கொண்ட இப்பெருங் காப்பியத்தை 1894-இல் வெளியிட்டனர்.

இந்நூலில் எது சிறந்த பாகம் என்று தேடிக் கற்றுப் பார்க்கும் ஒருவர்க்கு அது வெல்லப்பிள்ளையாரைப் போலவே இருக்கும். எங்கு திருப்பினும், எச்செய்யுளைப் படிப்பினும், அது வெல்லம்போல இன்சுவை பயக்கும். ஆசிரியர் வைஷ்ணவராயிருக்கும் போது, இருபது அல்லது இருபத்தைந்து ஆண்டுகளாகக் கம்பராமாயணம், நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் முதலிய வைஷ்ணவ நூல்களைச் சுவைத்துச் சுவைத்துப் பாராயணம் பண்ணியவரானமையின், இராமாயணம் போலிருக்குமோ என்றால், அது அதனினுஞ் சிறந்ததென்று ஒருவாறு கூறலாம். கம்பன் காப்பியத்திற் சில வருணனைகளைப் படிக்க அலுப்புண்டாய்விடும். சில பகுதிகளைக் கற்குங் கால், கல்லும் மண்ணுங் கலந்த சோற்போற் சுவைக்கும். இரட்சணிய யாத்திரிகத்தில் எப்பகுதியை எடுத்துக் கற்கினும், எச்செய்யுளைத் தேடிப்படிக்கினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்சுவை பயத்தலோடு நற்புத்தி புகட்டி இறைவன் பக்கமாகச் சிந்தையைச் செலுத்துவதாகும்.

இத்தொடர்பில், இந்நூலிலுள்ள சிறந்ததோர் இயல்பைக் காட்டுதல் பொருத்தமாகும். வித்துவான வர்கள், வைராக்கியமுள்ள வைஷ்ணவ குடும்பத்திற் பிறந்து அச்சமயத்துக்குரிய நூல்கள் யாவற்றையுங் கற்று அதன் உபதேசங்களை நன்கு அறிந்து சிறந்த வைஷ்ணவராக முப்பது ஆண்டுகள் வாழ்ந்து, பத்து ஆண்டுகளுக்கு மேற்படத் தஞ்சமயத்தில் வைராக்கி யங் கொண்டவராயிருந்த போதிலும், தமக்கு அச் சமயஞ் செய்யாததொன்றைக் கிறிஸ்து செய்வார் என்றே அவரைத் தம் மிரட்சகராக ஏற்றுக் கொண் டார் கிறிஸ்து அவர் ஆத்மாவுக்குப் பலவற்றைச் செய்தார். முதற்கண் தம்மிரட்சகரிடமிருந்து பெற்ற பேறு, பிறந்த நாட்டொடங்கி முப்பது ஆண்டு களாகத் தாம் சேர்த்துக்கொண்ட பாவச்சுமை நீக்கப் படுதலே. சுமை நீங்கு படலத்திலே தமது அநுப வத்தை உருக்கத்துடனும், தம்மிரட்சகரிற் கொண்ட பேரன்புடனும் கூறுவதைக் காய்தலுவத்தலின்றி, உணர்ச்சியுடன் கற்போர் உவப்பிலா இன்பம் பெறுவர்.

இது மட்டுமன்று. பாவம்-நீதி-மோட்சம்-நரகம் முதலியவற்றைப் பற்றிய வேதபோதனை, நீதியும் இரக்கமும் மாறுபாடின்றி எவ்வாறு இறைவனிற் பொருந்தியிருக்கின்றன என்ற உண்மை, அவரது திரு வருள் எவ்வாறு அவருடைய பிள்ளைகளின் வாழ்க் கையிற் றொழில் செய்கின்றது என்பதன் விளக்க மாகிய இவை யாவற்றையும், இவைபோன்ற வேறு பல கிறிஸ்தவ கொள்கைகளையும் யாத்திரிகனது வர லாற்றை ஆசிரியர் கூறிக்கொண்டு போகுங்கால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்ற ஏற்ற இடங்களில் வைத்துத் தெளிவாகவுந் திறமையாகவும் குறிப்பிடுகின்றனர்.

வாசகருக்குப் புத்தி புகட்டி இறைவன் பால் சிந்தையைச் செலுத்துவதில் இந்நூல் கந்த புராணத்தை நினைவூட்டுகின்றது. கச்சியப்பர் உவமைகள் கூறும்போதும் அவை நல்லறம் போதிக்கும் உவமைகளாகவே இருக்கும். கந்தபுராணத்துக்கும் இரட்சணிய யாத்திரிகத்துக்கும் இன்னோர் ஒற்றுமை உண்டு. குணங்களை மக்களாக உருவகித்துக் கூறுந் தன்மை வித்துவானவர்கள் நூலில் எவ்விடத்திலுங் காணலாம். கந்த புராணத்தில் இடையிடையே அவ்வாறு வருவதுண்டு. இவ்வாறான இலக்கிய நூலையே ஆங்கிலத்தில் 'Allegory' என்பர்.

ஜீவபுஷ்கரிணிப் படத்திலுள்ள,

வேங்கை சந்தனங் காரகில் தேக்கொடு மிடைந்த
கோங்கு சண்பக மாப்பலா வத்திகுங் குலிகம்
ஓங்கு மேழிலைம் பாலைகுங் குமம்புல வோமை
பூங்கு ருந்தசோ கந்தம ரத்தைபூங் கடம்பு
வன்னி பாதிரி யிலவங்கம் வன்மரை வகுளம்
புன்னை வாதுமை யிருப்பைவான் றொடும்டற் பூகம்
தென்னை யாமல கங்கடுத் தான்றிதிந் திருணி
பொன்னி ணர்ப்படு கொன்றையச் சுவத்தமான் புன்கு

என்னுஞ் செய்யுள்களைக் கற்கும்போது, சின்னத் தம்பிப் புலவர் பறாளை விநாயகர் பள்ளிற் கூறும் மீன்கள், எருதுகளின் பெயர்கள் அடுக்கி வருஞ் செய்யுள்கள் நினைவுக்கு வருகின்றன.

இந்நூல் இரட்சிப்பைத் தேடிப் பயணம் பண்ணும் ஒருவன் வரலாற்றைக் கூறுவதாயினும், காப்பிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணங்களமைய இராமாயணம், பாரதம் போல ஆசிரியர் எழுதி முடித்தது, அவரது கவித் திறமையை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. மேற்குறித்த காப் பியங்கள்போல இதனையும் வித்துவானவர்கள் ஆதி பருவம், குமார பருவம், நிதான பருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவமென ஐந்து பருவங்களாக வும், நாற்பத்தியேழு படலங்களாகவும் பிரித்திருக் கின்றனர். கம்பர் காண்டம் படலமெனவும்; வில்லி புத்தூரர் பருவஞ் சருக்கமெனவும் பிரிக்க, வித்து வானவர்களோ பருவம் படலம் எனப் பிரித்ததிலும் ஒரு சிறப்புண்டு.

'திருவாசகத்திலுருகார் ஒரு வாசகத்திலு முரு கார்' என்பது ஆன்றோர் கூற்று. யாத்திரிகத்தையும் ஊன்றி உணர்ச்சியுடன் படிப்போர் உள்ளம் உருகாது விடமுடியாது. மணிவாசகர் நூலிற்காணும் மூன்றியல்புகளை இந்நூலிலுங் காணலாம். திருச் சதம், நீத்தல், விண்ணப்பம் போன்ற பகுதிகளிற் காணும் பாவ உணர்ச்சியைப் பிள்ளையவர்கள் நூலி லுங் காணலாம். அவ்வாறான செய்யுள்கள் பல இருப்பினும், காட்டாக ஒன்று கூறின் அவ்வுண்மை புலப்படும்.

பாவிகளிற் பிரதான பாவிகொடும் பாவிமுழுப்
பாவிதுணி கரப்பாவி பகுத்தறிவி னின்மூடப்
பாவிவிசு வாசமிலாப் பாவியதி சண்டாளப்
பாவியான் வந்தடைந்தேன் குமரேச பரிந்தருளே

இறைவன் மக்கள் மேல் வைத்துள்ள பேரன்பு மேற்குறித்த இரு நூல்களிலுமுள்ள பல செய்யுள் களில் மிளிர்கின்றது. எடுத்துக்காட்டாக, ஒவ்வொன் றிலும் ஒவ்வொரு செய்யுள் கூறலாம். யாத்திரிகம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானாடு தொழுதிறைஞ்சு மகிமையெலாம்
புறநிறுவிக்
கானாடு மலர்க்குழலோ கன்னி கருப் பாசயத்துற
றூனாடு முடலெடுத்திங் குயிர்ப்பலிநேர்ந்
துதவினை நீ
ஆநாடற் கெளிதோநின் னன்புநிலை யச்சோவே

திருவாசகம் :

பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
வூனினை யுருக்கியுள் ளொளி பெருக்கி
யுவப்பிலா வானந்தமாய
தேனினைச் சொரிந்து...............

ஈராசிரியருக்கும் பொதுவான இன்னோரியல்பு யாதெனில் 'யாம் பெற்ற இன்பம் இவ்வையம் பெறுக' என்னுங் கொள்கைப்படி இறைவனைத் தேடாதிருக்கும் ஏழை மக்களைத் தம்மைப்போல் இறைவனை நோக்கிச் செல்லுமாறு ஏவுதலேயாகும்.

யாத்திரிகம் :

உடலையு ருக்கிக் குருதிவ டித்திட் டுயிர்தந்த
கடலைநி கர்க்குங் கருணையி ருப்பைக் கருதாமே
புடவிம யிக்கிற் சுழலவி டுக்கும் புலைமார்க்க
நடலையை நச்சிச் சுடலைபு காதீர் நமரங்காள்

திருவாசகம் :

நிற்பார்நிற்க நில்லாவுலகினில்லோ மினி நாஞ்
செல்வோமே
....
பிற்பானின்று பேழ்கணித்தாற் பெறுதற்கரியன்
பெருமானே

வித்துவானவர்கள் நூலில் யாத்திரிகன் பாவச் சுமை தீர்ந்த வரலாற்றைக் கூறும் சுமை நீங்கு படலத்தைப் படிக்கும் போது, பெரிய புராணத்தின் கண்ணப்பனாயனார் புராணம் நினைவுக்கு வரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. நாயனார் முகலியாற்றில் நீராடிக் குடுமித் தேவனை நாடிக் காளத்தி மலையில் ஏறுகின்றனர். ஏற, ஏறத் தம்மேற்றாணர்ந்த பாரங் குறைந்து குறைந்து போவதை அறிகின்றனர். உலகினைத் துறந்து இறைவனை நாடிச் செல்லும் எவ்வுயிரும் பெறுமநுபவம் இஃதாம்.

தமிழ்ப் பெண்கள் அணியின்றி வீடு விட்டு புறத்தே செல்ல விரும்பாதது போல, பாவலருந் தாமெழுதும் பாக்களை அணிகளால் அழகுபடுத்தாது வெளியிட மாட்டார்கள். அவ்வணிகள் யாவற்றிற்கு மன்னை எனக் கூறத்தக்கது உவமையே. பிள்ளை யவர்கள் தமது நூலை அவ்வணியினாற் பெரிதும் அழகுபடுத்தியுள்ளார். சேற்றிடைப் புரள்வது போலும்; ஞமலிதான் கானிறதை மறுத்துந்தின்று தேக்கெறிந்துழல்வது போலும், சேற்றிற்றாமரை முளைத்தென; சிப்பியி னின்று தோற்று வெண்டா ளம்மென.

'நவிநொறும் நூனயம் போலும்' என்னும் வள்ளுவர் கூற்றின்படி இரட்சணிய யாத்திரிகம் என்னும் இம்மாபெருங் காப்பியத்தின் நயத்தையும் இதன் ஆசிரியரின் தூய வாழ்க்கையையும் நாம் அறிய விழையின், நூலை நவில நவில நயப்பெருகும். ஆயினுங் சுருக்கங் கருதி முடிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரம்

வித்துவான் க. வேந்தனார்

பண்டிதர், வித்துவான், சைவப் புலவர் ஆகிய பட்டங்களை வெகு இளமையிலேயே பெற்றுக்கொண்ட வேந்தனார் அவர்கள், ஈழத்துப் பேச்சாளர் வரிசையில் முன்னணியிலே திகழ்ந்தார். சொற் பஞ்சமின்றி, உணர்ச்சி ததும்பும் நடையில் வாலிப உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் வகையிற் பேசும் இயல்பினர். அவருடைய பேச்சிலே பழைய உரையாசிரியர்களுடைய மேற்கோள்கள் அடிக்கடி விரவிவரும். அவருடைய ஆழ்ந்த படிப்புக்கும் ஞாபக சக்திக்கும் இவை சான்றுபகரும். மற்றவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக—அவர்கள் எவ்வளவு பேராசிரியர்களாயிருந்தாலுஞ் சரி—வேந்தனார் மற்றையோர் முடிவுகளை ஒப்புக் கொள்பவர் அல்லர். தம் நுண்மாண் நுழைபுலத்தால் தான் சரி என்று கண்டவற்றையே ஒப்புக் கொள்பவர், 'காலைத் தூக்கி' என்ற அவரது 'அம்மா' பாடல் வெகு பிரசித்தமானது. அவரது கவிதைகள் எல்லாம் அடங்கிய 'கவிதைப் பொழில்' என்னும் நூல் மரபிலே காலூன்றி, புதிய கவிதைச் செய்திகளைச் சொல்வதற்கு எவ்வாறு தமிழை வசக்கி எடுத்தார் என்பதற்குச் சான்று பகரும், உயர்தர வகுப்புப் பாட நூல்களுக்குச் சிறந்த குறிப்புக்கள் எழுதி மாணவர்களின் உள்ளங்களில் இடம்பெற்ற வேந்தனார் அவர்கள், திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமேகலை

கலாநிதி க. செ. நடராசா M.A., Ph.D.

'கிராம ஊழியன்' பண்ணையிலே முளைகொண்டு, 'ஈழகேசரி'யில் வளர்ச்சியுற்று, 'மறுமலர்ச்சி'யை நடாத்தி வெற்றி கண்டு, கவிதா தேவியின் அன்புக்குப் பாத்திரராகி வாழ்ந்தவர் க. செ. நடராசா என்னும் நாவற்குழியூர் நடராசன் அவர்கள். தமிழிலும் ஆங்கிலத்திலும் பட்டம் பெற்று இலங்கை வானொலித் தமிழ்' நிகழ்ச்சி அதிகாரி யாகப் பணிபுரிந்தார். அப்பொழுதும் தமிழா ராய்ச்சிகளிலே ஈடுபட்டு, இலங்கைப் பல்கலைக் கழகத்திலே Ph. D. பட்டம் பெற்றார். ஈழத்திலே நடைபெறும் முக்கியமான கவியரங்குகளுக்குத் தலைமை பூண்டு, அவற்றைத் திறன்பட நடாத் துவதில் வெற்றி கண்டுள்ளார். இவராலேதான் இலங்கை வானொலி கவிதைத் துறையில் ஓரளவு பெருமையடைந்துள்ளது. 'இங்கு கவிஞர் குலம் என்று மலரும்-சொல்லும், எங்கள் பெரு நிதி யம் எங்கவிதையே' என்றுஎக்காளமிடும் 'எங்கள் பெரு நிதியம்', 'சிலம்பொலி' முதலிய நல்ல பல பாடல்களைக் கொண்ட 'சிலம்பொலி' என்னும் கவிதை நூல் க.செ. நடராசாவின் அரிய படைப் பாகும். வானொலித் தலைவராக இளைப்பாறி, அரச திரைப்படக் கூட்டுத்தாபனத்தில், அதன் இயக்குநர் சபை உறுப்பினராகவும் சேவை யாற்றி, கனடா நாட்டின் வாசியாகப் புலம் பெயர்ந்து சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டலகேசி-வளையாபதி

கலாநிதி ச. தனஞ்சயராசசிங்கம்
B A. (Hons), M Litt., Ph.D.

அவர் சொற்பொழிவு ஆற்றுகையில் எடுத்துக்காட்டும் மேற்கோள்கள் அவரது நுண்மாண் நுழைபுலத்தையும், ஞாபக சக்தியையும் வெளிப்படுத்தா நிற்கும். சாதாரணப் படிப்பாளிகளுக்குப் பிரமிப்பை உண்டாக்கும். இலங்கை, அண்ணாமலை, இலண்டன் பல்கலைக் கழகங்களிலே தமிழ் கற்ற கலாநிதி தனஞ்சயராச சிங்கம் அவர்கள், தாம் படித்த நூல்களை ஆராய்ச்சி முறையிலே நன்கு கற்றவர். பல்கலைக் கழகத்துத் திறமை மிக்கப் பேராசிரியர் ஒருவர், நீர்கொழும்புத் தமிழ்விழாவிலே, 'இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பிரிவு ஏதாவது உருப்படியானதொன்றைச் செய்து முடிக்குமென்றால் அது தனஞ்சயராச சிங்கத்தால்தான் முடியும்' என்று பெருமையுடன் அறிவித்தார். தமிழ் இலக்கியத் துறையிலே புதியதொரு ஆழத்தினைக் கொண்டு வந்து சேர்த்த அவர் வித்தியாலங்கார பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராக இருந்த பொழுது, அகால மரணமடைந்தது, தமிழ் இலக்கிய ஆய்வுக்கு ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சு. வே.

சு. வே. என்னும் இரண்டெழுத்துக்களால் ஈழத்து இலக்கிய உலகில் அழைக்கப்படும் சு. வேலுப்பிள்ளை ஒரு பண்டிதராவர். உருவகக் கதை என்ற துறையை ஈழத்தில் அறிமுகம் செய்து வைத்து வெற்றி ஈட்டிய பெருமை இவருடையது. ராஜாஜி அவர்களாற் புகழப்பட்ட 'மணற்கோவில்', வாசகர் பலராற் பாராட்டப்பெற்ற 'வெறுங் கோயில்', 'பாற்காவடி' முதலிய நல்ல சிறுகதைகளையும் எழுதியுள்ளார். மத்தாப்பு என்ற குறுநாவலில் (ஈழத்து ஐந்து எழுத்தாளர் எழுதியது) நடு அத்தியாயத்தை அழகாகப் படைத்துள்ளார். குகன், சந்திரமதி என்னும் உப பாட புத்தகங்களின் ஆசிரியர். திருநெலவேலி ஆசிரிய கலாசாலையிற் பண்டிதமணி 'சி.க.'விடம் படித்தமையால், தெளிவான சிந்தனையும் உயிரோட்டமுள்ள வசனநடையும் கைவரப் பெற்றவர். இவருடைய வர்ணனை அழகுகள், கற்பனை நயங்கள் தனிச் சிறப்புக் கொண்டவை. தனக்கென ஒரு 'பாணி'யை வகுத்துக்கொண்டு, 'இலக்கிய இரசனை'ச் சொற்பொழிவாக இவர் ஈழத்து வானொலியிற் செய்த முப்பதுக்கும் மேற்பட்ட பேச்சுகள் அருமையாக இருந்தன. இலங்கைப் பாட நூற் சபையிலே நீண்டகாலம் பணிபுரிந்து தமிழ்மொழிப் பாடநூல்களின் உரைநடைப் பகுதிகளுக்கு நிரம்பிய செழுமை சேர்த்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பராமாயணம்

பண்டிதர் க. சச்சிதானந்தன்

B. A. (Hons.)

ஈழத்தில் வெளிவந்த மிகச் சிறந்த கவிதைத் தொகுதியான 'ஆனந்தத் தேன்' என்ற நூலின் ஆசிரியரான சச்சிதானந்தன் ஒரு பண்டிதர்; ஆங்கிலப் பட்டதாரி. வடமொழிப் புலமையுள்ளவர். சோதிடக் கலையில் வல்லுநர். 'உலகியல் விளக்கம்' கண்ட நவநீத கிருஷ்ண பாரதியாரின் உத்தம மாணாக்கர். சுவாமி விபுலானந்தரின் கீழிருந்து, எழுத்துத் தொண்டு புரிந்தவர். வெகு இளமைக் காலத்திலேயே, வருணனைச் சிறப்புக் கொண்ட 'அன்னபூரணி என்ற நாவலை எழுதியவர். ஆறு பருவங்களையும், ஆறுவிதமான குணங்களுந் தோற்றங்களும் நடைகளும் உணர்ச்சிகளும் உடைய மாதர்களாகப் பாவித்து அவர் பாடியுள்ள பருவ வர்ணனைகள் அழகுமிக்கவை. மனைவி கட்டிக் கொடுத்த சோற்றுறைவைத்து 'அமிழ்தம்' எனப் பாடிய பாடலும்; வள்ளிக் கொடி, மரவள்ளி, வாழை ஆகிய மூன்றையும் வைத்து அவர் செய்துள்ள கற்பனைப் பாடலும் வாழக்கூடியவை. இவரது 'மாவை முருகன்' ஒரு நல்ல சிறிய நூல். யாழ்-மத்திய கல்லூரியில் ஆசிரியராகவும் பணிபுரிந்த இவர், இலங்கையில் உருவாகிய தமிழ் பாடநூல்களை உருவாக்குவதிலே நிறைவான-நிச்சயமான பங்களிப்புச் செய்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய புராணம

பண்டிதர் தங்கம்மா அப்பாக்குட்டி

ஈழநாட்டிலே பெண் எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் மிக மிகக் குறைவாயிருந்த காலத்தில், இலங்கையிலே பெண் பேச்சாளருக்குத் தனிக் கௌரவத்தினைச் சம்பாதித்துத் தந்து, இன்றும் தலைசிறந்த சொற்பொழிவாளராகத் திகழ்பவர் பண்டிதர் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களாவர். சைவ சித்தாந்தம் நன்கு கைவரப் பெற்று, அதிலும் பட்டம் பெற்றுள்ளார். தங்கம்மா அவர்கள் 'ஆடுகள் குழைதின்பது'போல் எல்லாவற்றையும் மேலோட்டமாகப் படியாது, தகுந்த நூல்களை ஆழமாகக் கற்றுள்ளார். பெரிய புராணமும் திருக்குறளும் அவரின் உயிர் மூச்சுகள். திருவாசகமும் கம்பராமாயணமும் அவருக்கு 'தண்ணீர் பட்டபாடு'. அவர் சொற்பொழிவாற்றுகையில் தட்டுத் தடங்கலின்றி ஆற்றொழுக்கம் போன்ற நடையில் பேசுவார். சொற்பொழிவினிடையே வரும் பாடல்களை அவர் நல்ல முறையில் கேட்போருக்கு விளங்கும் வண்ணம் பாடுகிறார். இது அவர் சொற்பொழிவுக்கு மெருகூட்டுகிறது. நீண்ட காலமாகத் தமிழ்ப் பணியாற்றி, சைவத் தொண்டினைத் தமது வாழ்க்கையாக்கி, சிவ தமிழ்ச் செல்வியாக உயர்ந்துள்ளார். தெல்லிப் பழைத் துர்க்கை அம்மன் கோயிலுக்கு புதிய பக்திப் பரிமாணம் சேர்த்து, சமூக சேவையை பக்தியின் உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்பவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீறாப் புராணம்

ஜே. எம். எம். அப்துல் காதிர்

மட்டக்களப்பின் தென்பாலமைந்த மருதமுனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிற் பயின்ற ஒரு சில முஸ்லிம்களில் ஒருவராவர். தமிழறிஞர் பலருடன் தொடர்பு கொண்டு தம்முடைய தமிழ் அறிவை விருத்தி செய்து கொண்டார். இவருடைய தமிழ் இலக்கிய முயற்சிகள் பரந்து பட்டன.

தமிழின் இனிமையைப் பிழிந்து, அதன் வண்ணக் கோலத்தை மரபு நிலையிற் காட்டும் வகையில் இவருடைய எழுத்து நடை அமையும். மட்டக்களப்பின் தென்பால், விபுலாநந்தருக்கு அடுத்து, தமிழ் வசனநடைக்குப் புதுப் பொலிவு ஊட்டியவர். இதனால், இவருடைய எழுத்து நடை இஸ்லாமிய எழுத்தாளர்களுக்கு ஒரு வழி காட்டியாக அமைந்துள்ளதெனச் சொல்லுதல் தகும். ஆழ்ந்த தமிழ்ப் பற்றும், மார்க்க பக்தியும் உடையவர் ஈழத்தின் பல பாகங்களிலும் ஆசிரியராகப் பணியாற்றி, பல முஸ்லிம் மகாவித்தியாலயங்களின் அதிபராகவும் பணியாற்றியவர். தமிழ் மூச்சினைச் சுவாசித்த இஸ்லாமியப் பெருமகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA LIBRARY 2004-A-26

தேம்பாவணி

மகாவித்துவான் F. X. C. நடராசா

ஈழத்திலே மகாவித்துவான் எனச் சிறப்புப் பெற்று நம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்ப் பேரறிஞர் F. C. X. நடராசா ஆவர். ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தின் துணை மகிமையாளர் என்ற கௌரவத்தினைப் பெற்ற ஒரே தமிழர். 'மட்டக்களப்பு மான்மியம்' என்ற தமது நூலுக்குச் சாகித்திய மண்டலப் பரிசும் பெற்றவர். பழந்தமிழ் நூல்களைச் சேர்த்து வைத்திருக்கும் இவர், 'ஈழமுந் தமிழும்' என்னும் கைநூலில் ஈழத்திற் பிரசுரமான நூல்களின் விபரங்களைத் தந்துள்ளார். மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள், எண்ணெய்ச் சிந்து, கண்ணகி வழக்குரை ஆகியன இவர் பதிப்பித்த நூல்களாகும். இலங்கையின் சரித்திரத்தை போர்த்துக்கீசர் காலம், ஒல்லாந்தர் காலம், ஆங்கிலேயர் காலம் என மூன்று பிரிவாக எழுதியுள்ளார். இலக்கணத்தில் தேர்ந்த ஞானமுள்ளவர். கிழக்கிலங்கையை வசிப்பிடமாகக் கொண்டு மரபு தழுவிய இலக்கிய உணர்ச்சியை வளர்த்து வருகின்றார். தமிழ் இலக்கணத்திலே மகாபுலி. கிழக்கு மாகாணத்தின் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளிலே தமிழாசானாய் பணி ஆற்றி, தம்மொழி அலுவலகத்தின் அட்தியட்சராய்க் கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2004-4-26
LIBRARY.

இரட்சணிய யாத்திரிகம்

கே. ஈ. மதியாபரணம் M. A.

மானிப்பாயைச் சேர்ந்த கட்டுடைவாசியாகிய மதியாபரணம் அவர்கள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிற் கல்வி பயின்று இலண்டன் பல்கலைக் கழகத்து பி. ஏ. பரீட்சையிற் சித்தியெய்தியவர். அதன்பின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் எம்.ஏ. பட்டம் பெற்றார். தமிழ்ப் பேரறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளையிடம் பல ஆண்டுகள் தமிழையும், சைவ நூல்களில் சிலவற்றையும் படித்து முடித்தபின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளரும், இலக்கணக் கடலுமான கந்தசாமிப் பிள்ளையிடம் பல இலக்கண நூல்களை முறைப்படி கற்றுத் தேறினார். அதன் பின்னர் வித்துவசிரோமணி சி. கணேசையர் அவர்களிடம் பதிற்றுப்பத்து முழுவதையும் பாடங் கேட்டார். அமெரிக்க மிஷனைச் சேர்ந்த இவர், திருவாசகத்தைப் பற்றிச் சொற்பொழி வாற்றக் கேட்ட சைவ அறிஞர் பலரே வியந்து புகழ்ந்தனர் கணேசையர் நினைவு மலர், தமிழ் விழா மலர் முதலிய சிறந்த மலர்களிலே இவரது ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன. பல்கலைக்கழக அந்தஸ்துடன் இயங்கிய யாழ்ப் பாணக் கல்லூரியின் தலைமைத் தமிழாசானாய் பல்லாண்டுகள் சேவையாற்றியுள்ளார்.

558998
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2004-4-26
LIBRARY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரம் வித்துவான் க. வேந்தனார் மணிமேகலை கலாநிதி க.செ. நடராசா
குண்டலகேசி-வளையாபதி கலாநிதி ச.தனஞ்சயராசசிங்கம் சீவக சிந்தாமணி சு.வே.
கம்பராமாயணம் பண்டிதர் க.சச்சிதானந்தன் பெரிய புராணம் பண்டிதர் தங்கம்மா
அப்பாக்குட்டி சீறாப் புராணம் ஜே.எம்.எம். அப்துல் காதிர் தேம்பாவணி மகாவித்துவான்
F.X.C. நடராஜா இரட்சணிய யாத்திரிகம் கே. ஈ. மதியாபரணம் சிலப்பதிகாரம் வித்துவான்
க. வேந்தனார் மணிமேகலை கலாநிதி க.செ. நடராசா குண்டலகேசி-வளையாபதி
கலாநிதி ச.தனஞ்சயராசசிங்கம் சீவக சிந்தாமணி சு.வே. கம்பராமாயணம் பண்டிதர்
க.சச்சிதானந்தன் பெரிய புராணம் பண்டிதர் தங்கம்மா அப்பாக்குட்டி சீறாப் புராணம்
ஜே.எம்.எம். அப்துல் காதிர் தேம்பாவணி மகாவித்துவான் F.X.C. நடராஜா இரட்சணிய
யாத்திரிகம் கே. ஈ. மதியாபரணம் சிலப்பதிகாரம் வித்துவான் க. வேந்தனார் மணிமேகலை
கலாநிதி க.செ. நடராசா குண்டலகேசி-வளையாபதி கலாநிதி ச.தனஞ்சயராசசிங்கம் சீவக
சிந்தாமணி சு.வே. கம்பராமாயணம் பண்டிதர் க.சச்சிதானந்தன் பெரிய புராணம் பண்டிதர்
தங்கம்மா அப்பாக்குட்டி சீறாப் புராணம் ஜே.எம்.எம். அப்துல் காதிர் தேம்பாவணி
மகாவித்துவான் F.X.C. நடராஜா இரட்சணிய யாத்திரிகம் கே. ஈ. மதியாபரணம் சிலப்பதிகாரம்
வித்துவான் க. வேந்தனார் மணிமேகலை கலாநிதி க.செ. நடராசா குண்டலகேசி-
வளையாபதி கலாநிதி ச.தனஞ்சயராசசிங்கம் சீவக சிந்தாமணி சு.வே.
கம்பராமாயணம் பண்டிதர் க.சச்சிதானந்தன் பெரிய புராணம் பண்டிதர் தங்கம்மா
அப்பாக்குட்டி சீறாப் புராணம் ஜே திர் தேம்பாவணி மகாவித்துவான்
F.X.C. நடராஜா இரட்சணிய யா ம் சிலப்பதிகாரம் வித்துவான்
க. வேந்தனார் மணிமேக குண்டலகேசி-வளையாபதி
கலாநிதி ச.தனஞ்சயராசசிங் வே. கம்பராமாயணம் பண்டிதர்
க.சச்சிதானந்தன் பெரிய பு அப்பாக்குட்டி சீறாப் புராணம்
ஜே.எம்.எம். அப்துல் காதிர் துவான் F.X.C. நடராஜா இரட்சணிய
யாத்திரிகம் கே. ஈ. மதியாபரணம் வித்துவான் க. வேந்தனார் மணிமேகலை
கலாநிதி க.செ. நடராசா குண்டலகேசி-வளையாபதி கலாநிதி ச.தனஞ்சயராசசிங்கம் சீவக
சிந்தாமணி சு.வே. கம்பராமாயணம் பண்டிதர் க.சச்சிதானந்தன் பெரிய புராணம் பண்டிதர்
தங்கம்மா அப்பாக்குட்டி சீறாப் புராணம் ஜே.எம்.எம். அப்துல் காதிர் தேம்பாவணி
மகாவித்துவான் F.X.C. நடராஜா இரட்சணிய யாத்திரிகம் கே. ஈ. மதியாபரணம் சிலப்பதிகாரம்
வித்துவான் க. வேந்தனார் மணிமேகலை கலாநிதி க.செ. நடராசா குண்டலகேசி-
வளையாபதி கலாநிதி ச.தனஞ்சயராசசிங்கம் சீவக சிந்தாமணி சு.வே.
கம்பராமாயணம் பண்டிதர் க.சச்சிதானந்தன் பெரிய புராணம் பண்டிதர் தங்கம்மா
அப்பாக்குட்டி சீறாப் புராணம் ஜே.எம்.எம். அப்துல் காதிர் தேம்பாவணி மகாவித்துவான்
F.X.C. நடராஜா இரட்சணிய யாத்திரிகம் கே. ஈ. மதியாபரணம் சிலப்பதிகாரம் வித்துவான்
க. வேந்தனார் மணிமேகலை கலாநிதி க.செ. நடராசா குண்டலகேசி-வளையாபதி
கலாநிதி ச.தனஞ்சயராசசிங்கம் சீவக சிந்தாமணி சு.வே. கம்பராமாயணம் பண்டிதர்
க.சச்சிதானந்தன் பெரிய புராணம் பண்டிதர் தங்கம்மா அப்பாக்குட்டி சீறாப் புராணம்
ஜே.எம்.எம். அப்துல் காதிர் தேம்பாவணி மகாவித்துவான் F.X.C. நடராஜா இரட்சணிய
யாத்திரிகம் கே. ஈ. மதியாபரணம் வேந்தனார் மணிமேகலை
கலாநிதி க.செ. நடராசா குண்ட ச.தனஞ்சயராசசிங்கம் சீவக
சிந்தாமணி சு.வே. கம்பராமாய பெரிய புராணம் பண்டிதர்
தங்கம்மா அப்பாக்குட்டி சீறாப் ப்துல் காதிர் தேம்பாவணி
மகாவித்துவான் F.X.C. நடரா ம் கே. ஈ. மதியாபரணம்

558998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org